# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 31 | கதிர் 350 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 25, வியாழக்கிழமை 10.11.2016

பரம்பரை பரம்பரையாக அசைக்கமுடியாத நம்பிக்கையின் இருப்பிடம்
றைனோ
இலங்கையின் நம்பர் வன் கூரைத்தகடுகளுக்கு றைனோ
011 5740728/5740738

## சிவாஜிலிங்கத்தாலேயே தோல்வியுற்றார் ஹிலாரி

அமைச்சர் ராஜித கிண்டல்

கொழும்பு, நவ. 10
வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் சிவாஜிலிங்கம், ஹிலாரி கிளின்டனுக்கு வெற்றி வேண்டி தேங்காய் உடைத்தமையினாலேயே அமெரிக்கத் தேர்தலில் அவர் தோல்வியைத் தழுவினார் என்று, அமைச்சரும் அமைச்சரவை இணைப்பேச்சாளருமான ராஜித >> 21

## ட்ரம்ப் அதிரடி வெற்றி

### அதிர்ச்சித் தோல்வி கண்டார் ஹிலாரி

கொழும்பு, நவ. 10
பன்னாட்டு அளவில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில், யாருமே எதிர்பார்க்காத வகையில் - கருத்துக் கணிப்புக்களைப் பொய்யாக்கி, டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்று அதிர்ச்சி கொடுத்துள்ளார்.
மிகப் பெரும் வித்தியாசத்தில் ஹிலாரியே வெற்றி பெறுவார் என்று ஆருடங்கள் - ஊகங்கள் வெளியிடப்பட்டு >> 25




# மாவீரர் தினத்தை குழப்புவதற்கே கைது நாடகம்

### ரி.ஐ.டி. யின் நடவடிக்கை குறித்து சமூக ஆர்வலர்கள் சந்தேகம்

யாழ்ப்பாணம், நவம்பர் 10
கொழும்பிலிருந்து வந்த பயங்கரவாத தடுப்புப் பிரிவுப் பொலிஸார்(ரி.ஐ.டி) திடீரென 13 இளைஞர்களை யாழ்ப்பாணத்தில் கைது செய்து அவர்களில் சிலர் விடுதலைப்புலிகள் இயக்கத்தை மீளுருவாக்கம் செய்ய முயற்சித்தார்கள் என்று நீதிமன்றத்தில் குற்றம் சாட்டியிருப்பது நவம்பர் மாதத்தில் விடுதலைப் புலிகளின் மாவீரர் நினைவு வாரம் மற்றும் தினம் குடாநாட்டில் கடைப்பிடிக்கப் படுவதைத் தடுப்பதற்கான ஓர் >> 21

## மைத்திரி, ரணில் ட்ரம்புக்கு வாழ்த்து

கொழும்பு, நவ. 10
அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள ட்ரம்புக்கு ஜனாதிபதி >> 25

முச்சந்தி முரளி



108 தேங்காய் போச்சே...

## நெல்சிப் ஒப்பந்தத்தில் வடக்கு ஆளும் கட்சி உறுப்பினர் தலையீடு

அரச அதிகாரி ஒருவர் வாக்குமூலம்

யாழ்ப்பாணம், நவ. 10
நெல்சிப் திட்ட நடைமுறைப்படுத்தலின்போது வடக்கு மாகாண சபை ஆளும் கட்சி >> 25

## இராணுவச் சிப்பாய் உட்பட மூவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், நவ. 10
ஆவா குழுவுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இராணுவச் சிப்பாய் உட்பட 3 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் மேற்கு டச்சு வீதியைச் சேர்ந்த 3 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் இந்திரகுமார் கபிலோசன் என்பவரே >> 06

## கைதாவோர் தனிப் பிரிவில் மறியல்

யாழ்ப்பாணம், நவ. 10
பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட 6 பேரையும் வெலிக்கடைச் சிறைச் >> 21

வித்தியா படுகொலை வழக்கு

## குற்றப்பத்திரத் தாக்கலை விரைவுபடுத்த உத்தரவு

யாழ்ப்பாணம், நவ.10
புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு வன்புணர்வின்பின்னர் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், சந்தேகநபர்களுக்கு எதிரான குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்வதை விரைவுபடுத்துமாறு அரச சட்டவாதிக்கு >> 21

## 220 குடும்பங்கள் காணிகள் வாங்க 88 மில்லியன் ரூபா

கொழும்பு, நவ. 10
நலன்புரி நிலையங்களிலுள்ள காணியற்ற 220 குடும்பங்களுக்கு தனியார் >> 25

## சன்னாவைப் பிடிக்கவே மூத்த சகோதரன் கைது

தாயார் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ.10
பிரசன்னாவை (சன்னா) கைது செய்வதற்காக வந்த பயங்கரவாத விசாரணைப் பிரிவினர், அவரைக் கைது செய்வதற்காகத்தான் மூத்த சகோதரரான சர்மிரனை கைது செய்து அழைத்துச் சென்றனர் என்று அவரது தாயார் குற்றஞ்சாட்டினார்.
கைது செய்யப்பட்ட தனது மூத்த மகன் >> 25

## கைதான மாணவனின் வீட்டில் வாள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 10
வாள்வெட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மாணவனின் வீட்டிலிருந்து வாள், கிறிஸ்கத்தி, கைக்கோடரி என்பனவற்றைப் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் மீட்டுள்ளனர். அந்த மாணவன் உட்பட கைதானவர்கள் விசாரணைக்காகக் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.
நேற்றுமுன்தினம் கைதான தர்சிகன் என்ற மாணவன் யாழ்ப்பாணம் பரமேஸ்வராச் சந்தியை அண்மித்த >> 25

## நேற்றும் ஒருவர் கைது

யாழ்., நவ. 10
பயங்கரவாதப் பிரிவினரால் யாழ்ப் பாணத்தில் நேற்றும் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். >> 06

## விலைக் குறைப்பு, மானியம் பட்ஜெட்டில் கிடைக்குமா ?

பெரும் எதிர்பார்ப்பில் மக்கள்

யாழ்ப்பாணம், நவ. 10
நல்லாட்சி அரசின் இரண்டாவது வரவு-செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.
அத்தியாவசியப் பொருள்களுக்கான >> 21

## இனவாதியின் கருத்துக்கு பதிலளிக்க முடியாது

கஜேந்திரகுமார் குறித்து அமைச்சர் ருவன் தெரிவிப்பு

கொழும்பு, நவ.10
தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஒரு இனவாதி. அவரின் கருத்துக்கு பதிலளிக்கவேண்டிய தேவை எனக்கு >> 24

## வடக்கு—கிழக்கில் 100 விகாரைகள் சீரமைக்கப்படும்

கொழும்பு, நவ. 10
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள 100 விகாரைகளைச் சீரமைக்க அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது. >> 24

## தேர்தலில் தமிழர் வாக்களிக்காது தடுக்கும் ஆயுதமே ஆவா குழு

ராஜபக்ச மீது ராஜித குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 10
வடக்கில் அசாதாரண சூழ்நிலையை ஏற்படுத்தி அடுத்த தேர்தலின்போது அந்த மாகாண மக்களை வாக்களிக்க விடாமல் தடுப்பதற்காக ராஜபக்சவினரால் பயன்படுத்தப்படும் ஒன்றாகவே ஆவா குழு காணப்படுகின்றது.
இவ்வாறு சுகாதார அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
இதன் பின்னணியில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச இருக்கிறார் என்று கூறினோமே ஒழிய, ஒட்டு மொதத >> 25

## இராணுவம், போராளிகளுக்கு ஆவாவுடன் தொடர்பில்லை

பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, நவ.10
யாழ்ப்பாணத்தில் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் ஆவா குழுவிற்கும், இராணுவத்திற்கோ அல்லது முன்னாள் போராளிகளுக்கோ எவ்வித தொடர்பும் >> 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிலாரி பெரு வெற்றி

## கொழும்பில் நடந்த அடையாளத் தேர்தலில்

கொழும்பு, நவ. 10
அமெரிக்கத் தூதரகத்தில் நேற்று நடைபெற்ற அடையாள அமெரிக்கத் தேர்தலில் ஹிலாரி பெரு வெற்றி பெற்றார். இருப்பினும், அமெரிக்காவின் உண்மையான தேர்தல் முடிவு வெளியானதும் ஹிலாரிக்கு ஆதரவளித்த பலரும் சோகம் ததும்பக் காட்சியளித்தனர்.
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் நேற்று வெளியாகின.
கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் தேர்தல் முடிவுகளைப் பார்வையிடுவதற்குச் சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வுக்கு ஊடகவியலாளர்கள், முக்கிய பிரமுகர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.
இதன்போது அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் 'அடையாள' வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.
அமெரிக்கத் தூதரகத்தில் நடந்த இந்த வாக்கெடுப்பின் முடிவில், ஹிலாரி பெரு வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார்.
ஆனால் இதேநேரம், அமெரிக்கத் தேர்தலின் உண்மையான வாக்கெடுப்பு முடிவு வெளியாகியது.
அதில் ட்ரம்ப்பே வெற்றி பெற்றிருந்தார். இதனால் அமெரிக்கத் தூதரகத்தில் நடந்த தேர்தலில் ஹிலாரிக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் சோகமடைந்தனர். (த-5)



# யாழில் கைதானோரில் ராணுவத்தினர் இல்லை

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 10
ஆவா குழு உறுப்பினர்கள் எனும் சந்தேகத்தில் யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களில் கைது செய்யப்பட்டவர்களில் இராணுவத்தினர் எவரும் இருப்பதாக தமக்கு அறிவிக்கப்படவில்லை என்று இராணுவப் பேச்சாளர் ரொசான் செனவிரத்ன தெரிவித்தார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்தச் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
இராணுவத்தில் உள்ள ஒருவர் கைது செய்யப்படுவாராயின் அவரது முகாம் ஊடாக இராணுவத்துக்கு அறிவிக்கப்படுவதே வழமையான செயற்பாடாகும். ஆனால், ஆவா குழுவுடன் தொடர்புடையவர் என இராணுவத்தில் கடமையாற்றும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று எமக்கு இதுவரை எந்தவொரு அறிவித்தலும் விடுக்கப்பட வில்லை.
தற்போது கடமையிலுள்ள ஒருவர் கைது செய்யப்படுவாராயின் அறிவிக்க வேண்டியதே முறைமையாகும். எனினும், இதுவரை (நேற்று மதியம்வரை) அப்படியான எந்தவொரு தகவலும் வரவில்லை என்றார். (த-5)

# ட்ரம்புக்கு வாழ்த்து மழை



வாஷிங்ரன், நவ.10
அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாகத் தெரிவாகிய குடியரசுக் கட்சியின் முக்கிய வேட்பாளர் டொனால்ட் ட்ரம்புக்கு முதலாவதாக தனது வாழ்த்தைத் தெரிவித்தார் ரஷ்ய ஜனாதிபதி புடின். அவரைவிட வேறு பல தலைவர்களும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்த னர்.
அமெரிக்க உறவுக்குத் தீர்வாக ட்ரம்ப் இருப்பார் என நான் நம்புகிறேன். உலக பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு உரிய தீர்வு வழங்குவார். அத்துடன் ரஷ்ய அமெரிக்க உறவை மதிப்பதுடன், பன்னாடுகளின் மத்தியில் உறுதியான உறவுகளை தொடர்ந்து பேணும் சந்தர்ப்பம் அமைந்துள்ளது எனப் புடின் தனது வாழ்த்தில் தெரிவித்தார்.
ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ள சூமா நாட்டு ஜனாதிபதி, ட்ரம்புடன் இணைந்து செயற்பட நாம் தயாராகவுள்ளோம். அத்துடன் உலக பாதுகாப்பையும், நிலமையையும் சிறப்பான விதத்தில் கையாள எனது வாழ்த்துக்கள் எனத் தெரிவித்தார்.
எகிப்து ஜனாதிபதி அப்டெல் பட்டா அல்சிசி, எகிப்து அமெரிக்காவுடன் புதிய உறவை அமைக்கத் தயாராக உள்ளது. இருநாட்டு மக்களுக்கும் சாதகமான உறவாக அமையும் எனத் தெரிவித்தார். அமெரிக்காவுடன் சமீப காலமாக முரண்பட்டுவரும் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி டுடேர்தே, ட்ரம்பின் வெற்றியை அடுத்து இரு தரப்பு சுமுக உறவைப் பேண விரும்புவதாகக் கூறினார். பிரான்ஸ், பிரிட்டன் நாட்டுக் கட்சித் தலைவர்களும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். (த-ம-எ)

# விலக வேண்டும் தயா கமகே

## பிரதி அமைச்சர் ஹரீஸ் பகிரங்க வேண்டுகோள்

அம்பாறை, நவ.10
அம்பாறை மாவட்டத்தில் சிறுபான்மை மக்களின் நேச சக்தியாகவும், இனவாதமற்ற அரசியல் தலைமையாகவும் தம்மைக் காட்டிக்கொண்ட அமைச்சர் தயா கமகே மாயக்கல்லிமலை புத்தர் சிலை விவகாரத்துடன் சிறுபான்மை மக்களின் நம்பிக்கையை இழந்து விட்டார். எனவே, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைமைப் பதவியிலிருந்து அவர் நீக்கப்படவேண்டும் என விளையாட்டுத்துறைப் பிரதியமைச்சரும் மு.கா. பிரதித்தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.
அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
பௌத்த மக்களே வாழாத அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம் பிரதேசத்தில் புத்தர் சிலை நிறுவப்பட்ட விவகாரம் சமூகங்களுக்கிடையே விரிசலை ஏற்படுத்தி, அரசின் நல்நோக்கை சிதறடிக்கும்.
அதிலும் நல்லாட்சி அரசின் அமைச்சர் ஒருவரே இந்தச் சிலைநிறுவுதல் விவகாரத்தைக் கையிலெடுத்து அரசியல் இலாபத்துக்கு முனைந் திருப்பது அதிர்ச்சியையும் வேதனையையும் தருகிறது.
அம்பாறை மாவட்டத்தில் இன சௌன்ஜத்துடன் வாழ்ந்துவரும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே பெரிய பிளவையும் மனக் கசப்பையும் ஏற்படுத்தும் இத்தகைய செயலில் அவர் இறங்கியிருப்பது கண்டிக்கத்தக்க விடயமாகும்.
ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரும் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான தயா கமகே கடந்த பொதுத் தேர்தலின் போது தம்மை இனவாதமற்ற – தமிழ், முஸ்லிம் மக்களின் நேச சக்தியாகக் காட்டிக்கொண்டு வாக்கு வேட்டைக்காக ஆலாய்ப் பறந்து திரிந்தார்.
இவர் மீது நம்பிக்கை கொண்ட முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட சிறுபான்மை மக்கள் அவருக்கு வாக்களித்திருந்தனர். மூவின மக்களிடையேயும் ஓர் உறவுப் பாலமாக அவரை அம்பாறை மக்கள் கருதினர். இவ்வாறு நம்பிக்கை கொண்ட மக்களுக்கு இன்று பேரதிர்ச்சியும் அச்சமும் ஏற்பட்டு, அவர் மீது கொண்டிருந்த நம்பிக்கை தவிடு பொடியாகி யுள்ளது.
எனவே சிறுபான்மை மக்களின் நம்பிக்கையை இழந்துள்ள அமைச்சர் தயா கமகே வகிக்கும் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் பதவியிலிருந்து அவரை நீக்குவதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆவன செய்ய வேண்டும்– என்றார். (த-ய-30)

# அரசுகளால் திட்டமிட்டே கொல்லப்பட்டனர் தமிழர்

## வியாழேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, நவ.10
தமிழர்களாகப் பிறந்த ஒரே காரணத்துக்காகத் தமிழ்மக்கள் கடந்த 30 ஆண்டு காலமாக வடக்கு–கிழக்கு மண்ணில் அரசுகளின் திட்டமிட்ட செயல்களால் இனப்படுகொலை செய்யப்பட்டனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு நாடாளு மன்ற உறுப்பினர் எஸ். வியாழேந் திரன் தெரிவித்தார்.
மட்டக்களப்பு – முறக்கொட்டாஞ்சேனையில் மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
2009 இறுதிக்கட்டப் போரின்போது வடக்கில் தமிழர்களை அதிகளவில் இனப்படுகொலை செய்த இடமாக முள்ளிவாய்க்கால் அடையாளப்படுத் தப்பட்டுத் தற்போது ஐ.நா.வரை தமிழ்த் தரப்பினர் நீதி கோரிச் சென்றுள்ளனர்.
அதுபோன்றே கிழக்கிலும் தமிழர் பிரதேசங்களான மட்டக்களப்பு, சத்துருக்கொண்டான், முறக்கொட்டாஞ்சேனை, கொக்குவில், பிள்ளை யாரடி, பனிச்சையடி, வந்தாறுமூலை, மகிழடித்தீவு போன்ற பல பிரதேசங் களில் 300 இற்கு மேற்பட்ட மக்கள் 1990 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டனர்.
இவை இலங்கையில் போர்க் காலத்தில் நடந்த மிகப்பெரிய இனப் படுகொலைகள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.
முறக்கொட்டாஞ்சேனை பிரதேச காணியிலிருந்து மீட்ட எலும்புத் துகள்கள் பற்றி மக்கள் பல்வேறு சந்தேகங்களை எழுப்புகின்றனர்.
கடந்த 1990இல் காணாமற்போன பலர் முறக்கொட்டாஞ்சேனை இராணுவமுகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில் காணாமற் போயுள்ளதாகவும், அவர்களது எலும்புத் துகள்களாகக் கூட இவை இருக்கலாம் எனவும் சந்தேகம் எழுந்துள்ளது.
இந்நிலையில் 1990ஆம் ஆண்டு செப்ரெம்பர் 5ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமில் 158 பேர்கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டும், பலர் காணாமலும் ஆக்கப்பட்டுள்ளனர்.
தமிழ் மக்கள், தமிழர்களாகப் பிறந்த ஒரே காரணத்திற்காக கடந்த 30 ஆண்டு காலமாக வடக்கு–கிழக்கு மண்ணில் அரசுகளின் திட்டமிட்ட செயலால் இனப்படுகொலை செய்யப்பட்டனர்.
இத்தகைய படுகொலைகள் குறித்து நல்லாட்சி அரசு விசாரணை செய்து குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்படவேண்டும் – என்றார். (த-ய-46)

# தூதரின் கருத்தை நியாயப்படுத்தும் சீன அரசு

இலங்கை தொடர்பில் சீனத் தூதுவர் வெளியிட்ட சர்ச்சைக் குரிய கருத்தை சீன அயலுறவுத்துறை அமைச்சு நியாயப்படுத்தியுள்ளது.
இரு தரப்பு ஒத்துழைப்புகள் தொடர்பாக, சில தவறான புரிதல்கள் மற்றும் தவறான வழி நடத்தல்களுக்கு மாத்திரமே சீனத் தூதுவர் விளக்கம் அளித்துள்ளார் என்று சீன அயலுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் லூ காங் தெரிவித்துள்ளார்.
பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு எழுத்து மூலம் வழங்கிய பதிலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
சீன அயலுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் லூ காங் மேலும் தெரிவித்ததாவது:
ஊடகங்களில் உள்ள நண்பர்களிடமே இலங்கைக்கான சீனத் தூதுவர் சீன – இலங்கை உறவுகள் மற்றும் இரு தரப்பு ஒத்துழைப்புகள் பற்றிய தமது கருத்துக்களைப் பகிர்ந்துள்ளார்.
சீன – இலங்கை ஒத்துழைப்புகள் தொடர்பான தவறான வழிநடத்தல்களால் ஏற்பட்டுள்ள சில தவறான புரிதல்களுக்கு அவர் கருத்தரங்கில் விளக்கமளித்துள்ளார். சீனா– இலங்கை இடையிலான ஒத்துழைப்புகள் பற்றிய நேர்மையான கருத்துப் பரிமாற்றங்கள், பரஸ்பரம் இருதரப்புக்கும் நன்மையளிக்கும் என்பதுடன், நண்பர்களான இருநாடுகளும் ஒன்றின் மீது ஒன்று நம்பிக்கை கொள்வதற்கும் உதவும்–என்றார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் நீர் உட்புகுவதால் அழியும் தமிழர் பாரம்பரிய கிராமங்கள்

## நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, நவ.10

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரம்பரியக் கிராமங்களான பொன்னாவெளி மற்றும் பாலாவி என்பவற்றுள் கடல்நீர் உட்புகுவதால் நிலம் உவர் அடைகின்றது. அதைத் தடுப்பதற்கு கடல் தடுப்பணை அமைத்துத் தர வேண்டும் என்று கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவில் ஏ- 32 வீதியில் இருந்து 8 கிலோமீற்றர் தொலைவில் பொன்னாவெளி, பாலாவி ஆகிய கிராமங்கள் உள்ளன. பாரம்பரிய தமிழ்க் கிராமங்களான அவற்றில் போருக்கு முன்னர் பொன்னாவெளியில் 34 குடும்பங்களும், பாலாவியில் 23 குடும்பங்களும் வாழ்ந்தோம். எமது கிராமம் கால் நடைகள் வளர்ப்பு, தென்னைச் செய்கையென மிகவும் பசுமையாக இருந்தபோதும் அடிப்படை வசதிகள் எவற்றையும் அரசு செய்து தரவில்லை.

8 கிலோ மீற்றர் வீதி கடந்த 40 ஆண்டுகளாகச் சீர் செய்யப்படவில்லை. கிராமத்துக்குள் புகும் கடல்நீரைத் தடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதை அடுத்து 1991ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பால் மரப் பலகை மூலம் ஓர் தடுப்பணை அமைக்கப்பட்டது. அந்த தடுப்பும் சில காலத்தில் அழிவடைந்தது. மீண்டும் கடல் நீர் மாரிகாலத்தில் கிராமத்துக்குள் நுழைந்தது. அதனால் கிராமமே உவர் நிலமாக மாறியது.

நன்னீராக இருந்த கிணறுகள் உவர் நீர்க் கிணறுகளாக மாறுகின்றன. தென்னைகள் உள்ளிட்ட பயிர்கள் அழிவடைந்தன. வயல் செய்கையே மேற்கொள்ள முடியாத நிலமை உள்ளது.

கிராம மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியது. மெல்ல மெல்ல மக்கள் கிராமத்தைக் கைவிட்டு வெளியேறத் தொடங்கும்போதே பலருக்கும் தெரியப்படுத்தினோம். அதிகாரிகள் வரை இந்த விடயங்களை கொண்டு சென்றோம். ஆனால் தீர்வு கிட்டவில்லை.

குறைந்த பட்சம் இரண்டு கிலோ மீற்றர் தடுப்புச் சுவர் அமைத்துத் தாருங்கள் எனக் கேட்டோம். செலவாகும் பணத்தின் கணக்கையும், அதன் மூலம் நன்மை அடையும் மக்களின் எண்ணிக்கையையுமே அதிகாரிகள் கணக்கிட்டனர். தமிழ் மக்களின் பூர்வீக கிராமம் அழிவடைவதை தடுக்க எண்ணவில்லை. இங்குள்ள மக்கள் இடம்பெயர்ந்து நகரை நாடுகின்றார்கள். பொன்னாவெளிக் கிராமத்தில் இன்று ஒரு குடும்பமும் இல்லை. பாலாவியில் மட்டும் இத்தனை நெருக்கடியையும் தாண்டி ஒரேயொரு குடும்பம் மட்டும் வாழ்கின்றது. அதேபோல் கரையூர், பாசையூர் மீனவர்கள் சுமார் 15 பேர் தங்கி நின்று தொழில் புரிகின்றனர். ஒரு தடுப்பணை அமைக்கப்படுமாயின் நிலம் உவர் அடைவது தடுக்கப்படுவதோடு ஏனைய கிராமங்களிற்கும் பரவாமலும் தற்காத்துக் கொள்ள முடியும். மக்களும் குடியிருக்க வருவார்கள்.

பொன்னாவெளியில் 200 ஏக்கர் வயல் நிலங்களும், பாலாவியில் 80 ஏக்கர் வயல் நிலங்களும் உண்டு. இங்கு உள்ள குடியிருப்புக் காணிகள் முதல் வயல் நிலங்கள் வரைக்கும் அனைத்துமே உறுதிக் காணிகள். அதிகாரிகள், மக்கள் பிரதி நிதிகள் அதில் கவனம் செலுத்தி நாங்கள் எங்களது சொந்த காணிகளில் குடியமர்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்று கிராமங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவில் இதனை ஒத்த பிரச்சினையாக பூநகரி வடக்குப் பகுதியில் மட்டும் சுமார் 50 கிலோ மீற்றர் தூரத்துக்கு கடற்கரைகளில் தடுப்பணை கட்டவேண்டும் என கண்டறியப்பட்டுள்ளது. தடுப்பணைகள் இன்மையால் கிராமங்கள் வேகமாக உவர் அடைகின்றன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இந்த ஆண்டு தடுப்பணைத் திட்டத்துக்கு கிடைத்த நிதியில் 7 கிலோமீற்றர் நீளத் தடுப்பணையே கட்ட முடிந்தது. இந்தக் கிராமங்களின் தேவை தொடர்பில் கரிசனை கொள்ள தற்போது அங்கு மக்கள் யாரும் கிடையாது. அதனால் அதை முன்னுரிமைப்படுத்தப்படவில்லை. இது தொடர்பில் மீண்டும் கோரிக்கை முன்வைக்கும் சந்தர்ப்பத்தில் அடுத்து வரும் ஆண்டுகளில் கவனத்தில் கொள்ளமுடியும் - என்று பூநகரிப் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

(ற-21,101)

# சுகாதாரத் தொழிலாளர்கள் போராட்டம் தொடர்கின்றது

யாழ்ப்பாணம், நவ.10

வட பிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தால் முன்வைத்த கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. இன்றும் பணிப்புறக் கணிப்புப் போராட்டம் தொடரும். இவ்வாறு வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் த.றொபின்சன் தெரிவித்தார்.

பல வருடங்களாக சுகாதார தொழிலாளர்களாகப் பணியாற்றும் தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி 127க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் யாழ். மாநகர சபை அலுவலகத்துக்கு முன்னால் கடந்த 7ஆம் திகதி முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

நேற்றுக் காலை யாழ். மாநகர ஆணையாளர், மாநகர சபை பிரதம செயலாளர், மற்றும் வட மாகாண முதலமைச்சரின் செயலாளர் ஆகியோருக்கும், வட பிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் தலைவர், செயலாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் அடங்கலான ஒரு குழுவினருக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

“இன்று (நேற்று) இடம்பெற்ற கலந்துரையாடலில் எங்களுக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை. தற்போது தற்காலிக தொழிலாளர்கள் 130 பேர் இருக்கிறார்கள். மூப்பின் அடிப்படையில் 15 பேர், 20 பேராக நியமனம் கொடுக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. நாங்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அதை விட நியமனத்தை அதிகப்படுத்தி கொடுப்பது என்றால் நோய்வாய்ப்பட்டிருப்பவர்களுக்கு கட்டாய ஓய்வூதியம் வழங்கினால் அந்த வெற்றிடத்தை கொடுக்கலாம் என்று சொன்னார்கள். நோய்வாய்ப்பட்டவர்களுக்கு எப்போது கட்டாய ஓய்வூதியம் வழங்குவது?, அதற்கு எத்தனை மாதங்கள் ஆகும்?.

நாங்கள் கேட்கும் ஒரே கோரிக்கை அத்தனை பேருக்கும் ஒரே தடவையில் நியமனம் வழங்கப்பட வேண்டும் என்பது தான். மூப்பின் அடிப்படையில் வேலை செய்தவர்களின் பெயர் விவரத்தைத் தாருங்கள் பகுதி பகுதியாக நியமனம் கொடுக்கலாம் என்று அவர்கள் சொல்கிறார்கள். அப்படி மூப்பின் அடிப்படையில் பார்க்கப் போனாலும் 127 பேரும் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு சாதகமானதையும், மக்களுக்கு ஏற்படும் சுகாதாரப் பிரச்சினைகளையும் பற்றிச் சிந்திக்கிறார்களே தவிர தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பற்றி சிந்திப்பதாகத் தெரியவில்லை. எங்களுக்குத்திருப்தியானபதில்கிடைக்காமையால் எங்கள் போராட்டத்தை தொடர்ச்சியாக மேற்கொள்ள உள்ளோம் - என்று வட பிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் த. றொபின்சன் தெரிவித்தார்.

(ற-7)

# முல்லைத்தீவில் தேர்தல்; அமைச்சரவை அனுமதி

கொழும்பு, நவ. 10

இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட, முல்லைத் தீவு மாவட்டத்தின் புதுக் குடியிருப்பு மற்றும் கரைதுறைப் பற்றுப் பிரதேச சபைகளுக் குத் தேர்தலை மீண்டும் நடத்துவதற்குத் தேவையான சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதிவழங்கியுள்ளது.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக, அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல் 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. இதன்போது மீள்குடியமர்வைக் காரணம் காட்டித் தேர்தலை ஒத்திப்போடுமாறு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதற்கு அமைவாகத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

மீள்குடியமர்வு பூர்த்தியடைந்த பின்னர் 2014ஆம் ஆண்டு மீளவும் தேர்தல் நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. தேர்தலுக்கு முதல் நாள், நீதிமன்றம் மீளவும் தடை உத்தரவு பிறப்பித்திருந்தது. 2011 ஆம் ஆண்டு வேட்புமனுத் தாக்கலின் அடிப்படையில் தேர்தல் நடத்த முடியாது என்று நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

‘குறித்த தேர்தலைக் கலப்புத் தேர்தல் முறையில் நடத்துவதற்கும் தேவையான வகையில் சட்டத்தில் மாற்றங்களைச் செய்து சட்டமாக்குவது தொடர்பில் சட்டத்தரணிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்கு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபாவினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி யுள்ளதாக அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

(த-5)

# கான்ஸ்டபிள் வீட்டில் தங்க நகைகள் திருட்டு

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரது வீட்டிலிருந்து சுமார் இரண்டு லட்சத்து 35ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் களவாடப்பட்டிருப்பதாக மொனராகலைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டின் உரிமையாளரான கான்ஸ்டபிள் தொழில் நிமித்தம் சென்றிருந்தார். அவரின் மனைவி அலுவல் நிமித்தம் வெளியில் சென்றிருந்த வேளையிலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. வீட்டு ஜன்னல் கதவை உடைத்து அலுமாரியிலிருந்த நகைகள் திருடப்பட்டுள்ளன. இது தொடர்பில் மொனராகலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(த-ய-41)

# யாழ். குடாநாட்டில் சில பகுதிகளுக்கு இன்று மின்வெட்டு

யாழ்ப்பாணம், நவ.10

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வியாழக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரையும் யாழ். குடாநாட்டில் சில இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.

உடுப்பிட்டி வி.சி, நாச்சிமார் கோயிலடி, இலந்தைக்காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி ஆலடி, நெடியகாடு, வல்வெட்டித்துறை, வெள்ள றோட், உடுப்பிட்டி மகளிர், உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோயிலடி, கம்பர்மலை பாரதிதாசன், பழைய பொலிஸ் நிலையம், உடுப்பிட்டி வாசிகசாலை, பொக்கணைச் சந்தி, கெருடாவில், தொண்டமானாறு, மயிலியதனை, சிதம்பராக் கல்லூரி, அச்செழு ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்படும் என்று அவர் தெரிவித்தார்.

(வ-10)

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் இன்று பிற்பகல் 1.30 மணியளவில் போக்குவரத்து விதிமுறைகள் மற்றும் வீதி விபத்துக்களைத் தடுப்பது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இதில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட முச்சக்கர வண்டிச் சாரதிகளைக் கலந்து கொள்ளுமாறு பிரதேச சபை செயலாளர் யு. ஜெலீபன் கேட்டுள்ளார்.

(வ- 7)






தரம் 06 அனுமதிப்பரீட்சை
யா/யூனியன் கல்லூரி
2017 இன் தரம் 6 ஆம் வகுப்பிற்கு விண்ணப்பித்தவர்களுக் கான அனுமதிப்பரீட்சை 20.11.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையில் நடைபெறும். உரிய அனுமதி அட்டை யுடன் பெற்றோர்/பாதுகாவலர் உடன் மாணவர்கள் பரீட்சைக்கு சமுகமளிக்கவும்.
அதிபர்
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.
தொடர்பு - 077 617 1397
(அ/23356)(7.19.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## கேள்வி அறிவித்தல் -2017

வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள். 2017.01.01ஆம் திகதிதொடக்கம் 2017.12.31 ஆம் திகதிவரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி** :- 2016.11.10 - 2016.11.23 பி.ப 03.00 மணிவரை.
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி** :- 2016.11.24 ந.ப 12.00 மணிவரை.
**கேள்விதிறக்கும் திகதி** :- 2016.11.24 ந.ப 12.30 மணி.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை **செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்** என்ற முகவரிக்கு அரக்குமுத்திரையிட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்** எனும் முகவரியிட்டுப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

1. கேள்விப் பத்திரம் / பத்திரங்கள் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் **அடையாள அட்டையையும்** அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டுவருவதுடன் தாம் வதியும் இடத்தின் **வதிவிடச் சான்றிதழையும்** சமர்ப்பித்தல் வேண்டும்.
2. சங்கானை மரக்கறிச் சந்தைக்கு விண்ணப்பப்பத்திரம் பெற்றுக்கொள்ள விரும்புவோர் (கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள்) ஏதாவது ஒரு வங்கியில் தங்கள் பெயரில் 2016 நவம்பர் முதலாம் திகதி அல்லது அதற்கு முன்பிருந்து கேள்விப்பத்திரம் பெறும் போது ரூபா 200,000.00 இற்கு குறையாது வைப்பில் உள்ளதற்கான ஆதாரமாகவங்கிப் பிணைமுறி/ வைப்புச் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும். சித்தியடையாத கேள்விதாரரது வைப்புச் சான்றிதழ் கேள்விதிறந்த மறுநாள் மீளளிக்கப்படும். சித்தியடைந்த கேள்விதாரரது வங்கிப் பிணைமுறி/ வைப்புச் சான்றிதழ் கேள்வித் தொகையின் $^1/_3$ பகுதியை அலுவலகத்தில் செலுத்தி ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் மீளளிக்கப்படும்.
3. சங்கானைமரக்கறிச் சந்தைக்கான மின்சாரக் கட்டணம் 01.01.2017 - 31.12.2017 வரையான பன்னிரண்டு மாதங்களுக்கும் குத்தகையாளரால் செலுத்தப்படல் வேண்டும்
4. சங்கானை மரக்கறிச்சந்தை தவிர்ந்த ஏனைய சந்தைகள் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன் குத்தகைக்கு வழங்கப்படும்
5. சங்கானை நவீன மீன்சந்தையில் கோழி இறைச்சிக்கடைக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளதால் இச்சந்தை வளாகத்திற்குள் கோழி விற்பனை, கோழி உரித்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. மீன் வெட்டும் இடத்தின் தூய்மையை குத்தகைகாரர் பொதுசுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தலுக்கமைய பராமரிப்பதுடன் தொடர்ந்து இதனைக் கண்காணித்து நடைமுறைப் படுத்தல் வேண்டும். மீன் வெட்டுபவர்களிடம் பணம் அறவிடலாம்.
7. பொன்னாலைச் சந்தை, பல்லசுட்டிசந்தை என்பவற்றைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் இவற்றை நடத்துவதற்குரிய இடத்தினை தற்போதுசந்தை இயங்கும் இடத்திலிருந்து 500m சுற்று வட்டத்தினுள் பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் சிபாரிசிற்கமைய தாமே தெரிவு செய்தல் வேண்டும்.
8. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
9. ஆகக் குறைந்தகேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்விவைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
10. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளருக்குப் பூரண அதிகாரம் உண்டு.
11. தெரிவுசெய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் $^1/_3$ பகுதியை 01.12.2016 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்திச் சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ளவேண்டும்.
12. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம்.
13. ஒப்பந்தகாரர் குத்தகை ஏற்கும்போது உள்ளகட்டடத்தின் தரம், கட்டட அமைப்புக்கள் யாவும் உரியமுறையில் பேணப்பட்டுக் குத்தகைக்காலம் பூர்த்தியடையும்போது மீண்டும் அதேநிலையில் கையளித்தல் வேண்டும்.
14. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்குப் பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இடல் வேண்டும்.
15. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் வியாபார நோக்கத்திற்காக கொண்டுவரும் பொருள்களின் விற்பனைவிலையில் 4% உம், மீன் கிலோ ஒன்றிற்கு ரூபா 5.00 உம், வியாபார நோக்கத்துக்கு வரும் லொறிக்கு ரூபா 30.00 உம், வியாபாரிகளுக்கான இடவரி தொடர்பில் (மரக்கறிச் சந்தை,மீன் சந்தை,மீன் வெட்டும் இடம்) ஊடு ஒன்றிற்கு ரூபா 30.00 உம் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புக் கட்டணம் ரூ 5.00, மோட்டார் சைக்கிள் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 10.00 இனையும் அறவிடலாம். மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் அறவிடக் கூடாது.
16. துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புடன் சந்தையைக் குத்தகைக்குப் பெறுபவர்கள் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புக் கட்டணம் என்றசிட்டையைக் கொடுத்து அதற்குரிய பணத்தை அறவிட முடியும். சந்தைக்கு வெளியே எந்த ஒருகட்டணத்தையும் அறவிட முடியாது.
17. சந்தைச் சுற்றாடலில் இருந்து 500m சுற்றுவட்டாரத்தில் மீன், மரக்கறி, கோழி என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
18. காலத்திற்கு காலம் அரசாங்க சுற்றறிக்கைகள் மூலம் அறவிடுமாறு அறிவிக்கப்படும் வரிகள் ( VAT , NBT) அறவிடப்படும்.
19. 2015.11.09 ஆம் திகதிய வடக்குமாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பதின்மூன்று விடயங்களும் கருத்திற் கொள்ளப்படவேண்டும்.
20. மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலகநேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**2017 ஆம் ஆண்டுசந்தைகள், இறைச்சிமற்றும் கருவாட்டுக் கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | சந்தைகள் (துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புநிலையத்துடன்), இறைச்சிக்கடைகள் கருவாட்டுக் கடைகள் | மாதவாடகை சபைக்கு செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT, NBT நீங்கலாக) | கேள்விப் பிணைப்பணம் மீளளிக்கக் கூடியது | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT, NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | **சங்கானை உப அலுவலகம்** | | | | |
| 01 | சங்கானைமரக்கறிச்சந்தை(துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புநிலையம் தவிர்த்து) | | 6,491,000.00 | 15,000.00 | 1,000.00 |
| 02 | சங்கானை நவீனமீன் சந்தை | | 1,430,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 03 | சங்கானை கருவாட்டுக்கடை | 1,500.00 | 12,100.00 | 1,000.00 | 250.00 |
| 04 | சங்கானைகோழி இறைச்சிக்கடை இல 01 | 1,500.00 | 385,000.00 | 3,000.00 | 500.00 |
| 05 | சங்கானைகோழி இறைச்சிக்கடை இல 02 | 1,500.00 | 385,000.00 | 3,000.00 | 500.00 |
| | **சுழிபுரம் உப அலுவலகம்** | | | | |
| 01 | சத்தியகாடுசந்தை | | 855,800.00 | 5,000.00 | 1,000.00 |
| 02 | பொன்னாலைசந்தை (மூளாய்) | | 243,362.85 | 2,000.00 | 750.00 |
| 03 | பல்லசுட்டிசந்தை | | 55,220.00 | 1,000.00 | 250.00 |
| 04 | தொல்புரம் மத்தியசந்தை | | 9,900.00 | 500.00 | 250.00 |
| | **வட்டுக்கோட்டை உப அலுவலகம்** | | | | |
| 01 | சங்கரத்தைசந்தை | | 125,000.00 | 3,000.00 | 750.00 |
| 02 | வட்டுக்கோட்டைபொதுச்சந்தை | | 20,000.00 | 1,000.00 | 500.00 |
| 03 | சங்கரத்தைகோழி இறைச்சிக்கடை | 100.00 | 70,400.00 | 1,000.00 | 500.00 |
| | **அராலி உப அலுவலகம்** | | | | |
| 01 | அராலி,செட்டியார்மடம் சந்தை | | 17,600.00 | 500.00 | 250.00 |

**தலைமை அலுவலகம்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை,சுழிபுரம்.**
**10.11.2016**

(சுவை/யக40)

**திருமதி குணவதி சண்முகலிங்கம்,**
**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை,சுழிபுரம்.**

# கும்பாபிசேகம்

யாழ்ப்பாணம், நவ.10
யாழ். அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்தி பிள்ளையார் ஆலய மகா கும்பாபிசேகக் கிரியைகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகின. நாளை மு.ப. 9 மணிக்கு மகா கும்பாபிசேகம் நடைபெறும். (ற)

## வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் Samsung Singhagiri (Pvt) Ltd
இற்கு

- Field Assistant (Light Vehicle Licence)
- Showroom Assistant
- Sales Assistant

வயது - 18-26 (ஆண்கள் மட்டும்)

**077 706 4368**

## University of Jaffna

***Professor Alagaiah Thurairajah Memorial Lecture 2016***
**On**
**Ethics for University Teachers**

Speaker :- Prof.S.B.S.Abayakoon
Senior Professor in Civil Engineering,
University of Peradeniya,Peradeniya.
Place :- Kailasapathy Auditorium,
University of Jaffna.
Date :- 10.11.2016
Time :- 3.00 p.m

All are cordially invited.

(C/2333)(11,17,21)

- Registrar -

## வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி
## பாரவூர்தி இல.42/3568 (அசோக் லேடன்) விற்பனை

**சங்கத்துக்குச் சொந்தமான நல்ல நிலையிலுள்ள பாரவூர்தி இல. 42/3568 விற்பனைக்கான மூடிய கேள்வி கோரப்படுகின்றது.**

- பின்வரும் விவரங்கள் அடங்கிய சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப் பத்தைப் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக சமர்ப்பிக்கலாம். (முழுப்பெயர். முகவரி. கேள்வித்தொகை. தொலைபேசி இலக்கம்)
- பாரவூர்தியை பார்வையிட விரும்புவோர் வேலை நாள்களில் காலை 8.30 - 5.00 மணிவரை பார்வையிடலாம்.
- இயக்குநர் சபையின் தெரிவே இறுதியானதாகும்.
- விண்ணப்ப முடிவு திகதி:- 25.11.2016 (நண்பகல் 12 மணி) அன்று பிற்பகல் 2 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விகாரர் அல்லது அவரது பிரதிநிதி சமுகமளிக்கலாம்.
- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் முழுமையாகப் பணம் செலுத்தி ஒருவாரத்துக்குள் வாகனத்தை எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**
**பொதுமுகாமையாளர்**
**வலி.கிழக்கு (தெ.ப)ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.**
***(08.11.2016ஆம் திகதிய இயக்குநர்சபை தீர்மானப்படி)***

**பொதுமுகாமையாளர்,**
**வலி.கிழக்கு (தெ.ப) ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.**

## வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி
## பதவி வெற்றிடம்

**பதவி** :- விற்பனை உதவியாளர்
**சம்பள குறியீடு** :- 308/ 17 (165/88)
**சம்பள அளவுத்திட்டம்** :- 12800 - 14900
100X10 - 110X10 (13/2015)
**வயதெல்லை** :- 18 - 45 (சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது)
**விண்ணப்ப முடிவு திகதி** :- 25.11.2016

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:-**

அ) கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தர சான்றிதழ்
அல்லது
ஆ) 8ஆம் வகுப்பு சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

- விண்ணப்பப் படிவத்தினை ரூபா 10.00 செலுத்தி தலைமைக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.
- விண்ணப்பத்துடன் பிறப்புச் சான்றிதழ், கல்விச்சான்றிதழ், அனுபவ சான்றிதழ் ஆகியவற்றின் போட்டோப்பிரதி இணைக்கப்பட வேண்டும்.
- தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் வேண்டும்.

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:**
**பொதுமுகாமையாளர்**
**வலி.கிழக்கு (தெ.ப)ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.**
***(08.11.2016ஆம் திகதிய இயக்குநர்சபை தீர்மானப்படி)***

**பொதுமுகாமையாளர்,**
**வலி.கிழக்கு (தெ.ப) ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழில் கற்கை நெறிகளின் போதனாசிரியர் ஆள்சேர்ப்பு

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் வடக்கு மாகாணத்திலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு கற்கைநெறிகளைக் கற்பிக்கும் போதானாசிரியர்கள் வெற்றிடங்களுக்கான ஆள்சேர்ப்பு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவ்வாறு இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை உதவிப் பணிப்பாளர் கு. நிரஞ்சன் தெரிவித்தார்.

குடிசார் படவரை கலைஞர், மரவேலைதொழில்நுட்பவியலாளர், அழகுக்கலை மற்றும் சிகையலங்கரிப்பவர், காய்ச்சி ஒட்டுபவர், விவசாய இயந்திர உபகரணங்கள் திருத்துனர், வெதுப்பக உற்பத்தியாளர், சமையலாளர், முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி, கட்டட நிர்மாண உதவியாளர், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், தோல்பொருள் உற்பத்தியாளர், மின்மோட்டர் மீள் முறுக்குநர், நீர்க்குழாய்பொருத்துநர், மின்இணைப்பாளர், தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர், டீசல் வகன் இயந்திரம் திருத்துனர் ஆகிய கற்கை நெறிகளை கற்பிக்க கூடியவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கல்வித்தகைமை**

கா.பொ.த சாதாரண தரத்தில் ஓர் அமர்வில் தமிழ் மற்றும் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். இலங்கை மூன்றாம் நிலைதொழிற்கல்விஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப அல்லது தொழிற்பயிற்சி நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற தேசிய தொழிற் தகைமை மட்டம் 05, அல்லது அதற்கு சமமான தகைமையை பெற்றிருத்தல், தொழிற் தகைமையாவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் குறித்த துறையில் ஆகக்குறைந்தது ஒருவருடம் உள்நாடு அல்லது வெளிநாடு கற்பித்தல் அனுபவம் இருத்தல் வேண்டும் என்றும்–18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்குமேற்படாமலும் இருத்தல் வேண்டும்என்றும்–குறிப்பிடப்பட்டுள்ளது. சுயவிவரக்கோவை மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து உதவிப்பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, முதலாம் மாடி, வீரசிங்கம்மண்டபம், இல.12 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எதிர் வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும் என்றும்- இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை உதவிப் பணிப்பாளர் கு. நிரஞ்சன் தெரிவித்தார்.(ற–7)

# தென்பகுதி மீனவர்களது அத்துமீறலை கண்டித்து முசலி மீனவர்கள் பேரணி

மன்னார், நவ.10

தென்னிலங்கை மீனவர்களின்மிதமிஞ்சியவருகை, அவர்களின் தொழில் முறைகளால் எதிர் நோக்கும் பிரச்சினைகள், தென்னிலங்கை மீனவர்களை நிரந்தரமாக குடியமர்த்தி தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் என்பவற்றைக் கண்டித்து நேற்று மன்னார் முசலி பிரதேச மீனவர்கள்கண்டனபேரணி நடத்தினர்.



முசலி பிரதேச மீனவ சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட கண்டனப் பேரணி முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்குப்படையான் பிரதான வீதியில் ஆரம்பமாகி பிரதான வீதியூடாக சென்று முசலி பிரதேச செயலகத்தில் முடிவுற்றது.

பேரணியில் கலந்து கொண்ட தமிழ், முஸ்லிம் மீனவர்கள் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பியவாறும் சென்றனர்.

கடந்த காலங்களில் போர் காரணமாக மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச மக்கள் இடம் பெயர்ந்து மாவட்டத்தின் பல பகுதிகளிலும், ஏனைய மாவட்டங்களிலும்வாழ்ந்துள்ளனர்.தற்போது கட்டம் கட்டமாக மீள் குடியமர்கின்றனர். அவர்களில் சுமார் 75 வீதமானவர்கள் மீன்பிடித் தொழிலையே நம்பியுள்ளனர். கடந்த காலங்களிலும், தற்போதும் தென்னிலங்கை மீனவர்களின் மிதமிஞ்சிய வருகை, அவர்களின் தொழில் முறைகள் என்பவற்றால் நாம் தொடர்ச்சியாக பாதிக்கப்படுகின்றோம்.

இரு மீனவ சமூகங்களுக்கும் இடையில் இன முரண்பாடுகள் அவ்வப்போது ஏற்படுகின்றன. ஏற்கனவே முசலி பிரதேச மீனவர்களால் கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட இருந்தபோது முசலி பிரதேச செயலாளரின் கோரிக்கைக்கு அமைவாக எமக்குப் பல உறுதி மொழிகள் தரப்பட்டன. அவை எவையும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

தற்போது தென்பகுதி மீனவர்களை 'பாம்படிச்சான் ஓடை' என்ற பகுதியில் குடியேற்றப்படவுள்ளனர் என்று தெரிய வருகின்றது. அவர்களை குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. அவர்கள் குடியேறும் பட்சத்தில் எமது மீனவர்களுக்கு தொழில் பாதிப்புக்கள், முரண்பாடுகள், சிறு மீனவர்களின் வாழ்வாதார பாதிப்புக்கள் ஏற்படும். எதிர்காலத்தில் எமது மீன்பிடி இறங்கு துறைகளையும் இழக்க வேண்டி ஏற்படும்.

முசலி பிரதேசத்தில் உள்ள கடற்கரையோரங்களில் உள்ள இறங்கு துறைகள் சிலவற்றை கடற்படையினர் ஆக்கிரமித்துள்ளனர். அதனால் எமது பிரதேச மீனவர்கள் தொடர்ந்தும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

முசலி பிரதேசத்தில் தென்னிலங்கை மீனவர்களின் வருகையையும், அவர்களை குடியேற்றும் நடவடிக்கைகளையும் எம்மால் ஏற்க முடியாது. குறித்த செயற்பாடுகளை நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

மீனவர்களுடைய கோரிக்கை தொடர்பான மனு முசலி பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது.

அங்கு வந்திருந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதி அவைத்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், வடமாகாண சபை உறுப்பினர் மருத்துவர் ஜீ.குணசீலன், வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் ஆகியோரிடமும் மீனவர்கள் தமது கோரிக்கை அடங்கிய மனுவைக் கையளித்தனர். (ற–21,56)

# இலங்கையின் தாராதேவி விவாதம் ஞாயிறன்று

யாழ்ப்பாணம், நவ.10

சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தின் 40 ஆவது நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இலங்கையின் 'தாராதேவி' என்ற தலைப்பில் சாந்தி ஜெயவர்த்தனா உரையாற்ற உள்ளர் என ஆவணக் காப்பகத்தின் முகாமையாளர் விமலா வேல்தாஸ் தெரிவித்தார்.

இலக்கம் 199, கோவில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள சமகாலக் கலை, கட்டடக்கலை, மற் றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தில் நண்பகல் 12 மணிக்கு நிகழ்வு நடைபெறவுள்ளது.

இலங்கையின் பௌத்த வரலாறு, கலை–கட்டடக்கலை வரலாற்றுக் கருத்தாடலில் தாரா தேவி எனும் வெண்கலச் சிற்பம் பெரும் புதிராகவே உள்ளது. சாந்தி ஜெயவர்த்தனா தாரா தேவிக்குப் பின்னால் கட்டமைக் கப்பட்டிருக்கும் பொய்களை அவிழ்ப்பதனூடாக அதன் மூலங் கள், அடிப்படைகளை விவாதிக்கவுள்ளார். நிகழ்வில் கலை ஆர்வலர்கள், சிற்பிகள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ற–7)

**தேவை**

யாழ் நகரில் உள்ள கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு தொலைபேசி திருத்துநர் தேவை.

**075 227 5156**

**VACANCY**

Purchasing Officer Needed For Our Hotel
Requirements - Minimum 1 Year Experience Age Below -30
Motor Bike License

The Thinnai
86, Palaly Road, Thirunelveli, Jaffna
076 752 8628
Send Your Cv's to hr@thethinnai.com

**பெயர்மாற்றம்**

துன்னாலை தெற்கு, கரவெட்டியில் வசித்து தற்போது இல.117/122,55 ஆவது ஒழுங்கை, மீகோட்டமுல்ல, கொலன்னாவ என்ற முகவரியில் வசிக்கும் **பொன்னுத்துரை ரஞ்சினி** ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை **பாத்திமா சேயினாப்** என மாற்றியுள்ளேன் எனவும் இனி வரும் காலங்களில் இப் பெயரையே பாவிப்பேன் எனவும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பொது மக்களுக்கு அறியத் தருகிறேன்.

**பாத்திமா சேயினாப்**

# விபத்தில் உதவாத ஓட்டோ சாரதிகள் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.10

ஓட்டோ தரிப்பிடத்துக்கு அண்மையில் இடம்பெற்ற விபத்தில் காயப்பட்டவருக்கு உதவி செய்யாத ஓட்டோ சாரதிகள் மூவர் மீது யாழ். மாவட்ட ஓட்டோ உரிமையாளர் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்று அதன் செயலாளர் சி.கிரிதரன் தெரிவித்தார்

சில தினங்களுக்கு முன்னர் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்தார். விபத்து நடைபெற்ற இடத்துக்கு அண்மையாக ஓட்டோ தரிப்பிடம் ஒன்று உள்ளது. அங்கு தரித்து நின்ற மூன்று ஓட்டோக்களின் சாரதிகளில் எவரும் விபத்தில் காயமடைந்தவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முன்வரவில்லை என மறுநாள் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகின.

அதுகுறித்து ஓட்டோ உரிமையாளர்கள் சங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

குறித்த ஓட்டோ சாரதிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. சரதிகள் மூவருக்கும் மூன்று நாள்கள் தற்காலிகமாக சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளனர். விபத்து நடைபெற்ற பிரதேசத்தில் அனுமதியின்றி ஓட்டோக்கள் தரித்து நிற்கின்றன என்றும், அதனால் தாம் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றோம் என்றும் ஓட்டோ சாரதிகள் தெரிவித்தனர். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட சாரதிகளுக்கு அறிவுறுத்தியும் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டது. (ற–8)

**மணிவிழா வாழ்த்துக்கள்**

எமது பாடசாலையில் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் 14 வருட காலம் கடமையாற்றி இன்றுடன் (10.11.2016) தனது பணியில் இருந்து ஓய்வு பெறும்

திருமதி
**சிவலோகநாயகி நவபாலன்**
**(B.A, PGDE) (SLTS-1)**



அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் அவரின் ஓய்வுக்காலம் சிறப்புடன் அமைய வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
**யா/ கச்சாய் அ.த.க. பாடசாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல் 30க்கு முன்னர் உள்ளூராட்சித் தேர்தல்

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, நவ. 10

ஏப்ரல் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேர்தல் ஆணையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

நடப்பு ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியலை டிசெம்பர் மாத இறுதியில் வெளியிடுவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்படுகின்றமையின் காரணமாக மக்கள் தேர்தல் திணைக்களத்தின் மீது அதிருப்தியடைந்து வருகின்றனர்.

அதற்கு ஏற்றாற்போல் சில நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றமையை மறுக்க முடியாது. தேர்தல் திணைக்களம் சுயாதீனமானதுதான். ஆனால், அதற்கும் வரையறைகள் உள்ளன.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் தற்போது மாத்திரம் தாமதமாகவில்லை. பல சந்தர்ப்பங்களில் பிற்போடப்பட்டுள்ளன. 1969ஆம் ஆண்டு முதல் 1979 ஆம் ஆண்டுவரை இலங்கையில் உள்ளூராட்சிச் சபைகளே இயங்கவில்லை. அந்தக் காலப் பகுதியில் எந்தவொரு தேர்தலும் நடைபெறவில்லை. முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பில் 1968 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை தேர்தல் நடைபெறவில்லை. கிழக்கு மாகாணத்தில் ஒரு சில பகுதிகள் தவிர்ந்து ஏனைய உள்ளூராட்சிச் சபைகளுக்கு 2008 ஆம் ஆண்டே கடைசியாக தேர்தல் நடைபெற்றுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்தி விட்டு, கால எல்லை முடிவடைய உள்ள வடமத்திய மற்றும் கிழக்கு, சப்ரகமுவ மாகாணங்களின் தேர்தலையும் நடத்துவதுற்கு எதிர்பார்க்கின்றோம்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்த எல்லை நிர்ணயப் பணி மற்றும் பெண்களின் அங்கத்துவ வீதம், தேர்தல் முறை மறுசீரமைப்புப் பணிகள் நிறைவடைய வேண்டியுள்ளன. நாடாளுமன்றம் பழைய முறையில் தேர்தலை நடத்தும்படி அறிவித்தால் தேர்தலை நடத்த முடியும். இந்த விடயத்தில் நாடாளுமன்றம் அல்லது நீதித்துறை கையில்தான் அதிகாரம் உள்ளது.

தேர்தலை எங்களால் நடத்த முடியும். ஆனால், அதற்கான அறிவிப்பை வெளியிடும் இறைமை நாடாளுமன்றத்திற்கே உள்ளது. தேர்தல் தொடர்ந்து பிற்போடப்பட்டுச் செல்வதால் எனக்கோ அல்லது தேர்தல் ஆணையகத்திற்கோ எந்தவொரு பாதிப்பும் ஏற்படப் போவதில்லை.

மாறாக நாட்டின் ஜனநாயகமே கேள்விக்குறியாகும். எல்லை நிர்ணயம் தொடர்பில் செயற்பட்டுவரும் அசோக பீரிஸ் தலைமையிலான குழு எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கையை சமர்ப்பிக்காவிடின் அதற்கு அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்கவும் அதற்குப் பதிலளிக்கவும் தயாராக உள்ளோம் - என்றார்.

(த-5)

# வடக்கு-கிழக்கு இணைப்பு நல்லாட்சியின் நிலை என்ன?

## கிழக்கு முதலமைச்சர் கேள்வி

மட்டக்களப்பு, நவ 10

வடக்கு - கிழக்கு மீளிணைப்பது தொடர்பில் அரசு எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதை முதலில் வெளிப்படுத்த வேண்டும். இரண்டு மாகாணங்களின் மீளிணைப்பை வைத்துக் கொண்டு தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் முயற்சியில் நல்லாட்சி அரசு இறங்கியுள்ளது.

இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறுபான்மையினரின் ஒற்றுமையைக் குழப்பும் நடவடிக்கைகளையே கடந்த கால அரசுகள் மேற்கொண்டன. நல்லாட்சி அரசும் அதனையே செய்து வருகின்றது. வடக்கு- கிழக்கு ஆகிய இரண்டு மாகாணங்களையும் இணைப்பதா, இல்லையா என்பது குறித்து, அரசு தனது நிலைப்பாட்டை முதலில் அறிவிக்கவேண்டும். அரசின் அறிவிப்பையடுத் துத்தான், தமிழ் - முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தங்களது நிலைப் பாடுகளைத் தெரிவிக்க முடியும்.

தமிழ், முஸ்லிம் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் இது தொடர்பில் கலந்தாலோசித்து ஒரு முடிவை எட்ட முடியும். மீளிணைக்கப்படுவதால் இரு சமூகத்தினருக்கும் ஏற்படும் சாதக, பாதக நிலமைகளும் ஆராயப்படவேண்டும். ஏனெனில், இரு சமூகத்தினருடைய அரசியல் தீர்வும் இதில் அடங்கியுள்ளது. அத்துடன், தமிழ், முஸ்லிம் மக்களின் இன ஒற்றுமையும் தங்கியுள்ளது.

எந்தவொரு அரசியல் தீர்வையும் சிறுபான்மையினரின் ஒற்றுமையில்தான் பெற்றுக்கொள்ள முடியும். தமிழர்களைப் புறக்கணித்தோ அல்லது முஸ்லிம்களைப் புறக்கணித்தோ சிறுபான்மையினருக்குக் காத்திரமான அரசியல் தீர்வைப் பெற முடியாது. இதனை நன்கு புரிந்துகொண்டுள்ள இன்றைய நல்லாட்சி அரசும், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மீளிணைப்பைச் சாட்டாக வைத்துக் கொண்டு தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. இதற்கு சிறுபான்மையினர் இடம்கொடுக்கக்கூடாது.

அத்துடன், தமது அரசியலை முன்னெடுப்பதற்காக சில அரசியல்வாதிகளும் முஸ்லிம் மக்களைத் திசைதிருப்பும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். இதனால், சிறுபான்மையினர் இன்று ஒற்றுமையுடன் இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். இது இல்லையெனில், தற்போதைய அரசியல் சூழ்நிலையிலும் அரசியல் தீர்வைப் பெற முடியாமல் போய்விடும் - என்றார்.

(கு)

# உயர் நடுத்தர வருமானம் பெறும் நாடாகும் இலங்கை

## அதற்கேற்றவாறே பட்ஜெட் என்கிறார் நிதியமைச்சர் ரவி

உயர் நடுத்தர வருமானம் பெறும் நாடாக இலங்கையை முன்னேற்றுவது என்ற இலக்கை நோக்கி நகர்த்தும் வகையில் அடுத்த வருடத்திற்கான வரவு-செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையிலான தேசிய அரசின் இரண்டாவது வரவு - செலவுத் திட்டம் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நிதி அமைச்சர் ரவி மேலும் தெரிவித்ததாவது:

கடந்த பல வருடங்களாகக் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கான வழியை ஏற்படுத்தும் வகையில் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதித் துறையில் காணப்படும் முரண்பாடுகளை நிவர்த்தி செய்து அந்தத் துறையில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கான யோசனைகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மக்களுக்குக் குறுகிய கால மற்றும் நீண்டகால நன்மைகளை ஏற்படுத்தும் வகையில் சகல துறைகள் பற்றியும் வரவு-செலவுத் திட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

9.9 ரில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பொதுக் கடன் காணப்படுகின்றது. பதிவுகள் இல்லாத 1.2 பில்லியன் ரூபா கடன் காணப்படுகின்றது. பாதீட்டுப் பற்றாக் குறையைக் குறைப்பதற்கான சகல திட்டங்களும் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் முன்னெடுக்கப்படும். 2020ஆம் ஆண்டு நிதிப் பற்றாக்குறையை உள்நாட்டு உற்பத்தியில் 3.5 வீதமாகக் குறைப்பதை இலக்காகக் கொண்டு செயற்படுவதோடு, அடுத்த வருடம் 4.7 வீதமாக இது குறைக்கப்படவுள்ளது-என்றார்.

(த-5)

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாவதி மயில்வாகனம்



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாவதி மயில்வாகனம் 09.11.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - தையல் அம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஐயாக்குட்டி - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் ஐயாக்குட்டி மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் ராஜகோபால் (இந்தியா), ரகுபதி, ருத்திரேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும் லதா, கோமளா, நிர்மலாதேவி ஆகியோரின் மாமியும் காலஞ்சென்றவர்களான சடாசிவம், சரஸ்வதி மற்றும் பராசக்தி, தங்கமணி, சகாதேவன், சந்திரலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் குணரத்தினம், அன்னலட்சுமி, புண்ணியமூர்த்தி, கோவிந்தநாதன் (கொலண்ட்), தேவராசா (அதிபர்), நவராசா (ஜேர்மனி), மகாலட்சுமி (பிரான்ஸ்), வரதராஜன் (இந்தியா), மோகனராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புமைத்துனியும் கிசானி ஜசானா சஞ்சினா ஆகியோரின் ஆசைமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (10.11.2016) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**2ஆம் வட்டாரம்,**
**நெடுந்தீவு.**

**தகவல்:**
**கணவர், பிள்ளைகள்**
**077 8052092, 076 8418357,**
**077 871 8022**

(ஜே/601)(17.19.20)

(8-ற)

## தொடர்ச்சிகள்....

### ராணுவச்...

இராணுவச் சிப்பாய் என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் நீதிமன்றில் நேற்று அறிக்கையிட்டனர். கபிலோசன் 2014ஆம் ஆண்டு மே 13 ஆம் திகதி இராணுவத்தில் இணைந்துள்ளார். இராணுவத்தின் 5ஆவது பொறியியல் படையணியில் சிப்பாயாக கடமையாற்றினார். 3 மாதங்களுக்கு முன்னர் அவர் இராணுவத்திலிருந்து தப்பியோடியுள்ளார் என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் நீதிமன்றில் அறிக்கையிட்டனர்.

அவரது சகோதரரான நிரூசனும் அன்றைய தினம் வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அவர்களிடமிருந்து வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டது. அந்த வாகனம் ஆவா குழுவின் செயற்பாட்டுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. அதன் பின்னர் அவர்களது ஒன்றுவிட்ட சகோதரரான திருச்செல்வம் பிரபுசன் கைது செய்யப்பட்டார். அவரது வீட்டிலிருந்து வாள் ஒன்று மீட்கப்பட்டது. அந்த வாள்தான் பொலிஸாரை வெட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கிறோம். பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் இன்னும் பலர் கைது செய்யப்படவேண்டியிருப்பதால் இந்த 3 பேரையும் விளக்கமறியலில் வைக்க அனுமதிக்கவேண்டும் என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் மன்றில் தெரிவித்தனர். அதனையடுத்து அவர்கள் மறியலில் வைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட முழு வடக்கையும் அச்சுறுத்தும் ஆவா குறூப் எனும் குழுவின் பின்னணியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களே உள்ளனர். அவர்களது ஆலோசனைகளுக்கு அமைவாகவே ஆவா குழு செயற்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுடன் இணைந்து ஆவா குரூப் எனும் பெயரில் ஆயுதக் குழுவொன்றை உருவாக்கி அரசுக்கு அசௌகரியம் ஏற்படும் வண்ணம் செயற்பட்டதாக சந்தேகிக்கப்படும் மூவரே கைது செய்யப்பட்டனர். புலிகள் இயக்க உறுப்பினர்களுடன் இணைந்து அவர்களுடன் தொடர்புகளைப் பேணி, அவர்களின் ஆலோசனைகளுக்கு அமைவாக விடுதலைப் புலிகள் அமைப்பை மீள உருவாக்குவதற்கு உதவி ஒத்தாசை புரியும் முகமாக ஆவா எனும் பெயரில் ஆயுதக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த குழுவானது வடக்கில் கடமையில் ஈடுபட்டுள்ள உளவுத் துறையினர் உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களை அச்சுறுத்தும் வண்ணம் செயற்படுகின்றனர் என்று பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதானவர்களில் மூன்று சந்தேக நபர்கள் கொழும்பு மேலதிக நீதிவான் நிஸாந்த பீரிஸ் முன்னிலையில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டபோது பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் தெரிவித்தனர்.

அவர்களை வெலிக்கடைச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டிருந்தது. இந்நிலையிலேயே இராணுவச் சிப்பாய் உள்ளிட்ட 3 பேரும் கொழும்பு மேலதிக நீதிவான் அருணி ஆட்டிக்கல முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டபோது, அவர்களையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

(வ-4)

### நேற்றும்...

பண்டத் தரிப்பைச் சேர்ந்தவரே நேற்றுக் கைது செய்யப்பட்டார். இதுவரை 14 பேர் ஆவா குழுவுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த பல்கலைக்கழக மாணவன் சுலக்சனின் ஞாபகார்த்தமாக அமைக்கப்படவுள்ள பஸ் தரிப்பு நிலையத்துக்கான அடிக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனால் நடப்பட்டது. சுன்னாகம் பொது நூலகத்துக்கு அண்மையில் குறித்த பஸ் தரிப்பிடம் அமைக்கப்படவுள்ளது. நிகழ்வில் வலி. தெற்கு பிரதேச சபை முன்னாள் தலைவர் பிரகாஸ், வலி. தெற்கு பிரதேச சபை செயலாளர், சுலக்சனின் குடும்பத்தினர், உறவினர்கள், பல்கலைக்கழக நண்பர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற-21)

# வடக்கு ஆளுநர் அவதானிப்பை பொய்யாக்கினர் கிளி. மக்கள்

## வடக்கு முதலமைச்சர் பாராட்டு

கிளிநொச்சி, நவ.10

வடக்கு மாகாண ஆளுநரின் அவதானிப்பைப் பொய்மைப்படுத்தும் வகையில் கிளிநொச்சி மக்களின் ஒன்றுமையான செயற்பாடு அமைந்தது.

இவ்வாறு பாராட்டுத் தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.



கிளிநொச்சி வர்த்தச் சந்தையில் ஏற்பட்ட தீ விபத்தில் வர்த்த நிலையங்கள் அழிவடைந்ததை அடுத்து புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதி நேற்று முன்தினம்வடக்கு முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது. முதலமைச்சர் நிகழ்வில் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த நிகழ்வு கூட்டு முயற்சியின் வெற்றிக்கான நிகழ்வு. பலரும் ஒன்று சேர்ந்து மிகக் குறுகிய காலத்தினுள் இந்த 45 கடைகளையும் கட்டியமை எமக்கு மன மகிழ்வைத் தருகின்றது. தீ விபத்து செப்ரெம்பர் 16ஆம் திகதி இரவிலிருந்து 24 மணித்தியாலங்களுக்குள் உங்கள் ஒவ்வொருவருக்கும் 20 ஆயிரம் ரூபா தரக் கூடியதாக இருந்தது. அப்பொழுது நடந்த கூட்டத்தில் நான் ஒரு விடயத்தைக்கூறினேன். இங்கு வந்து வெறுமனே பேசுவதால் பயனில்லை. நாங்கள் செயலில் காட்ட வேண்டும் என்றேன். நாங்கள் செயலில் காட்டுவதற்குச் சக்லரும் ஒத்துழைத்ததால் இந்த 45 கடைகளையும் திறக்கக்கூடியதாக இருக்கின்றது. எங்கள் அலுவலர்களும், ஒப்பந்தகாரர்களும், ஊர் மக்களும் ஒன்று சேர்ந்து இவ்வாறான செயலில் ஈடுபட்டமை மற்றைய எல்லோருக்கும் ஓர் எடுத்துக் காட்டாகஅமைகின்றது.

> "எம் மக்கள் சாதி, சமய, வர்க்க மத வேறுபாடுகளைக் கடந்து-ஒருமித்து உழைத்து மிகக் குறுகிய காலத்தினுள் வெற்றியடையக் கூடியவர்கள் என்பதை கிளிநொச்சி மக்களாகிய நீங்கள் இன்று அவருக்குப் பதிலளித்துள்ளீர்கள். உங்கள் ஒற்றுமை எம் எல்லோருக்கும் முன்மாதிரியாக அமையவேண்டும்."

இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு முன்னர் பத்திரிகையில் ஒரு செய்தி படித்தேன். ஆளுநர் அவர்கள் வடமாகாணம் பற்றிக் கூறியிருந்தார். வடமாகாண மக்கள் சாதியாலும்-வர்க்கத்தாலும்-கல்வி வேற்றுமைகளாலும்-மதத்தாலும் வேற்றுமைப்பட்டு முன்னேற முடியாமல் ஒருவருக்கொருவர் முரண்பட்டனர் என்று-அவர் கூறினார் என்று செய்தி இருந்தது. இன்றைய உங்கள் ஒற்றுமைச் செயற்பாடு அவரது அவதானத்தைப் பொய்மைப்படுத்துத்துவதாக அமைந்துள்ளது. எம் மக்கள் சாதி, சமய, வர்க்க, மத வேறுபாடுகளைக் கடந்து ஒருமித்து உழைத்து மிகக் குறுகிய காலத்தினுள் வெற்றியடையக் கூடியவர்கள் என்பதை கிளிநொச்சி மக் களாகிய நீங்கள் இன்று அவருக்குப் பதிலளித்துள்ளீர்கள். உங்கள் ஒற்றுமை எம் எல்லோருக்கும் முன்மாதிரியாக அமைய வேண்டும்.

இந்தச் செயற்பாட்டில் பிரதேசசபைச் செயலாளர் கம்சநாதனுடன் பிரதம செயலாளர், எமது அமைச்சின் செயலாளர் மேலும் பல அலுவலர்கள் சேர்ந்து உரிய பணத்தைச் சேகரித்து குறுகிய காலத்துக்குள் கடைகளைக் கட்ட உதவியுள்ளார்கள். எமது செயலாளர் திருமதி கேதீஸ்வரன் பிரதம செயலாளரிடம் இருந்து பணத்தைப் பெற்று இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தார்.

இந்த மாத முடிவுக்கு முன்னர் நட்டஈடாக 74 மில்லியன் ரூபா உங்களுக்குக் கிடைக்கவுள்ளது. புதிய சந்தைக் கட்டடத்துக்கு 150 மில்லியன் ரூபா கிடைக்கப் போகின்றது. தீயணைப்புப் படையணி உருவாக்க 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. நட்டஈடு இந்த மாதத்தில் வழங்கப்படும். சந்தைக் கட்டடம், தீயணைப்புப் படையணியும் அடுத்த வருடம் உருவாக்கப்படும். எனது 50 வருடகால நண்பர் கௌரவ சுவாமிநாதன் இதுகுறித்துத் தொலைபேசியில் எனக்குக் கூறினார் -என்றார். (ற-21,35)

# வன்னிப் பகுதியில் இப்போதும் இனக் கரு அழிப்பு நடக்கின்றது

## வடக்கு உறுப்பினர் பசுபதிப்பிள்ளை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.10

வன்னியின் பல பகுதிகளிலும் 2014ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக் கரு அழிப்பு தற்போதும் கிளிநொச்சியின் பல பகுதிகளிலும் இடம்பெறுகின்றது.

இவ்வாறு வடக்கு மாகாண உறுப்பினர் பசுபதிப்பிள்ளை தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 65ஆவது அமர்வு நேற்றுமுன்தினம் பேரவைச் செயலகத்தில் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. அதில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் பிரேரணைமீதுஉரையாற்றும்போது பசுபதிப்பிள்ளை இவ்வாறு தெரிவித்தார்.

வன்னியின் பல பகுதிகளிலும் 2014ஆம் ஆண்டு இனக் கரு அழிப்புநடத்தப்பட்டது. அப்போது அது பற்றிக் குறிப்பிட்டபோது எவரும் கண்டு கொள்ளவில்லை. தற்போதும் அது போன்ற நடவடிக்கைகள் தொடர்கின்றன. 2014ஆம்ஆண்டுதிட்டமிட்டவகையில் பல இளம்பெண்களுக்கு - ஒரு பிள்ளைகளின் தாய்கள், 4 மாதக் கர்ப்பிணிகள் போன்றோருக்குத் திட்டமிட்ட வகையில் கரு அழிப்பு ஊசி ஏற்றப்பட்டது. ஒரு பெண் உயிரிழந்தார். செப்ரிசீமியா என்று அது மறைக்கப்பட்டது. சுகாதார அமைச்சு அதை மறுத்து விட்டது - என்று பசுபதிப்பிள்ளை தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம்

2014ஆம் ஆண்டு நடந்த கருக் கலைப்பு விடயம் ஒரு தனியார் நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டது. அது பின்னர் தடுக்கப்பட்டது. குறித்த பெண்ணின் இறப்பு செப்ரிசீமியாவால் என்றே அறிக்கையிடப்பட்டது. அவ்வாறான செயற்பாடுகள் தற்போது நடக்குமானால் அவை தொடர்பான விவரத்தைச் சமர்ப்பித்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ற-101)

# நன்னடத்தைப் பாதுகாவலர் நியதிச் சட்டம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், நவ.10

வடக்கு மாகாண சபையின் நன்னடத்தை பாதுகாவலர் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் திணைக்கள நியதிச் சட்டம் வடக்கு மாகாண சபை அமர்வில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் 65ஆவது அமர்வு நேற்றுமுன்தினம் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடத்தப்பட்டது. குறித்த நியதிச் சட்டம் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தால் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டது. குறித்த நியதி சட்டத்தில் சிறுசிறு திருத்தங்கள் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டது. இந்த நியதி சட்டத்துக்கு கொழும்பு அரச அனுமதி வழங்குவதன் மூலம் வடக்கு மாகாணத்துக்கென நன்னடத்தை பாதுகாவலர்மற்றும்சிறுவர்கவனிப்புசேவைகள் திணைக்களம் ஒன்றை உருவாக்கி, அதனூடாக குற்றங்கள் இழைத்த சிறுவர்களைப் பராமரிப்பு நிலையத்தின் ஊடாக பராமரிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

சிறுவர்களால் இழைக்கப்படும் ஒவ்வொரு குற்றங்களையும் வகைப்படுத்தி - பெரும் குற்றங்களில் ஈடுபட்ட சிறுவர்களை ஒரு பகுதியாகவும், சிறு குற்றங்களில் ஈடுபட்ட சிறுவர்களை ஒருபகுதியாகவும் வகைப் படுத்தி-பராமரிக்கும் வகையில்-குறித்த திணைக்களம் அமைக்கப்படல் வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதியசட்டம் தொடர்பில் சிவாஜிலிங்கம் கருத்து தெரிவித்தார். குறித்த பிரேரணையை வட மாகான எதிக்கட்சித் தலைவர் தவராசா வழி மொழிய பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ற-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி அரசின் இழிவான செயல்

## படைச் சிப்பாய்கள் மீதான தாக்குதல் குறித்து மகிந்த சீற்றம்

கொழும்பு, நவ. 10
சிறப்புத் தேவைக்கு உட்பட்ட படைச் சிப்பாய்கள் மீதான தாக்குதல் ஓர் இழிவான செயலாகும் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குற்றஞ் சுமத்தியுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஓய்வூதியம் கோரிப் போராட்டம் நடத்தும் சிறப்புத் தேவைக்கு உட்பட்ட படைச் சிப்பாய்கள் மீது கண்ணீர்ப் புகைத் தாக்குதல் மற்றும் நீர்த் தாரைப் பிரயோகம் நடத்தியமை மிகவும் இழிவான ஒரு செயலாகும்.



சிறப்புத் தேவைக்கு உட்பட்ட படைச் சிப்பாய்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எனது அரசின் ஆட்சிக் காலத்தில் அமைச்சரவை அனுமதி கிடைக்கப் பெற்றது. இவ்வாறு தாக்கு தல் நடத்தப்பட்டமை மிகவும் மோசமான ஒரு சம்பவமாகும் - என்றார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர், தேர்தல் ஆணையாளர் இன்று ஒவ் வொரு கதைகளைக் கூறுகின்றார். அவரது கதைகள் வருத்தமடையச் செய்யும் வகையில் அமைந்துள்ளன.

இன்று ஆவா குழு பற்றி கேள்வி எழுப்பினால் வந்தார்கள் (ஆவா), போனார்கள் (கியர்) என்று நகைச்சுவையாக அரசு பதிலளிக்கின்றது.

இந்தப் பிரச்சினையைப் பொருட்டாகக் கருதுவதில்லை.

மக்களின் தேவைக்கே புதிய கட்சி அமைக்கப்படுகின்றது. புதிய கட்சி சில வேளைகளில் கூட்டு எதிர்க் கட்சிக்கு ஆதரவளிக்கும்-என்றார். (த-5)

## பெண்களை ஏமாற்றி பணம் மோசடி செய்தவர் சிக்கினார்

பதுளை, நவ. 10
பொறியியலாளராகத் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு பெண்கள் பலரை ஏமாற்றிப் பண மோசடி செய்ததாகக் கருதப்படும் நபரொருவர் நேற்றுமுன்தினம் பதுளையில் கைது செய்யப்பட்டார்.

ஹிக்கடுவைப் பகுதியைச் சேர்ந்த பி.ஏ.புஸ்பகுமார என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

இவரிடமிருந்து போலி அடையாள அட்டையையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவர் வசதிப்படைத்த குடும்பங்களின் அழகிய இளம் பெண்களை பல்வேறு பகுதிகளில் திருமணம் செய்து கொண்டுள்ளார்.

பதுளை, லக்ஸபான, புத்தளம் மற்றும் கரவலகஸ்வெவ ஆகிய பிரதேசங்களில் நான்கு பெண்களைத் திருமணம் செய்துள்ளார்.

இந்தப் பெண்களிடம் இவர் சுமார் பதினைந்து லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பணத்தைப் பெற்று மோசடி செய்துள்ளதாக, குறிப் பிடப்பட்ட பெண்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்தனர்.

பதுளை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலொன்றின் பேரில் பதுளை - இம்புல்கொடை என்ற இடத்துக்கு இரகசியமாகச் சென்ற அவர்கள் சந்தேகநபர் தலைமறைவாக தங்கியிருந்த வீட்டைச் சுற்றி வளைத்து, அவரைக் கைதுசெய்தனர். அவரிடமிருந்து போலியாகத் தயாரிக்கப்பட்ட அரச பொறியியலாளருக்கான அடையாள அட்டை, திருமணச் சான்றிதழ்கள் உள்ளிட்ட போலி ஆவணங்கள் பலவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர். (த-ய-41)



## அரசியல் கைதிகளுக்கு ரெலோ அமைப்பு உதவி

யாழ்ப்பாணம், நவ. 10
அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளுக்கு அவர்களின் வேண்டு கோளுக்கு அமைவாக ரெலோ அமைப்பினால் தொலைக்காட்சி ஒன்று வழங்கி வைக்கப்பட்டது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளின் குறைகளைக் கேட்டறிவதற்காக, ரெலோ அமைப்பின் தலைவரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், ரெலோ இயக்கத்தின் கொள்கைப் பரப்புரைச் செயலர் கணேஸ்வரன் வேலாயுதம், அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் ஆகியோர் அங்கு கடந்த திங்கட்கிழமை சென்றிருந்தனர்.

தமிழ் சிறைக்கைதிளுக்கெனப் பிரத்தியேகமாகத் தொலைக்காட்சி பார்ப்பதற்காகச் சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் அனுசரணையுடன் தொலைக் காட்சிப் பெட்டியும், உணவுப் பொதிகள் மற்றும் நிதி உதவியும் வழங்கி வைக் கப்பட் டன. இதன்போது சிறைச்சாலை அத்தியட்சகர் பண்டாரவுடன் இந்தக் குழுவினர் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். (த-5)

## திட்டப்புலக் கிராம மயானத்தை அகற்றுமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.10
யாழ்ப்பாணம், புன்னாலைக் கட்டுவன் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள திடப்புலம் கிராமத்தின் மத்தியில் உள்ள மயானத்தை அகற்ற வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திடப்புலம் கிராமத்தில் 180 குடும்பங்களுக்கு மேல் வாழ்கின்றன. நாம் இந்த மயானத்தைப் பயன்படுத்தாது வேறொரு மயானத்தையே பயன்படுத்துகின்றோம். எமது அயல் கிராமத்தில் உள்ளவர்கள் தமது உறவினர்கள் உயிரிழக்கும்போது குறித்த மயானத்தைப் பயன்படுத்துகின்றனர். மயானத்தை அகற்றுமாறு பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தி யும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மயானத்தால் இரு கிராம மக்களுக்கிடையே முரண்பாடுகள் ஏற்படுகின்றன. கிராம மக்களின் நன்மை கருதி மயானத்தை அகற்ற வேண்டும் - என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

குறித்த மயானம் நீண்டகாலமாகக் காணப்படுகின்றது. அதில் சில கிராமத்தைச் சேர்ந்தவர்கள் உடல்களைத் தகனம் செய்கின்றனர். மயானத்தால் திட்டப்புலம் கிராம மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வண்ணம் மயானத்துக்கு 10 அடி உயரமான மதில் அமைத்துக் கொடுப்பதற்கும், சுகாதார முறைப்படி தகனம் செய்வதற்கும் பிரதேச சபை முன்வந்தபோதும் அவர்கள் எதிர்க்கின்றனர்.

மயானத்தை அகற்ற முடியாது. மயானத்துக்குரிய பாதுகாப்பு ஒழுங்குகள் பிரதேச சபையால் மேற்கொள்ளப்படும் - என்று வலி.தெற்கு பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.(ற-7)

## சில பரிந்துரைகளை செயற்படுத்தலாம்

### நல்லிணக்க ஆணைக் குழு குறித்து ரணில்

கொழும்பு, நவ. 9
மகிந்த ராஜபக்சவால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் சில பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த முடியும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவராக இருந்த முன்னாள் சட்டமா அதிபர் சி.ஆர்.டிசில்வாவின் நினைவு பேருரையில் பங்கேற்று உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மறைந்த டி சில்வா தலைமையிலான கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் சர்ச்சைக்குரியவை. சில விடயங்களுடன் நான் இணங்குகின்றேன். ஏனைய விடயங்களுடன் இணங்கப் போவதில்லை.

சர்ச்சைகளைத் தாண்டி நீதித்துறை இருக்கவேண்டும் என்று டி சில்வா நம்பினார். நீதித்துறை சர்ச்சைக் குரியதாக இருந்தால் சட்டவாட்சி பாதிக்கப்படும்.

டி சில்வா சட்டவாட்சியை நிலை நிறுத்தினார். எவ்வாறான வேறுபாடுகள் காணப்பட்டாலும், சட்டவாட்சியை நிலை நிறுத்த அனைவரும் கடமைப்பட்டுள்ளோம்.

சட்டவாட்சியை உயிர்ப்புடன் வைத்திருப்பதற்குப் பங்களிப்பு வழங்கியவர் என்ற வகையில் டி சில்வா தொடர்பில் மகிழ்ச்சி அடைகிறேன் -என்றார். (த-5)

## பள்ளிவாசல் மீதான தாக்குதல் நல்லாட்சிக்கு ஏற்பட்ட சவால்

### கிழக்கு முதலமைச்சர் கண்டனம்

மட்டக்களப்பு, நவ.10
சிறுபான்மை முஸ்லிம்களின் மத வழிபாட்டுத் தலம் பெற்றோல் குண்டுகளால் தாக்கப்பட்டமை நல்லாட்சிக்கு ஒரு சவாலாகும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

குருநாகல் - நிக்கவெரட்டிய பிரதேச பள்ளிவாசல் மீது பெற்றோல் குண்டுவீசி தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே முதலமைச்சர் தமது கடும் கண்டனத்தைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நிக்கவெரட்டிய ஜும்ஆ பள்ளிவாயல் பெற்றோல் குண்டுகள் மூலம் தாக்கப்பட்டமை அமைதியைச் சீர்குலைக்கும் மிக மோச மான காடைத்தனமாகும்.

நாட்டின் சிறுபான்மை மக்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்துவதும் அவர்களின் இருப்பிடம் மற்றும் காணிகளைக் கபளீகரம் செய்வதும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. பௌத்த மக்களே இல்லாத இடங்களில் புத்தர் சிலைகளைக் கொண்டுவந்து வைத்து, அந்த மக் களைச் சீண்டுவதும் வன்மையாகக் கண்டிக்கத்தக்க விடயங்களாகும். இப்படியான எரிச்சலூட்டும் விசமத்தனமான செயல்களைப் பொறுக்கமுடியாத சிறுபான்மை மக்களே கடந்த அரசை வீட் டுக்கு அனுப்பிவைத்தனர். எனவே இப்படியான கொடுமைகளைத் தடுக்கும் நடவடிக்கையை நல்லாட்சி அரசு உடனடியாக மேற்கொள்ளவேண்டும்.

இதனைத் தடுக்கும் நடவடிக்கையை மேற்கொள்ள அரசு தவறுமாக இருந்தால், அரசில் தொடர்ந்து இருப்பது கேள்விக்குறியாகும். நல்லாட்சியை மாசுபடுத்த வெளியாகி, நச்சுக் கருத்துக்களை அள்ளி வீசும் நாசகாரச் சக்திகள் எவராக இருந்தாலும் அவர்களை அரசு கைதுசெய்து சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார். (த-ய-46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீர் மின்சார தடையால் மன்னார் மக்கள் சிரமம்

மன்னார், நவ.10

மன்னார் மாவட்டத்தில் கடந்த பல தினங்களாக பகல், இரவு வேளைகளில் தொடர்ச்சியான மின்தடை ஏற்படுகின்றது என்று மக்கள் விசனம் தெரிவித்தனர். மன்னார் மாவட்டத்தில் பல மாதங்களுக்கு முன்னர் தொடர்ச்சியாக மின் தடை ஏற்பட்டபோது மின்சார சபையினர் திருத்தங்களை மேற்கொண்டு தடையை நிவர்த்திசெய்தனர். இப்போது எந்தவித முன்னறிவித்தலும் இன்றி இரவு, பகல் பாராது மின் தடை ஏற்படுகின்றது. அதனால் பெரும் அசௌகரிய நிலை ஏற்படுகின்றது. மின் உபகரணங்களும் பழுதடைகின்றன.

கடந்த 6 ஆம் திகதி மின்சாரத் தடையால் ஏற்பட்ட மின் ஒழுக்கில் மன்னார் பஸார் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று தீப்பிடித்தது என்று கூறப்படுகின்றது. எதிர்வரும் மாதம் இடம் பெறவுள்ள க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளும் பாதிப்படைந்துள்ளன. மின் தடை தொடர்பாக மன்னார் மின்சார சபை மற்றும் யாழ். தலைமை அலுவலகம் என்பவற்றுக்கு அழைப்பு ஏற்படுத்தினால் உரிய பதில் வழகப்படுவதில்லை - என்று மக்கள் குற்றஞ்சாட்டினர்.

பராமரிப்பு வேலைகள் நடைபெறுவதாலேயே மின் தடை ஏற்படுகின்றது. இனிமேல் வழமை போன்று மின்சாரம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். தடங்கல்கள் ஏற்பட்டால் அறிவிக்கப்படும் - என்று மின்சார சபைப் பொறியியலாளர் தரணா தெரிவித்தார். (ற-21,56)



ஒட்டுசுட்டான் கற்குவாரியில் செயற்கை முறையில் மண் குவியலால் அமைக்கப்படும் மலை போன்ற அமைப்பு, தென் பகுதியில் கல் மலைகளில் உருவாக்கப்பட்டுள்ள புத்த சின்னங்களை ஒத்த வடிவாகக் காணப்படுகின்றது என்று அந்தப் பகுதியை சேர்ந்தவர்கள் கூறுகின்றனர். எதிர்காலத்தில் இந்த மண் மலைச் சாரலில் புத்த சின்னத்தை உரு வாக்கி பௌத்த சுற்றுலாத் தளமாக இந்தப் பகுதியை மாற்றக்கூடும் என்றும் அவர்கள் சந்தேகம் தெரிவித்தனர். (ற-21,102)

# வடக்குக்கெனத் தனியான புனர்வாழ்வு திணைக்களம்

## வடக்கு மாகாண சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், நவ.10

வடக்கு மாகாணத்துக்குத் தனியான புனர்வாழ்வுத் திணைக்களத்தைச் செயற்படுத்துவற்குரிய ஆளணியையும், அதற்குத் தனியான நிதி ஒதுக்கீட்டையும் அடுத்த ஆண்டு மேற்கொள்ள வேண்டும். கொழும்பு அரசை இவ்வாறு கோரும் பிரேரணை நேற்றுமுன்தினம் வட மாகாண சபை அமர்வில் வடக்கு சுகாதார அமைச்சரால் முன்மொழியப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

புனர்வாழ்வு மற்றும் பெண்கள் விவகாரணம் ஆகியவற்றுக்குத் தனியான ஆளணியாக 84 பேரை நியமிக்க அனுமதிக்குமாறு கோரி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் ஒரு வருடத்துக்கு முன்னரே வடக்கு சுகாதார அமைச்சர் வேண்டுகோள் விடுத்திருந்தார். எனினும் நடவடிக்கைஎடுக்கப்படவில்லை. அதன்தொடர்ச்சியாக நேற்றுமுன்தினம் வடக்கு சுகாதார அமைச்சரால் மேற்குறிப்பிட்டபிரேரணை முன்மொழியப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் 42 ஆயிரம் மாற்றுத் திறனாளிகள் உள்ளனர். புள்ளிவிவரங்கள் இருந்தாலும் சரியான தகவல்களைப் பெறும் நோக்கில் தமற்போதுஎமது அமைச்சு நவீன இலத்திரனியல் சாதனங்களைப் பயன்படுத்தித் தகவல்களைத் திரட்டும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. மாகாணத்தின் போருக்குப் பின்னரான புனர்வாழ்வு நடவடிக்கை முன்னெடுப்பதற்கும், போரால் பாதிக்கப்பட்ட மக்களின் அன்றாடப் பிரச்சினைகள், தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு தனியான புனர்வாழ்வுத் திணைக்களம் செயற்படுவது அவசியமாகின்றது - என்று வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவித்தார். பிரேரணையை அமைச்சர் டெனீஸ்வரன் முன்மொழிய சபை ஏற்றுக் கொண்டது.

புனர்வாழ்வு மற்றும் பெண்கள் விவகாரம் என்பன இதுவரை வடக்கு மாகாண அமைச்சுக்களில் இருக்கின்றபோதும், அதற்கெனத் தனியான திணைக்களம் உருவாக்கப்படவில்லை. சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாகவே அந்தப் பணிகள் முன்னெடுக்க ப்படுகின்றன. (ற-5,8)

# மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கு விருது

தென்மராட்சி, நவ.10

கடந்த வருடம் மாணவர் நாடாளுமன்றத்தை அமைத்து, ஒரு வருட காலத்தில் 5 தடவைகள் அதன் அமர்வுகளை நடத்தி -பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டமைக்கான சிறந்த விருது தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலயத்துக்கு கிடைத்தது.

கடந்த வெள்ளிக்கிழமை தென்மராட்சி கல்வி வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவால்விருதுவழங்கப்பட்டது. தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் மாணவர் நாடாளுமன்றங்களின் செயலாளர் நாயகம் மற்றும் பிரதி செயலாளர் நாயகம் ஆகியோருக்கான வலய மட்ட மாணவர் நாடாளுமன்றங்களை வலுவூட்டல் தொடர்பாக வலயக்கல்வி அலுவலகத்தில் நடத்தப்பட்ட செயலமர்வில் இந்த விருது வழங்கப்பட்டது.(ற-9)

# குற்றங்களில் 70 வீதமானவை விரைவில் கட்டுப்பாட்டுக்குள்

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



பதுளை, நவ.10

பொலிஸ் நிலையங்களில் பதியப்பட்டிருக்கும் குற்றச்செயல்களில் 70 வீதமானவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகப் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்தார்.

பதுளை - ரிதிமாலியத்தை புதிய பொலிஸ் நிலையம் நேற்றுமுன்தினம் பொலிஸ்மா அதிபரினால் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாட்டில் 600 பொலிஸ் நிலையங்கள் வரை அதிகரிப்பதற்குக் கொள்கை ரீதியில் திட்டமிட்டுள்ளோம். தற்போது எமது நாட்டில் இனவாதமோ, பயங்கரவாதமோ கிடையாது. அதுபோன்றதோர் அவலம் இனிமேல் ஏற்படாத வகையில் செயற்படவேண்டியது எம்ஒவ்வொருவரினதும் கடப்பாடாகும்.

பொலிஸார் மக்களுடன் மிகவும் நெருங்கிப் பழக வேண்டும். அதற்கென சிவில் குடிமக்கள் பொலிஸ் குழுக்களைக் கிராமங்கள் தோறும் அமைத்துவருகின்றோம். மக்களுடன் ஒன்றிணைந்து இருக்கும்வரை, பொலிஸார்பலம்பொருந்தியவர்களாக இருப்பர் - என்றார். (த-ய-41)

# அரசின் புற்றுநோய் மருந்து மருத்துவர்களால் நிராகரிப்பு

## சுகாதார அமைச்சின் விசாரணை ஆரம்பம்

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையின் ஒரு சில வைத்திய நிபுணர்கள் புற்றுநோயாளிகளுக்கென அரசு இலவசமாக வழங்கும் மருந்துகளை நிராகரித்திருப்பது தொடர்பில் சுகாதார அமைச்சு விசாரணைகளை மேற்கொண்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையின் வைத்தியர்கள் சிலர் அரசு வழங்கும் ரஷ்யத் தயாரிப்பு மருந்துகளை ஏற்க மறுத்துள்ளமை தொடர்பில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன விசாரணையொன்றை நடத்துமாறு அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டதையடுத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

அரசால் நியமிக்கப்பட்டுள்ள வைத்தியர் ஒருவர் குறிப்பிட்ட மருந்தொன்று எந்த நாட்டின் உற்பத்தி என்பதை வைத்து அதனை நிராகரிக்க முடியாதெனவும் விசாரணைகளின் பின் சம்பந்தப்பட்ட வைத்தியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் சுகாதார அமைச்சர் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார். (த)

# மகிந்தவை அழைக்கிறது சீன அரசு

கொழும்பு, நவ. 10

இலங்கை அரசுக்கும், சீனாவுக்கும் இடையே முறுகல் ஏற்பட்டுள்ள நிலையில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைச் சீனா வுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகக் கூட்டு எதிரணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. எதிர்வரும் நவம்பர் 23 ஆம் திகதி மகிந்த ராஜபக்சவின் சீனப் பயணம் இடம்பெறவுள்ளது.

இதன்போது, அவர், சீன அரச தலைவர்கள் மற்றும் சீனாவில் உள்ள இலங்கைச் சமூகத்தினரைச் சந்திக்கவுள்ளதாகவும் கூட்டு எதிரணி வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் எத்தனை நாள்கள் மகிந்த ராஜபக்ச சீனாவில் தங்கியிருப்பார் என்று தகவல்கள் வெளியாகவில்லை. (த-5)

# பொலிஸ் பதவியுயர்வு, இடமாற்றம் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டில்

கொழும்பு, நவ. 10

பொலிஸ் துறையில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முதல் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வரையிலான தரத்திலுள்ளவர்களின் பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் அவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைகள் உட்பட்ட சகல நடவடிக்கைகளும் இனிமேல் பொலிஸ் ஆணைக்குழுவின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் வரவுள்ளதாக ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலிஸ் பொறுப்பதிகாரிக்குக் கீழுள்ள சப்இன்ஸ்பெக்டர்கள், சார்ஜண்டுகள், கான்ஸ்டபிள்கள் ஆகியோரின் பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், அவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைகள் போன்றவை சம்பந்தப்பட்ட பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மூலமாகவே நடைபெறுமெனப் பொலிஸ் ஆணைக்குழுவின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம், பொலிஸ் ஆணைக் குழுவுக்கு இந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும், அதன் பிரகாரம் இனிமேல் பொலிஸாரின் பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்று விசாரணைகள் போன்றவற்றில் அரசியல் தலையீடுகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# பாடசாலை சீருடை வவுச்சர் 15ஆம் திகதி வழங்கப்படும்

கொழும்பு, நவ. 10

2017ஆம் ஆண்டுக்கான பாடசாலை மாணவர்களின் சீருடை களுக்கான வவுச்சர்கள் இம்மாதம் 15ஆம் திக்தி வழங்கப்படுமென கல்விச் சேவைகள் அமைச்சு தெரிவித்தது.

இதற்கான உத்தியோகபூர்வ அறிவுறுத்தல்கள் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும், 2017ஆம் ஆண்டு முதலாம் ஆண்டில் அனுமதிக்கப்படும் மாணவர்களைத் தவிர்த்து, 2ஆம் ஆண்டு முதல் 13ஆம் ஆண்டு வரையிலான சகல மாணவர்களுக்கும் இந்த வவுச்சர்கள் வழங்கப்படுமெனவும், கல்விச் சேவைகள் அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

இம்முறை சீருடைக்கான துணிகளை வழங்குவதற்கு புடைவைக் கடைகள் பிரதேச கல்விக் காரியாலயத்தில் பதிவு செய்திருக்க வேண்டிய அவசியம் இல்லையெனவும், மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான கடைகளில் வவுச்சர்களைக் கொடுத்து துணியை வாங்கிக் கொள்ள முடியுமெனவும், பிரிவெனாக்களில் உள்ளவர்களுக்கு அவர்களது காவியாடைகளுக்காக 1,750 ரூபா பெறுமதியான வவுச்சர்கள் வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (து)

# காடு பற்றிய காணிகளை பார்க்கையில் வயிறு எரிகிறது

## தையிட்டி மக்கள் வேதனை

யாழ்ப்பாணம், நவ.10

தையிட்டியில் இருந்து 1990ஆம் ஆண்டு வெறும்கையுடன் வெளியேறினோம். இப்போது எமது வீடுகள் இடிக்கப்பட்டு பற்றைக்காடுகளாக எமது காணிகள் காணப்படுகின்றன. அவற்றைப் பார்க்கையில் வயிறு பற்றி எரிகின்றது.

இவ்வாறு கவலையுடன் தெரிவித்தனர் அண்மையில் இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்ற மக்கள்.

வலி. வடக்கில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டிருந்த சில பகுதிகள் அண்மையில் மக்களின் பாவனைக்காக விடுவிக்கப்பட்டன. கடந்த வெள்ளிக்கிழமை அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது வீடுகள், காணிகளைப் பார்வையிடச் சென்றனர். அவர்களே இவ்வாறு வேதனையுடன் தெரிவித்தனர்.

1990ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இந்தப் பகுதியில் கடும் மோதல் ஏற்பட்டது. நாம் இங்கிருந்து இடம்பெயரத் தயாராகினோம். நான் ஒரு தொகுதிப் பொருள்களை பாதுகாப்பாகக் கொண்டு சென்றுவிட்டு, வீட்டுக்குத் திரும்பியபோது-இராணுவத்தினர் எமது பகுதிக்குள் ஊடுருவி விட்டனர். வீடு செல்ல முடியவில்லை. அதன்பின்னர் பல இடங்களில் குடியேறிப் பலவித கஷ்டங்களை அனுபவித்தோம். இப்போது எமது பிரதேசத்தை விடுவித்தனர். இனியாவது நிம்மதியாக வாழலாம் என்று எண்ணியே இங்கு வந்து பார்த்தேன். ஆனால் வீடு தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. காணிகள் பற்றைக் காடாகியுள்ளன - என்று வேதனையுடன் கூறினார் அந்தப் பகுதியில் தனது வீட்டைப் பார்க்க வந்த ஒருவர்.

எனது வீட்டில் இருந்த தாயாரும், ஏனையோரும் இராணுவம் வருவதை அறிந்து, யாழ். நகர் நோக்கி ஓடி வந்தனர். மாவிட்டபுரத்துக்கு அண்மையில் வைத்து இராணுவம் அவர்களை வழிமறித்து மீண்டும் வீட்டுக்கு அனுப்பியது. நாங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடினோம். அவர்கள் எனது தாயார் உட்பட சிலர் உள்ளனர் என்று தகவல் தந்தனர். 5 மாதம் கழித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் எனது தாயார் எம்முடன் வந்து சேர்ந்தார். அது வரைக்கும் முழுமையாக இருந்த எமது வீடுகள் தற்போது தரைமட்டமாகக் கிடப்பதைப் பார்க்க வயிறு பற்றி எரிகின்றது. மீண்டும் ஆரம்பத்தில் இருந்தே நாங்கள் மீண்டெழ வேண்டியுள்ளது - என்று விரக்தியுடன் தெரிவித்தார் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஓட்டோ சாரதியான மணியம். (ற-101)

# பற்றிமாதா சொரூபத்திலிருந்து கண்ணீர் வடிவதாக வதந்தி

யாழ்ப்பாணம், நவ.10

யாழ். குருநகர் பகுதியில் உள்ள பற்றி மாதா சொரூபத்திலிருத்து கண்ணீர் வடிந்தது என்று கூறப்படும் சம்பவம் உண்மை இல்லை என ஆலயத்தின் பங்குத் தந்தை தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை பற்றிக்ஸ் வீதியில் மக்கள் குடிமனைப் பகுதியில் அமைந்துள்ள சிற்றலையத்தில் உள்ள மாதா சொரூபத்தில் மாதாவுடைய கண்களில் இருந்து கண்ணீர் வடிகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. அதுகுறித்துபொறுப்பான ஆலயத்தின் பங்குத் தந்தையிடம் கேட்டபோது அவர் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறவில்லை என தெரிவித்தார். (ற-10)



# அர்ஜுன் ஆலோசியஸை நான் கண்டதே இல்லை

## ஹந்துன்நெத்தி கூறுகின்றார்

கொழும்பு, நவ.10

மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புபட்ட பேர்பச்சுவல் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் ஆலோசியஸை இதுவரைக்கும் தான் காண்டதே இல்லை என்றும்-அவ்வாறானவரைக் காப்பாற்றுவதற்குத் தான் முயற்சிப்பததாக சிலர் குற்றஞ் சுமத்துகின்றனர் என்றும்-கோப் குழுவின் தலைவரும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்திய கோப் குழு, அதன் அறிக்கையை முழுமை செய்வது தொடர்பில் நடத்தப்பட்ட அமர்வில் இருந்து நான் எழுந்து சென்றமைக்குச் சிலர் வேறு அர்த்தங்களைக் கொடுக்கின்றனர். மத்திய வ்ங்கி மோசடியுடன் தொடர்புபட்ட அதிகாரிகளைக் காப்பாற்றுவதற்கு நான் முயற்சி செய்வதாகக் குற்றங்களைச் சுமத்துகின்றனர். நான் பேர்பச்சுவல் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் ஆலோசியஸை இதுவரையும் கண்டதே இல்லை.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனைக்கூட அவர் கோப் குழுவின் விசாரணைக்குவந்தபோதுதான் கண்டேன். ஆனால், இவர்களை வேறு சிலர் தான் காப்பாற்றுவதற்கு முயற்சி செய்கின்றனர். அவர்களுக்கு அவருடன் 'டீல்' உண்டு. அந்த 'டீல்' பற்றி பின்னர் சொல்கிறேன்- என்றார். (து)

# பொலிஸ் பதிவை நிறுத்துவதாக சட்டம் ஒழுங்கு அமைச்சர் உறுதி

## அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு, நவ.10

கொழும்பு, வெள்ளவத்தையில் மேற்கொள்ளப்படும் பொலிஸ் பதிவுகளை உடன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சட்டம் ஒழுங்கு அமைச்சர் உறுதியளித்தார்.

இவ்வாறு அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் தமிழர்கள் செறிந்து வாழும் வெள்ளவத்தையில் கடந்த சில தினங்களாக பொலிஸ் பதிவுக்கான விண்ணப்பங்கள் வீடு வீடாக விநியோகிக்கப்படுகின்றன. பொலிஸாரின் இந்தநடவடிக்கையால் மக்கள் மத்தியில் குழப்ப நிலை ஏற்பட்டது. அது தொடர்பில் அமைச்சர் மனோ கணேசனின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது.

இது குறித்து நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் மனோ கணேசன் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்ணாயக்கவிடம் சுட்டிக்காட்டினார். பதிவுகள் உடனடியாக நிறுத்தப்படும் என்று சட்டம் ஒழுங்கு அமைச்சர் உறுதியளித்தார் என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தனார்.

கொழும்பில் நைஜீரியப் பிரசைகள் சட்டவிரோதமாகக் குடியேறினர் என்றும்-அவர்களது விவரங்களை அறியும் நோக்குடனேயே இந்தப் படிவங்கள் வழங்கப்பட்டன என்றும்-பொலிஸார் கூறியிருந்தனர். (ற-5)

# குடியிருப்பு கலாசார மண்டபத்தில் சீர்கேடு நடப்பதாகச் சொல்வது பொய்

## கோரப்பட்ட நிதி கிடைத்ததும் திருத்தப்படும் என வவுனியா பிரதேச செயலாளர் தெரிவிப்பு

வவுனியா, நவ.10

வவுனியா குடியிருப்புப் பகுதியில் உள்ள கலாசார மண்டபத்தைச் சீரமைக்க மீள் குடியேற்ற அமைச்சிடம் 7 மில்லியன் ரூபா கோரப்பட்டுள்ளது. கலாசார மண்ட பத்தில் கலாசார சீர்கேடுகள் நடக்கின்றன என்று கூறப்படுவது உண்மைக்குப் புறம்பானது. இவ்வாறு வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜா தெரிவித்தார்.

வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜா குகனேஸ்வரனின் நிதி ஒதுக்கீட்டில் 1998ஆம் ஆண்டு குறித்த கலாசார மண்டபம் அமைக்கப்பட்டது. கலாசார மண்டபத்தின் திறப்பு விழா நடைபெற முன்னர் இராணுவம் அதை கையகப்படுத்தியது. 18 ஆண்டு களாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த கலாசார மண்டபம் கடந்த ஓகஸ்ட் மாதம் விடுவிக்கப்பட்டு, வவுனியா மாவட்டச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. இதுவரை சீரமைக்கப்படாதுள்ள கலாசார மண்டபத்தில் சமூகச்சீரழிவு நடவடிக்கைகள் நடைபெறுகின்றன என்று மக்கள் தெரிவித்தனர். அது தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே பிரதேச செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

> கலாசார மண்டபத்தை தற்போது பிரதேச செயலகத்தின்பயன்பாட்டுக்கு வவுனியா மாவட்டச் செயலாளர்வழங்கியுள்ளார்.



வவுனியா குடியிருப்பு பகுதியில்-அண்மையில் இராணு வத்தினரால் விடுவிக்கப்பட்ட கலாசார மண்டபத்தை தற்போது பிரதேச செயலகத்தின் பயன்பாட்டுக்கு வவுனியா மாவட்டச் செயலாளர் வழங்கியுள்ளார். அங்கு கலாசார சீரழிவுகள் இடம்பெறுகின்றன என்று கூறப்படுவது உண்மைக்குப் புறம்பானது. இது தொடர்பில் எவ்வித முறைப்பாடுகளும் எமக்கு கிடைக்கவில்லை. பிரதேச செயலகத்தின் ஊடாக நாம் மீள்குடியேற்ற அமைச் சிடம் சீரமைப்புப் பணிகளுக்காக 7 மில்லியன் ரூபா கோரி விண்ணப்பித்துள்ளோம். நிதி கிடைத்ததும் சீரமைப்பு நடைபெறும். அந்த மண்ட பத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு இன்றிலிருந்து வழங்கப்பட்டது - என்றும் பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுரை பெறாததால் அநியாய சிசு இறப்புகள்

தென்மராட்சி, நவ.10
கர்ப்ப மற்றும் பிரசவ காலத்தில் சுகாதாரத் திணைக்களத்தால் வழங்கப்படும் சேவைகளை கர்ப்பிணிகள் பெறாது விடுவதால் அநியாயமாக சிசுக்களைப் பறி கொடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

“குடும்ப நல சேவையாளர்களால் வழங் கப்படும் ஆலோசனைகள், அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ளாததால் குழந் தைக்குப் பால் கொடுக்கும் முறைகள் தொடர்பான அறிவு, பால் கொடுக்கும்போது குழந்தைக்குப் புரையேறினால் என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பான அறிவு இல்லாத காரணத்தாலேயே சிசு உயிரிழந்துள்ளது.”

இவ்வாறு சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

தென்மராட்சிப் பகுதியில், 17 நாள் சிசு பால் புரையேறி உயிரிழந்தமைக்குச் சுகாதாரத் திணைக்களத்தின் சேவைகளைப் பெறாது இருந்தமையே காரணம் என்றும் அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

சுகாதாரத் திணைக்களத்தால் கர்ப்பத்துக்கு முன்னர், கர்ப்ப காலத்தில், பிரசவத்தின்போது, பிரசவத்தின் பின்னர் என கர்ப்பிணிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன. கர்ப்ப காலப் பராமரிப்புக்கள், குழந்தை பராமரிப்பு என்பவை பற்றி சுகாதார வைத்திய அதிகாரி, குடும்ப நல சேவையாளர்கள் மூலம் கிளினிக்குகளில் அறிவு றுத்தல்கள் வழங்கப்படுகின்றன. பிரசவத்தின் பின்னர் குழந்தைப் பராமரிப்புக்கு ஏற்ற வகையில் குடியிருப்பு உள்ளதா எனவும் அடிக்கடி களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது கர்ப்பத்துக்கு முந்திய காலத்தில் பெண்கள் ஆலோசனையைப் பெற முன்வருவதில்லை. கர்ப்ப காலத்தில் தனியார் வைத்திய நிலையங்களில் கர்ப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்கின்றனர். அங்கு வழங்கப்படும் மருந்துகளை அருந்துகின்றனர். கர்ப்பம் தொடர்பில் குடும்ப நல சேவையாளர்களுக்கு அறிவிப்பதில்லை. பிரவசத்தின்போதும் அரச வைத்தியசாலைகளுக்குச் செல்லாது தனியார் வைத்தியசாலைகளில் பணம்செலுத்தி அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தை பிரசவிக்கின்றனர். அதன் பின்னரும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் வழங்கப்படும் தடுப்பூசி ஏற்றல் உள்ளிட்ட சேவைகளை அவர்கள் பெறுவதில்லை. தாய்க்கு ஆரோக்கியமான சுகப் பிரசவத்துடன் கூடிய குழந்தை பிரசவித்தல், தாயும் சேயும் நலமாக உள்ளனரா போன்ற களப்பரிசோதனைகளையும் பெற்றுக்கொள்வதில்லை. சுகாதாரத் திணைக்களத்துடன் தொடர்பு இல்லாததாலேயே முதற் பிரசவத்தின் பின்னர் பால் கொடுக்கும்போது புரையேறி குழந்தை உயிரிழந்த சம்பவம் தென்மராட்சியில் இடம் பெற்றது.

குடும்ப நல சேவையாளர்களால் வழங்கப்படும் ஆலோசனைகள், அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ளாததால் குழந்தைக்குப் பால் கொடுக்கும் முறைகள் தொடர்பான அறிவு, பால் கொடுக்கும்போது குழந்தைக்குப் புரையேறினால் என்ன செய்யவேண்டும் என்பது தொடர்பான அறிவு இல்லாத காரணத்தாலேயே சிசு உயிரிழந்துள்ளது.

தற்காலத்தில் தனிக்குடித்தனமாகத் தனித்து வாழ்வதால் பெற்றோர், உறவினர்களின் உதவிகள் கிடைப்பதில்லை. அதுவும் குழந்தையின் இறப்புக்குக் காரணமாகியுள்ளது.

வைத்தியசாலையில் பிரசவம் நடந்தால் அது தொடர்பாக குடும்ப நல சேவையாளருக்கு அறிவிக்கப்படும். அவர் குழந்தையும், தாயும் பாராமரிக்கக்கூடிய இட வசதி உள்ளதா எனப் பார்வையிட்டு, தேவையான அறிவுரைகளை வழங்குவார். குடும்ப நல சேவையாளர் பிரசவத்தின் பின்னர், முதல் 5 நாள்களில் இரு தடவையும், அடுத்த 10 நாள்களில் 5 தடவையும் அங்கு சென்று பார்வையிட்டு அங்கு மேற்கொள்ளப்படும் தாய், சேய் பராமரிப்பு நடவடிக்கைகளை ஆராய்வார்.

இந்தக் காலப் பகுதியில் குடும்ப நல சேவையாளரை வீட்டுக்கு அழைத்து பார்வையிட வைப்பது தொடர்பான அறிவுறுத்தல்கள் ஒவ்வொரு கர்ப்பிணிகள் கிளினிக்கிலும் கூறப்படுகிறது. சுகாதார திணைக்களத்தால் நடத்தப்படும் கர்ப்பிணிகள் கிளினிக்குகளுக்குச் செல்லாதவர்களுக்கு இவ்வாறான அறிவுரைகள் கிடைப்பதில்லை. தென்னாசியாவிலேயே தாய்மார்களுக்கான சிகிச்சை முறையில் இலங்கை முன்னணியில் உள்ளபோதும், சரியான அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளாததால் இவ்வாறான துயரச் சம்பவங்களும் இடம்பெறுகின்றன என்றும்–செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற–21,9)

## சாரணியத்தின் வழிகாட்டலில் இளைஞர்கள் பண்பாகின்றனர்

### வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

மன்னார், நவ.10
சாரணியத்தின் வழிகாட்டலில் இளைஞர்கள் சமூகத்துக்குத் தேவையான பண்புகளுடன் வளர்கின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன்.

தேசிய ரீதியான 32ஆவது திரிசாரணர் ஒன்றுகூடல் மன்னாரில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி, மூன்று தினங்கள் நடைபெற்றது. அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த சாரணர்கள் அதில் கலந்து கொண்டனர். இறுதிநாள் நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் உரையாற்றினார்.

அதில் அவர் தெரிவித்ததாவது:
32 ஆவது தேசிய திரிசாரணர் ஒன்றுகூடல் முதன்முறையாக வடக்கு மாகாணத்தில் அதுவும் மன்னார் மாவட்டத்தில் நடைபெறுவதையிட்டு நான் மிகவும் பெருமிதமடைகின்றேன். சாரணியத்தின் ஸ்தாபகராகிய தந்தை பேர்டன் பவலின் இளைஞர்களுக்கான வழிகாட்டல் மிகவும் பாராட்டத்தக்கது. சமூகத்துக்கு மிகவும் இன்றியமையாதது. இளைஞர்களே நாட்டின் முதுகெலும்பு. சாரணியத்தின் வழிகாட்டலில் இளைஞர்கள் சமூகத்துக்குத் தேவையான பண்புகளுடன் வளர்கின்றனர். குறிப்பாக கடவுளுக்கும் நாட்டுக்கும் சேவை செய்வதை தாரக மந்திரமாக கொண்ட சாரணியம் இளைஞர்களின் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இனங்கள் மற்று சமூகங்களுக்கு இடையிலான ஒற்றுமை, புரிந்துணர்வு மற்றும் மனித நேயம் இதன்மூலம் கட்டியெழுப்பப்படுகின்றது. இந்தப் பண்புகளோடு திரிசாரணர்கள் சமூகத்தை கட்டியெழுப்ப எப்பொழுதும் உதவிசெய்ய வேண்டும் – என்றார். (ற–2)

## தீவகத்தில் நெற்செய்கையை பாதுகாப்பதற்கு முட்கம்பிகள்

### விவசாயத் திணைக்களம் வழங்கியது

யாழ்ப்பாணம், நவ.10
தீவகத்தில் நெற்செய்கையை ஊக்குவிக்கும் வகையில் விவசாயிகளுக்கு முட்கம்பிகள் வழங்கப்பட்டன என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்தது.

தீவகத்தில் தற்போது நெற்செய்கை வீழ்ச்சியடைந்துள்ளது. கட்டாக்காலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளமையே அதற்குப் பிரதான காரணம் என்று பிரதேச விவசாயிகள் கூறியிருந்தனர். அதையடுத்தே விவசாயத் திணைக்களத்தால் முட்கம்பிகள் வழங்கப்பட்டன.

நெற்செய்கையைப் பாதுகாக்கும் பொருட்டு விவசாயத் திணைக்களத்தின் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் இருந்து ஒரு மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் 223 முட்கம்பிச் சுருள்கள் கொள்வனவு செய்யப்பட்டன. புங்குடுதீவு கமநல சேவைகள் நிலையத்தில் தெரிவு செய்யப்பட்ட 55 விவசாயிகளுக்கு தலா 25 கிலோ எடையுடைய 171 முட்கம்பிச் சுருள்கள் வழங்கப்பட்டன. ஏனைய முட்கம்பிச் சுருள்கள் தெரிவு அடிப்படையில் விவசாயிகளுக்கு பகிரப்படும் – என்று விவசாயத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (ற–10)

## பூநகரி உவர் நிலங்களில் புதிய வகை நெல் இனம்

யாழ்ப்பாணம், நவ.10
பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள உவர் நிலங்களில் புதிய இன நெல் பயன்படுத்தப்பட்டு, விவசாய செய்கை முன்னெடுக்கப்பட்டது என முழங்காவில் பிரதேச விவசாய சம்மேளனம் தெரிவித்தது.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் பல பகுதிகள் உவர் நிலங்களாகவுள்ளன. முன்னர் விவசாயம் செய்யப்பட்ட பிரதேசங்கள் கூடத் தற்போது விவசாயம் செய்யப்படாது கைவிடப்பட்டன.

விவசாயத் திணைக்களம், கமநலத் திணைக்களம் என்பவற்றின் முயற்சியால் இந்த ஆண்டு உவர் நிலத்தில் பயிரிடக் கூடிய புதிய இன நெல் அறிமுகப்படுத்தப்பட்டது. அறிமுகப்படுத்தப்பட்ட நெல் இனம் போதிய வளர்ச்சியை எட்டியதால் இரண்டாம் கட்டமாக 60 ஏக்கர் நிலத்தில் குறித்த இன நெல் விதைக்கப்பட்டது.

கரியாலைநாகபடுவான், வேரவில் பிரதேசங்களில் உள்ள உவர் நிலங்களில் விவசாயிகள் இந்த இன நெற் செய்கையை மேற்கொண்டுள்ளனர். அது வெற்றியளிக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். வெற்றியளிக்கும் பட்சத்தில் எதிர்காலத்தில் அனைத்து உவர் நிலங்களிலும் நெற்செய்கை செய்யத் திட்டமிட்டுள்ளோம் – என்று சம்மேளனத்தின் தலைவர் வீ.தர்மகுலசிங்கம் தெரிவித்தார். (ற–101)

### ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டப் பகுதியில்

## 3 ஆண்டுகள் கடந்தும் முடியாத கலாசார மண்டபக் கட்டுமானம்

வவுனியா, நவ.10
ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டப் பகுதியில் அமைக்கப்படும் கலாசார மண்டபக் கட்டுமானப் பணிகளை உரிய காலத்துக்குள் நிறைவு செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



2013ஆம் ஆண்டு ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டப் பகுதியில், வவுனியா மாவட்டச் செயலகம், வவுனியா பிரதேச செயலகம் ஆகியவற்றின் மேற்பார்வையில் அரச நிதி ஒதுக்கீட்டில் கலாசார மண்டபம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக் கப்பட்டன. இரண்டு ஆண்டுகளில் கட்டுமானப் பணிகள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. தற்போது மூன்று ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. கட்டுமானப் பணிகள் முழுமையடையவில்லை. தற்போது அந்தப் பகுதி பற்றைக்காடாகி வருகின்றது. பெருமளவு பாம்புகள் அங்கு காணப்படுவதால் அயலில் உள்ளவர்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர். கட்டாக்காலி கால்நடைகளும் தற்போது அங்கேயே தங்குகின்றன.

இந்தப் பகுதியில் முன்பள்ளி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. அதற்கு தற்காலிகமான கட்டடம் ஒன்று தேவைபடுகிறது. கிராம அபிவிருத்திச் சங்க கூட்டங்கள், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரின் வீட்டிலேயே இடம்பெறுகின்றன. இது பலருக்கும் அசௌகரியமாக உள்ளது. கிராம அபிவிருத்திச் சங்கங்களை கூட்டுவதற்கு தற்காலிமாகவேனும் இடமொன்று தேவைப்படுகிறது. திருமண வைபவங்கள் உள்ளிட்ட பல்வேறு கலாசார வைபவங்களை நடத்த மண்டபம் இல்லை. 15 மைல் தொலைவில் வவுனியா நகரில் உள்ள மண்டபங்களை நாடவேண்டியுள்ளது. விரைவில் கலாசார மண்டபத்தின் கட்டுமானங்களைப் முழுமைப்படுத்தி மக்கள் பாவனைக்கு விட வேண்டும்– என்று அங்குள்ள அரச ஊழியர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அரசால் இது போன்ற 120 கலாசார மண்டபங்கள் அனைத்து பகுதிகளிலும் கட்டப்படுகின்றது. மண்டபத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்தன. மின்சார வேலைகள் செய்யப்பட வேண்டியுள்ளன. எதிர்வரும் பெப்ரவரிமாதமளவில் கட்டடத்தின் முழுவேலைத் திட்டங்களும் நிறைவடையும்– என்று மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் தெரிவித்தார். (ற–21,402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## முளையிலேயே கிள்ளி எறியுங்கள்

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் உள்ளாட்சி மன்றங்களின் மேம்பாட்டுக்கான திட்டத்தின் (நெல்சிப்) கீழ், வடக்கில் உள்ள இரு உள்ளாட்சி மன்றங்களில் இடம்பெற்ற வேலைகளில் மோசடி செய்யப்பட்டு நிதி ஊழல் இடம்பெற்றுள்ளமை ஆரம்ப விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விசாரணை நடத்தவென வடக்கு மாகாண சபை நியமித்த உப குழு, மாதிரிக்கு இரு உள்ளாட்சிகளைத் தெரிவு செய்து ஆய்வு செய்தது. அதன் முடிவு மாகாண சபையில் முன்வைக்கப்பட்டது. வல்வெட்டித்துறை உள்ளாட்சியில் செய்யப்பட்ட இரு வீதிச் சீரமைப்பு வேலைகளிலும், பருத்தித்துறையில் புதிய சந்தைக் கட்டடம் ஒன்றை அமைப்பதிலும் இந்த ஊழல் இடம்பெற்றுள்ளன என்றும், அதன் மூலம் 43 லட்சம் ரூபா இழப்பு அரசுக்கு ஏற்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கை கூறுகின்றது.

வடக்கில் 43 உள்ளாட்சி மன்றங்கள் உள்ளன. அவை அனைத்திலும் நெல்சிப் வேலைகள் செய்யப்பட்டன. அவற்றில் இரு உள்ளாட்சிகளிலேயே இவ்வளவு பெரிய தொகை ஊழல் இடம்பெற்றுள்ளன என்றால் மொத்த உள்ளாட்சிகளிலும் எவ்வளவு பெரிய தொகை ஊழல் நடந்திருக்கும் என்பதை நினைக்கவே நடுங்குகிறது.

மொத்தமாக 100 கோடி ரூபா வரை ஊழல் செய்யப்பட்டதாக ஏற்கனவே முறைப்பாடுகள் எழுப்பப்பட்டிருந்ததும் கவனிக்கத்தக்கது. குற்றச்சாட்டு எழுப்பப்பட்டு சுமார் இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், ஊழல் புரியப்பட்டமை ஆரம்ப விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்ட நிலையிலும் இந்த மோசடி ஊழலைச் செய்தவர்கள் மீது எந்தவிதமான சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படாதிருக்கின்றது. இது ஏன்?

இப்போது மாகாண சபை உபகுழுவின் அறிக்கையின் பின்னரும்கூட, இந்த விடயத்தை கணக்காய்வாளர் நாயகத்தின் கவனத்திற்கு அனுப்புவது என்றும், பெரும் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் இந்த விடயத்தைக் கையளிப்பது என்றுமே மாகாண சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. நெல்சிப் கொழும்பு அரசின் செயற்றிட்டம் என்பதால், அதில் மாகாண சபை தலையிட முடியாது என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஒரு நியாயம் சொல்லியுள்ளார்.

இதற்கு முன்னர், இதே ஊழல் தொடர்பாக வட மாகாண சபையின் தலைமைச் செயலாளரால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவும் விசாரணை நடத்தியது. அந்தக் குழுவும் மோசடி இடம்பெற்றுள்ளமையை உறுதிப்படுத்தியது. அந்த விசாரணை அறிக்கையின் அடிப்படையில் மோசடியில் ஈடுபட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்னமும் அது நடைபெறவில்லை.

மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகக் குற்றப் பத்திரிகை தயார்ப்படுத்தப்படுத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டதுடன், அப்படியே அது முடங்கிக் கிடக்கிறது. மேலதிக முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை.

ஒரு மோசடி இடம்பெற்றுவிட்டது என்று கண்டறியப்பட்டு, ஆரம்ப விசாரணைகளில் அது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரும், குற்றத்தில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஏன் இவ்வளவு கால தாமதம்? ஏன் இத்தகைய அசண்டையீனம்? குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரி ஒருவர் வெளிநாட்டுக்குத் தப்பியோடிவிட்டார் என்ற பின்னரும்கூட நடவடிக்கைகளில் ஏன் துரிதம் இல்லை?

இந்தப் போக்கு ஏற்றுக்கொள்ளப்படவே முடியாதது. வெளிப்படைத் தன்மையும் திறந்த கொள்கையும் நேர்மைத் திறமும் கொண்டதே நல்லாட்சியாக அமைய முடியும். ஒரு குற்றம் நிகழ்ந்த பின்னரும் அதில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் அவர்கள் தப்பியோடிவிடுவதற்கும் வாய்ப்பளித்திருப்பது நல்லாட்சியாக இருக்க முடியாது. இது, வடக்கு அரசின் பணமா, கொழும்பு அரசின் பணமா என்கிற விவாதம் அல்ல. மோசடியாகச் சுருட்டப்பட்டது மக்களின் வரிப் பணம். அதனைச் செய்தவர்களைத் தேடிப்பிடித்துக் கடுமையாகத் தண்டிக்கவேண்டும். இதுபோன்ற ஊழல்களை முளையிலேயே கிள்ளி எறியவேண்டும். இல்லையேல், ஒரு புற்றுநோயாக அது எல்லாவற்றையுமே அழித்து விடும்.

# எந்த முகத்தோடு தமிழ் மக்களை சந்திக்க வரவுள்ளார் மகிந்த?

**மு.ஈழத்தமிழ்மணி**

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களால் தோற்கடிக்கப்பட்டு அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்ட முன்னைநாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு தற்போது வடபகுதித் தமிழ்மக்கள் மீது திடீர்க் கரிசனை பிறந்துள்ளது. தமிழ் மக்கள் மகிந்தவை ஜனாதிபதிப் பதவியிலிருந்து எப்படியாவது அகற்ற வேண்டும் என உறுதியாக முடிவெடுத்திருந்தனர். அதனை அமைதியாகச் செய்வதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. அந்த நாளும் வந்தது. அமைதியாகவே தங்கள் பணியை செய்து முடித்தனர்.

மகிந்த ஆட்சியின் போது 2009 ஆம் ஆண்டிலிருந்து நடை பெற்றிருந்த உள்ளூராட்சிசபைத் தேர்தல், மகாணசபைத் தேர்தல்' தேசியரீதியில் இடம்பெற்ற ஜனாதிபதித்தேர்தல், பொதுத்தேர்தல் என்பவற்றின்போது, மகிந்த ராஜ பக்சவுக்கு ஆதரவளிக்கும் நோக் கில் சுதந்திரக் கட்சியினரும், ஈ.பி.டி.பியினரும் அப்போதைய வட மாகாணத்தின் ஆளுநரும், ஒன்று சேர்ந்து வடபகுதி மக்களை அச்ச நிலையில் வைத்திருந்தனர்.

ஒவ்வொரு தேர்தல்களின்போது மகிந்த ராஜபக்ச தரப்பினர் தமிழ் மக்களின் வாக்குகளைக் கவர்வதற்காக இயன்ற சலுகைகளையும், பொய் வாக்குறுதிகளையும் வழங்கிக் கொண்டிருந்தனர். வாக்குகளை அபகரிப்பதற்காக ராஜபக்ச அரசு பல சதி முயற்சிகளையும் கூட மேற்கொண்டது.

தமிழ் மக்களது கணிசமான வாக்குகளைத் தமது தரப்புக்கு ஈட்டிக் கொள்ள வேண்டிய அவசியத் தேவை மகிந்த தரப்புக்கு ஏற்பட்டிருந்தது. காரணம் மகிந்த போர்க் குற்றச் சாட்டுக்களிலிருந்து தப்பித்துக் கொள்ளும் தேவை இருந்தது. ஆகவே வடபகுதித் தமிழ் மக்களின் வாக்குகள் தமது தரப்புக்குக் கிடைக்குமேயானால், தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்று கூறி பன்னாட்டை நம்பவைத்து விடலாம் என்று மகிந்த கணக்குப் போட்டார்.

வடபகுதியில் வீதிகள் திருத்தப்பட்டன, மூடப்பட்டுக் கிடந்த வீதிகள் திறக்கப்பட்டன, மீன்பிடித்தடைகள் நீக்கப்பட்டன, மீள்குடியமர்வுக்கு தடை விதிக்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியேற்றங்களும் நடந்தன, ரயிலும் ஓமந்தையில் இருந்து கிளிநொச்சி வரை ஓட ஆரம்பித்துப் பின்னர் காங்கேசன் துறை வரை சேவை நீடிக்கப்பட்டது.

தமது அரசின் மீதான போர்க்குற்றச்சாட்டுக்களை மகிந்த மறுத்துரைத்த போதிலும், நடைபெற்ற சம்பவங்களில் சிலவற்றை சனல்-4, விக்கிலீக்ஸ் போன்ற ஊடகங்கள், காணொலிகள் உலகத்தின் கண் முன் கொண்டு வந்திருந்தன. மகிந்த அனைத்துலக பொறிகளில் சிக்கியிருந்தமையினால் தன்னையும் படைகளையும் காப்பாற்றி ஆகவேண்டிய தேவை மகிந்தவுக்கு ஏற்பட்டது. வடபகுதித் தேர்தல்களின்போது தமிழ் மக்களின் ஆதரவு வாக்குகள் தன்னைப் போர்க்குற்றத்தில் இருந்து காப்பாற்றும் என நம்பியே ஒவ்வொரு தேர்தல்களிலும் வட பகுதிக்கு மகிந்த வருகின்றபோதும், திடீரென அபிவிருத்தித் திட்டங்கள் தோன்றும்.

எலும்புகளை வீசி நாய்களை மடக்குவது போல், வடபகுதி தமிழ் மக்கள் மீது சில சலுகைகளை வீசி தங்கள் பக்கம் வீழ்த்துகின்ற நடவடிக்கையில் மகிந்த அரசு இறங்கியதுண்டு. அரசுடன் இணைந்து தமிழ் மக்கள் செயற்பட்டால் தான், வடபகுதியை அபிவிருத்தி செய்யலாம் என்றெல்லாம் பரப்புரைகளை மகிந்த அரசு செய்திருந்தது. தமிழ் மக்கள் மகிந்த அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கூறி டக்ளஸ் தேவானந்தவும், தனது மகிந்த விசுவாசத்தனத்தைக் காட்டிக் கொண்டார்

### பல தரப்புக்களில் இருந்தும் மகிந்த எதிர்கொண்ட சவால்கள்

மகிந்த தன் மீதான போர்க்குற்றச் சாட்டுக்களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு ஒரு உபாயமாக, வடபகுதியில் தேர்தல் பரப்புரைகளில் தமிழ் மக்களின் ஆதரவை நம்பிக்கொண்டிருந்தார். இந்தக் காலகட்டத்தில்சனல்-4 காணொலி, ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை, அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுக ளின் அழுத்தங்கள், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் நெருக்கடிகள், அனைத்துலக மனித உரிமை அமைப்புகளின் அழுத்தங்கள் என எல்லாமும் மகிந்தவின் கழுத்தை ஒன்று மாறி ஒன்றாக நெரித்துக் கொண்டிருந்தன. 2010இல் இருந்து நடைபெற்ற தேர்தல்களில் தமிழ் மக்களின் வாக்குகள் பெருமளவில் தமது தரப்புக்குக் கிடைக்கும் என மகிந்த அரசும், ஈழமக்கள் ஜனநாயக கட்சியினரும் நம்பியிருந்தா லும், தேர்தல்முடிவுகள் யாவும் மகிந்தவுக்கு பெரும் ஏமாற்றத்தையே கொடுத்திருந்தன.

வடபகுதியில் மகிந்த அரசுக்குக் கிடைத்திருந்த தமிழ் மக்களின் வாக்குகள் சில சந்தர்ப்பவசமாகக் கிடைத்திருந்தன. அதே போலவே ஈ.பி.டி.பியினருக்கும் கிடைத்திருந்தன.

ஆளும்கட்சிக்கு வாக்களிக்களிக்காவிட்டால் தமிழ் மக்கள் தண்டிக்கப்படுவார்கள் என்ற கோதாவில் வடபகுதி தமிழ் மக்களிடம் தேர்தல் பரப்புரைகள் மகிந்த ஆட்சியாளர்களினால் முன்னெடுக்கப்பட்டிருந்ததும், அதனால் பயனேதும் கிட்டவில்லை. தம்மை அழித்தவர்களைத் தமிழ் மக்கள் என்றைக்குமே ஆதரிக்க மாட்டார்கள் என்ற உண்மையைத் தமிழ் மக்கள் வாக்குகள் மூலம் வெளிப்படுத்தியிருந்தனர். வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் தகுந்த பாடத்தைக் கற்றுக் கொடுத்துள்ளனர் என்பதை மகிந்த மற்றும் அவரது சகோதரரான பசில் ராஜபக்ச நன்கு அறிவர்.

ஒவ்வொரு தேர்தல்களிலும் தமிழ் மக்கள் அரசைப்புறக்கணித்தமை மகிந்த அரசுக்கு பெரும் அவமானத்தைக் கொடுத்திருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெற்ற சபைகளை அரசு புறக்கணித்திருந்தது. மகிந்த அரசு மீது தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. மகிந்த அரசை தமிழ் மக்கள் ஆதரிக்காது தொடர்ந்து நிராகரித்து வருகின்றனர் என்பதைப் பன்னாட்டுச் சமூகம் உணர்ந்து கொண்டிருந்தது.

ஜனாதிபதித் தேர்தலின் பரப்புரைக்காக வடபகுதிக்கு வருகை தந்த பின்னர், மகிந்த ராஜபக்ச பொதுத்தேர்தல் பரப்புரைக்கு வட பகுதிக்கு வராதிருந்து விட்டார். தமிழ் மக்களால்தான், தாம் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதித் தேர்தலின் பரப்புரைக்காக வடபகுதிக்கு வருகை தந்த பின்னர், மகிந்த ராஜபக்ச பொதுத் தேர்தல் பரப்புரைக்கு வடபகுதிக்கு வராதிருந்து விட்டார். தமிழ் மக்களால் தான், தாம் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற நேர்ந்தது என்று இனவாத ரீதியில் கருத்து வெளியிட்ட அவர், பொதுத் தேர்தல் பரப்புரைக்கு வந்து எந்த முகத்துடன் தமிழ்மக்கள் மத்தியில் முன்னிற்பது என்றஎண்ணியிருக்கலாம். அல்லது தமிழ்மக்கள் மீதான அவரது கோபம் கடுமையாக இருந்திருக்கலாம்.



நேர்ந்தது என்று இனவாத ரீதியில் கருத்து வெளியிட்ட அவர், பொதுத் தேர்தல் பரப்புரைக்கு வந்து எந்த முகத்துடன் தமிழ்மக்கள் மத்தியில் முன்னிற்பது என்ற எண்ணியிருக்கலாம். அல்லது தமிழ்மக்கள் மீதான அவரது கோபம் கடுமையாக இருந்திருக்கலாம்.

அன்று வடபகுதித் தமிழ்மக்களை அடியோடு புறக்கணித்த மகிந்த ராஜபக்ச, தமிழ்மக்களது ஆதரவைக்கோர எதிர்வரும் நாள்களில் மீண்டும் வடக்குக்கு வரவுள்ளார் என்ற செய்தி தமிழ் மக்களிடையே பரவியுள்ளது.

**தமிழ் மக்கள் மீது மகிந்தவுக்கு ஏன் இந்தத் திடீர்க் கரிசனை?**

ஏன்வருகின்றார்? என்பதெல்லாம் தமிழ்மக்களுக்குத் தெரியாததொன்றல்ல. அண்மையில் கிழக்கு மாகாண மட்டக்களப்பு மாவட்டத்துக்கான பயணம் மேற்கொண்டிருந்தார். சிறையில் வாடும் கிழக்கு மாகாணசபை உறுப்பினரான பிள்ளையானை சிறைச்சாலைக்குச் சென்று சந்தித்திருந்தார். முஸ்லிம் பிரமுகர்களையும் சந்தித்து உரையாடியிருந்தார். மைத்திரியின் நல்லாட்சிக்கு எதிராக செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற, எதிர்க்கட்சிக்கூட்டு எதிரணியின் தலைவரான மகிந்த, மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசு, தனக்கும் – தனது குடும்பத்தினருக்கும் இழைத்து வரும் தீங்குகள் குறித்துத் தமிழ் மக்களுக்குத் தெரிவிக்கவும், புதிய கட்சி அமைக்கவேண்டிய தேவை குறித்துத் தமிழ் மக்களிடம் விளக்கிக் கூறவே மகிந்த வடபகுதிக்கு வரவுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

மகிந்தவினால் ஆரம்பிக்கப்படவுள்ள புதியகட்சிக்கு எவ்விதத்திலும் தமிழ் மக்கள் ஆதரவளிக்கப் போவதில்லை.

மகிந்த தமிழினத்துக்கெதிராக நடத்திய படுகொலைகளையும் மற்றும் அநீதிகளையும் மறைத்து, தமிழ் மக்கள் மீது கருணையுள்ளவராக நடிக்க வடக்குக்கு வரவுள்ளார்.

"இன்று நீங்கள் அனுபவிக்கும் சுதந்திரத்தையும் அமைதியையும் நானே பெற்றுத் தந்தேன். இதற்கு முன்னர் நீங்கள் விடுதலைப் புலிப் பயங்கரவாதிகளிடம் அகப்பட்டுச் சிக்கித் தவித்த போது, எனது அரசே உங்களை மீட்டெடுத்தது. அப்படியிருக்க ஏன் என்னைத் தோற்கடித்தீர்கள்" என தமிழ்மக்களிடம் கேள்வி எழுப்புவதற்கு வருகின்றாரா?

மகிந்தவின் குடும்ப உறுப்பினர்கள், தீவிர ஆதரவாளர்கள் பலர் ஊழல், நிதிமோசடிகள், அரசியற்கொலைகள், லஞ்சம், ஆட்கடத்தல்கள் போன்றவற்றில் ஈடுபட்டதன் காரணமாக மைத்திரி அரசின் தீவிரவிசாரணைகளை எதிர்கொண்டு தவித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதைத் தமிழ் மக்கள் நன்கு அறிந்து வைத்துள்ளனர்.

மகிந்த எதிர்பார்க்கின்ற ஆதரவு தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் கிடைப்பதென்பது எட்டாக்கனியாகும். மகிந்த ஆட்சியில் முஸ்லிம் மக்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தனர். தற்போதைய ஆட்சியை தமிழ், முஸ்லிம் மக்கள் தூக்கி எறிவதற்கு விரும்பமாட்டார்கள்.

தமிழ்மக்களுக்கான உரிமைகளை வழங்காது, தனது ஆட்சிக்காலத்தில் தமிழ்மக்களைத் தொடர்ந்தும் அடக்குமுறைக்குள் வைத்திருந்த ராஜபக்சவின் வடபகுதிக்கான பயணம் அவரைப் பொறுத்த வரையில் தோல்வியாகத் தான் அமையப்போகிறது.

மகிந்த ராஜபக்ச தாம் ஜனாதிபதித் தேர்தலில் தோற்றதிலிருந்து, தமிழ்மக்களுக்கு எதிராகவே இனவாத ரீதியில் செயற்பட்டு வருகின்றார். இனவாதத்தை கையில் எடுத்துக் கொண்டே தனது எதிர்கால அரசியல் வாழ்க்கையைத் தொடரவுள்ளார்.

2011இல் மகிந்த ஆட்சியில் வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் மீது கிறீஸ் பூதங்களாக படையினரை ஏவி, பல தாக்குதல்களை நடத்தியமைக்கு மகிந்த ஆட்சியே காரணமாகும். முஸ்லிம் மக்களும் மலையகத் தமிழ் மக்களும் கிறீஸ்பூத நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

முன்னரெல்லாம் மகிந்த வடபகுதிக்கு வருகின்றாரென்றால், படையினரின் தீவிர கண்காணிப்புகள், நடமாட்டங்கள் யாவும் பலப்படுத்தப்பட்டிருக்கும். மகிந்தவின் வருகையின் போது அரச மேலதிகாரிகள், படையினர் உட்பட திரண்டு நிற்பார்கள்.

புதியகட்சி ஆரம்பிப்பதற்கான முயற்சிகளுக்கு தமிழ் மக்களின் ஆதரவைப் பெற ஒரு சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராகவும், தமிழ் மக்களால் தோற்கடிக்கப்பட்ட முன்னை நாள் ஜனாதிபதியாக்வும் யாழ்ப்பாண மக்களைச் சந்தித்து "ஆட்சி அமைக்க வாக்குப் பிச்சை வழங்கி உதவுங்கள்; பன்னாட்டு உதவியுடன் மந்திரி ரணில் கூட்டடாட்சியைத் தூக்கி எறிவதற்கு உதவுங்கள்" என்று கேட்கவா மகிந்த யாழ்ப்பாணம் வருகின்றார்?

# யாழ். நகரின் சுகாதாரச் சீர்கேடு உடனடியாகக் களையப்பட வேண்டும்

யாழ். மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதால் யாழ்ப்பாண நகரம் மோசமான சுகாதாரச் சீர்கேட்டை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் காணப்படுகின்றது. இரண்டு தினங்களாகக் குப்பைகளும் ஏனைய கழிவுகளும் அகற்றப்படாததால் வீதிகள் எங்கும் அவை தேங்கிக் கிடக்கின்றன. இவற்றிலிருந்து துர்நாற்றம் கிளம்பியுள்ளதால் பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலை அடுத்து வரும் நாள்களுக்குத் தொடர்ந்து நீடிக்குமேயானால், அதனால் ஏற்படக்கூடிய எதிர்விளைவுகளை எண்ணிப் பார்க்கக் கூட முடியாதுள்ளது.

தொழிலாளர்கள் தமது கோரிக்கைகள் நிறைவேறாத நிலையிலேயே பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர் என அவர்களின் சார்பில் கூறப்படுகின்றது. அவ்வாறாயின் இந்த விடயத்தில் அதிகாரிகளும் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரும் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரனும் ஏன் கவனம் செலுத்தவில்லையயன்ற கேள்வி எழுகின்றது. அவர் தொழிலாளர்களின் கோரிக்கைகள் தொடர்பாக அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வொன்றைக் கண்டிருந்தால், இந்த அவல நிலை தோன்றியிராது எனப் பலதரப்பினரும் தெரிவிக்கின்றனர். மழைக்காலம் ஆரம்பித்த நிலையில் வீதிகளில் குப்பைகளும் கழிவுகளும் குவிந்து காணப்படுகின்றமை மோசமான விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

ஆகவே யாழ்.மாநகர சபையும் வடக்கு முதலமைச்சரும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான முடிவை உடனடியாக எட்ட வேண்டும். தாமதப்படுத்தப்படும் ஒவ்வொரு நாளும் மக்களின் சுகாதார நிலைப் பாதிப்பை மேன்மேலும் உயர்த்தும் நாள்களாக ஆக நேருமென்பதை உரிய தரப்பினர் உணர்ந்து செயற்பட வேண்டுமென்பதே பாதிப்பை எதிர்கொண்டு வரும் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

த.மேனகா,
குருநகர்

# யார்க்கு எடுத்துரைப்பேன்?

பளை, முல்லையடியில், வசிக்கின்ற முதாட்டியான நான் கடந்த 01.11.2016 அன்று காரைநகர் பஸ் சாலையைச் சேர்ந்ததும்(டிப்போ), 3355பஸ் இலக்கத்தைக் கொண்டதுமான யாழ்ப்பாணம் –வவுனியா பஸ்ஸில் பயணம்செய்தேன். எனது இடமாகிய பளை, முல்லையடியில், என்னை இறக்கி விடுமாறு குறித்த பஸ்ஸின் ஓட்டுநரைப் பல தடவைகள் கேட்டுக்கொண்ட போதிலும், முடியாது என்று மறுத்து விட்டார். நடத்துநரும் அது பற்றி அலட்சியப்படுத்திவிட்டார். முல்லையடியில் இறங்க வேண்டியிருந்த நான் புதுக்காட்டுச்சந்தியில் இறக்கி விடப்பட்டேன். அங்கிருந்து திரும்பி எனது வீட்டுக்கு நடந்து வந்து சேர்ந்தேன். புதுக்காட்டுச்சந்திக்கும் முல்லையடிக்கும் இடையில் கணிசமான தூரம் என்பது மற்றொரு விடயம். இந்த மனிதாபிமானமற்ற செயற்பாடு குறித்து முறையிடுவதற்காக கிளிநொச்சி–யாழ்ப்பாணம் பஸ் டிப்போக்கள் மற்றும் கோண்டாவில் பஸ் டிப்போ போக்குவரத்து தொடர்பான பாதுகாப்பு உத்தியோகத்தரான சுரேந்திரன் வரை தொடர்பு கொண்டு முயன்று விட்டேன். ஆனால் பயனேதும் கிடைக்கவில்லை. என்னிடம் பஸ் பற்றுச்சீட்டு இல்லாத காரணத்தினால் எனது முறைப்பாட்டைப் புறக்கணித்து விட்டார்கள். என்னதான் இருந்தாலும் முதியவளான என்னை அதுவும், அரச பஸ் சாரதியொருவர் இவ்வாறு மனிதாபிமானற்ற விதத்தில் நடத்தியமை நியாயமானதா? சமூக ஆர்வலர்களே தயவு செய்து இது குறித்து சிந்தித்துப் பாருங்கள். முதியவர்களைப் பேண வேண்டும் என்பது வெறும் வாய்ச்சொல்லில் மட்டும் தான் பேசப்படுகின்றதா? இனிமேலாவது என்போன்ற வயோதிபப் பயணிகளை அன்பு ஆதரவாக நடத்த குறித்த மேலாண்மைப்போக்குடைய பஸ் சாரதி போன்றோர் பழகிக்கொள்ள வேண்டு மென குறிப்பிட விரும்புகிறேன். பயணிகள் மீது மதிப்பு மரியாதை செலுத்தி அவர் களுக்கு உதவ வேண்டியது அரச போக்குவரத்து சேவை சாரதிகளது கடப்பாடு என்பதை குறித்த பஸ் சாரதிக்கு போக்குவரத்துச் சபை நிர்வாகம் உணர்த்தி வைக்குமா?

கு.செல்வமணி. முல்லையடி. பளை.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விபரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதுபவர்களின் விபரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இட்லிப் மாகாணத்தில் தாக்குதல்


சிரியாவின் இட்லிப் மாகாணத்தில் சிரியா ரஷ்யா கூட்டுப் படைகள் நடத்திய தாக்குதலில் 7 சிறுவர்கள் உடல் சிதறிச் சாவடைந்தனர் என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
இடலிப் மாகாணத்தின் ஒரு பகுதி சிரிய அரசுக்கு எதிரன கிளர்ச்சிக் குழுவின் வசமுள்ளது. இந்த மாகாணத்தை மீட்க ரஷ்யாவும், சிரியாவும் இணைந்து கிளர்ச்சிக் குழுவுக்கு எதிராக போர் புரிந்து வருகின்றன.
குறித்த தரப்பால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் 7 சிறுவர்கள் உடல் சிதறிச் சாவடைந்தனர் என பிரிட்டனை மையமாகக் கொண்டு செயல்படும் சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது. இருப்பினும், தன் மீதான குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்துள்ளது. குறிப்பிட்ட அந்த பகுதியில் தங்களது விமானம் தாக்குதலை நடத்தவில்லை என்று ரஷ்ய பாது காப்புத் துறை அமைச்சகம் திட்டவட்டமாக தெரிவித்தது. (ம-எ)

# டொனால்ட் ட்ரம்பின் முதலாவது முழக்கம்

வொஷிங்டன், நவ. 10
என்னை எதிர்த்த, விமர்சித்த மக்களின் அபிப்பிராயங்களை வென்றிட வேண்டுமென்ற நீண்ட போராட்டத்தின் பயனாகவே அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாக நான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன் இவ்வாறு தெரிவித்தார் டொனால்ட் ட்ரம்ப்.
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான ஹிலாரி கிளிங்டனை தோற்கடித்து ட்ரம்ப் ஜனாதிபதியானார். இதனையடுத்து நியூயோர்க்கில் அமைந்துள்ள ஹில்ரன் விடுதியில் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட சில நிமிடங்களில் தனது வாழ்த்துகிறேன். ஹிலாரிக்கும் எனக்கும் மிகக் கடினமான போட்டி நிலவியது. அவரது சேவையை நான் பாராட்டுகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் முழுமையான அமெரிக்கனாக உணர்கிறேன். கட்சிப் பேதங்கள் இன்றி நாம் அனைவரும் ஒற்றுமையைப் பேண வேண்டும். அனைத்துத் தரப்பினருக்காகவுமே நான் செயற்படவுள்ளேன். என்னை எதிர்த்த மக்களிடம் அபிப்பிராயம் பெற வேண்டும் எனப் போராடி உழைத்தேன். நாட்டுக்கு சேவை செய்யும் தருணத்தைப் பெற்றுக் கொண்டேன். நாட்டைக் கட்டியெழுப்புவதும், எம்மை நாம் புதுப்பித்துக் கொள்வதும் மிக முக்கியமானது.




முதலாவது உரையை ஆற்றினார். அதன்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.
"எனக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றி. எனது சக வேட்பாளர் ஹிலாரி கிளிங்ரன் தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் நானும் அவரை எமது சிறு நகரங்களை முன்னேற்றுவதுடன், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அமெரிக்காவுக்கு நன்மை கிடைக்கும் வகையில் ஏனைய நாடுகளுடன் நான் ஒப்பந்தத்தை ஏற்படுத்துவேன்" என ட்ரம்ப் மேலும் தெரிவித்தார். (ம-எ)



3 நாள்கள் பயணமாக இந்தியாவுக்குச் சென்றுள்ள பிரிட்டன் பிரதமர் திரேசா மே, பட்டுச்சேலை கட்டி நேற்று பெங்களூருக்குச் சென்றார். அவரை அம்மாநில முதல்வர் சித்தராமையா வரவேற்றார். பின்னர் அவர் பட்டுச்சேலையில் பெங்களூரில் உள்ள ஸ்ரீ சோமேஸ்வர கோயிலில் வழிபாடுகளை மேற்கொண்டார். (ம-எ)

## கறுப்புப் பணத்தை முடக்க மோடி அதிரடி அறிவிப்பு

இதுவரை காலமும் நடைமுறையில் இருந்து வந்த 500, 1000 ரூபாய் நோட்டுக்களை புழக்கத்தில் இருந்து நீக்க உத்தரவிட்டார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.
ஊழலைக் கட்டுப்படுத்துவதற்காக பல திட்டங்களை பரிசீலித்து வந்த மோடி, நேற்றுமுன்தினம் நள்ளிரவில் இருந்து பழைய ஐந்நூறு, ஆயிரம் ரூபாய் தாள்களை புழக்கத்திலிருந்து நீக்கியுள்ளார். பதிலாக புதிய ஐந்நூறு மற்றும் 2 ஆயிரம் ரூபாய் தாள்களை அறிமுகப்படுத்தியுள்ளார். இந்தியாவின் கறுப்புப் பணப் பதுக்கல்கள் அதிகளவில் நடைபெற்று வந்தன. இவற்றைக் கட்டுப்படுத்த முடியாமல் மத்திய அரசு தடுமாறியது. இதனையடுத்தே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. புழக்கத்திலிருந்து மாற்றப்பட்ட தாள்களை எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் அரச வங்கிகளில் மாற்றலாம் எனவும் மத்திய அரசு அறிவித்தது. இதன் மூலம் பதுக்கப்பட்ட பணத்துக்கான பெறுமதிகள் இல்லாமல் போயின. கறுப்புப் பணத்தை வைத்திருப்பவர்கள் அவற்றை மாற்ற முற்படும்போது பதுக்கல் தொகைகள் அம்பலமாகும் என்பது பலரதும் கணிப்பாக உள்ளது. (ம-எ)





# ட்ரம்ப் ஜனா... கைமாறியது ... மலர்ந்தது கு...

உலகமே எதிர்பார்த்துக் காத்திருந்த 58ஆவது அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மிகப்பெரும் வித்தியாசத்தில் வெற்றிபெற்று அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாகத் தெரிவானார் டொனால்ட் ட்ரம்ப்.
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. குடியரசுக் கட்சியின் வேட்பாளராக டொனால்ட் ட்ரம்ப்பும் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக ஹிலாரி கிளிங்டனும் போட்டியிட்டனர். 538 தேர்தல் தொகுதிகளில் 276 தொகுதிகளில் வெற்றிபெற்று அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவானார் ட்ரம்ப். ஹிலாரிக்கு 218 தொகுதிகள் கிடைத்தன. 5 கோடியே 70 லட்சத்து 35 ஆயிரத்து 285 பேர் ட்ரம்புக்கு ஆதரவாகவும், 5 கோடியே 60 லட்சத்து 24 ஆயிரத்து 662 பேர் ஹிலாரிக்கு ஆதரவாகவும் வாக்களித்தனர்.
ஜனாதிபதித் தேர்தலில் திருப்பத்தை ஏற்படுத்தும் என அமெரிக்க அரசியல் வரலாற்றில் அறியப்பட்ட புளோரிடா, ஜார்ஜியா, ஓஹியோ, வடக்கு கரோலினா, வடக்கு டகோடா, தெற்கு டகோடா, நெப்ராஸ்கா, கான்ஸாஸ், ஒக்லஹாமா, டெக்சாஸ், வயோமிங், இண்டியானா, கெண்டக்கி, டென்னிஸ்ஸி, மிஸிஸிப்பி, அர்கான்ஸாஸ், லூசியானா, மேற்கு வர்ஜீனியா, அலபாமா, தெற்கு கரோலினா, மான்டோனா, இதாகோ, மிசௌரி மற்றும் பென்சில்வேனியா மாகாணங்களிலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டி வியக்க வைத்தார் ட்ரம்ப்.
அமெரிக்காவின் அயலுறவுத்துறை அமைச்சராகப் பதவி வகித்த காரணத்தால் ஹிலாரிக்கு ஆரம்பத்தில் பெரும் ஆதரவு இருந்தது. அதேநேரம் ட்ரம்ப் நிச்சயம் தோல்வியடைவார் என்றே கருதப்பட்டது. ட்ரம்ப் தோற்றுவித்த சர்ச்சைகளே இவற்றுக்குக் காரணம். பெண்களை விலை மாதுக்கள் எனவும், மெக்சிக்கோவுக்கு எதிராக சுவர் எழுப்பப்படும்

எனவும், ரஷ்யா...
எனவும் ட்ரம்ப் தெ...
பெரும் எதிர்ப்பைச்...
மீதான எதிர்ப்புக்க...
ஆதரவு அலைகள...
யில் ஹிலாரி மீ...
முன்வைத்தார் ட்ர...
ஹிலாரி, அமெரி...
சராக இருந்தகால...
தனது தனிப்பட்ட...
னார் என அவர்...
ஆயிரம் மின்ன...
எனவும் தெரிவித்...
பதிலளித்த ஹில...
சலை அரச தேவை...
கொண்டதுடன் அ...
வில்லை என வா...
தேர்தலுக்கு 11 ந...
அமெரிக்க புலனா...
தப்பட்ட குற்றச்சாட்...
இந்த அறிவிப்...
கீழானது. ஹிலா...
கவரப்பட்டன. பின்...
புலனாய்வுத்துறை...
மக்களின் அபிப்...
முடியவில்லை.
இந்த நிலையில் இ...
யைப் பதிவுசெய்த...
சேர்ந்த ஜோர்ஜ்...
பின்னர் ஆட்சிப்...
கட்சியைச் சேர்ந்த...
கக் கட்சியடமிரு...
கைமாறியுள்ளது.

## வில்லங்கமான விவாதங்க...

அமெரிக்கத் தேர்தலுக்காக நடைபெற்ற அத்தனை நேரடி விவாதங்களி...
ட்ரம்ப் தோல்வியைச் சந்தித்தார்.
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் குடியரசுக் கட்சி, ஜனநா... கட்சி ஆகிய இரு கட்சிகளின் முக்கிய வேட்பாளர்கள் மூன்று நே... விவாதங்களில் பங்குபற்றுவார்கள். விவாதத்தைக் நேரடியாகக் காணும்... கள் அவர்களில் வெற்றிபெற்றவர் யார் என அறிவிப்பார்கள். ட்ரம்ப், ஹி... இருவருக்கும் இடையிலான மூன்று விவாதங்களில் மூன்றிலும் ஹிலா... வெற்றிபெற்றார். இதனால் ட்ரம்புக்கான வாய்ப்பு அறவே இல்லை எ... நிலையே இருந்தது. ஏனெனில் கடந்த தேர்தல்களில் நேரடி விவாத... வெற்றிபெறுபவரே ஜனாதிபதியாகிய வரலாறுகள் உள்ளன. ஆனால் இ... வரலாற்றை மாற்றியமைத்துள்ளார் ட்ரம்ப்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...திபதி
...ஆட்சி
...டியரசு

...யாவுடன் நட்புறவு பாராட்டப்படும் ... தெரிவித்த கருத்தக்கள் அவருக்கு ...பைச் சம்பாதித்துக் கொடுத்தன. ட்ரம்ப் ...புக்கள் அனைத்தும் ஹிலாரிக்கான ...களாக மாறிக்கொண்டிருந்த நிலை ... மீது மின்னஞ்சல் குற்றச்சாட்டை ...ர் ட்ரம்ப்.
...மரிக்க அயலுறவுத்துறை அமைச் ...லப் பகுதியில் அரச தேவைகளுக்காக ...ட்ட மின்னஞ்சல்களை பயன்படுத்தி ...வர் குற்றஞ்சாட்டினார். தவிர 30 ...ன்னஞ்சல்களை அழித்துவிட்டார் ...வித்தார். ட்ரம்ப்பின் குற்றச்சாட்டுக்கு ...ஹிலாரி, தனது தனிப்பட்ட மின்னஞ் ...தவைக்கு பயன்படுத்தியதை ஏற்றுக் ... அதைவைத்து மோசடிகள் செய்ய ...வாதிட்டார்.
...1 நாள்கள் மீதமிருந்த நிலையில் ...னாய்வுத்துறை ஹிலாரி மீது சுமத் ...சாட்டை விசாரிப்பதாக அறிவித்தது. ...ப்பை அடுத்தே நிலவரம் தலை ...ஹிலாரியின் வாக்குகள் ட்ரம்ப்பால் ...பின்னர் ஹிலாரி குற்றமற்றவர் என ...முறை தெரிவித்தபோதிலும் மீண்டும் ...பிப்பிராயத்தை அவரால் கைப்பற்ற ...
...ல் இவ்வாறான அபாரமான வெற்றி ...செய்தார் ட்ரம்ப். குடியரசுக் கட்சியைச் ...ர்ஜ் டபிள்யு. புஷ்ஷின் இவருக்குப் ...சிப்பீடம் ஏறிய ஒபாமா ஜனாநாயகக் ...ந்தவர். தற்போது மீண்டும் ஜனநாய ...இருந்து குடியரசுக் கட்சிக்கு ஆட்சி ...ாது. (ம-எ)

# டொனால்ட் ட்ரம்ப் எனும் யதார்த்தம்



அமெரிக்காவின் 45ஆவது ஜனாதிபதியான குடியரசுக் கட்சியைச் சேர்ந்த டெனால்ட் ட்ரம்ப், 1946 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் திகதி நியூயோர்க்கில் பிறந்தார். நியோர்க் மில்ரி அக்கடமியில் கல்வி கற்ற ட்ரம்ப், பென்சல்வேனியா பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை முடித்தார்.
செல்வந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ட்ரம்ப் 1971 ஆம் ஆண்டு தனது தந்தையாரின் நில விற்பனை வர்த்தகத்தைத் தானும் பொறுப்பேற்று நடத்த ஆரம்பித்தார். அத்துடன் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிப்பாளராகவும், கட்டட ஒப்பந்த நிறுவன உரிமையாளராகவும், பிரபல வர்த்தகராகவும் விளங்கினார்.
உலகின் பல பகுதிகளில் ட்ரம்ப்புக்குச் சொந்தமாக வானுயர்ந்த உல்லாச விடுதிகள் காணப்படுகின்றன. அமெரிக்க செல்வந்தர்களுள் ஒருவராக திகழ்கிறார். 1996 - 2015 ஆம் ஆண்டு வரை அமெரிக்க அழகி, உலக அழகிப் போட்டிகளுக்கான உரிமத்தைக் கொண்டிருந்தார். 1977ஆம் ஆண்டு, இவன்கா சில்னிகொவாவை மணம்முடித்தார். இவர்களுக்கு 3 பிள்ளைகள் உள்ளனர். 1990ஆம் ஆண்டு இவன்கா விவாகரத்து கோரினார். இதனை அடுத்து அவர் 1992ஆம் ஆண்டில் இருந்து, மர்லா மேப்பில்சுடன் இணைந்து வாழ்ந்து திருமணமும் முடித்துக் கொண்டார். இவர்களுக்கு ஒரு மகள் பிறந்தார். 1997ஆம் ஆண்டு இருவரும் விவாகரத்துப் பெற்று பிரிந்தனர். 1998ஆம் ஆண்டு தற்போதைய மனைவி மெலன்யாவுடன் தொடர்பு ஏற்பட்டது. 2005ஆம் ஆண்டு மெலன்யாவைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு ஒரு மகன் உள்ளார்.
தனது முதல் மனைவியருக்கு பிறந்த குழந்தைகளை ட்ரம்ப் கைவிட்டுவிடவில்லை. அவர்கள் அனைவருக்கும் தனது நிறுவனங்களில் நிர்வாகப் பதவிகளைக் கொடுத்துள்ளார். பரப்புரைக் கூட்டங்களில் தனது பிள்ளைகளை பங்கேற்கச் செய்தார். மகள் இன்வாகா தேர்தல் பரப்புரைகளில் முக்கிய நபராக செயற்பட்டார்.
ஊடகங்கள் மூலம் மிகவும் பிரபல்யம் அடைந்த இவர், பல சர்ச்சைகளிலும் சிக்கினார். யதார்த்தமான விதத்தில் பேசும் இவரது ஆற்றல் மக்கள் மனதைக் கவர்ந்திருந்தது. பிரபல்யமாவதை மிக குறிவைத்து இவர் செயற்படுகிறார் என பல முறை ஒபாமாவினால் அவர் விமர்சிக்கப்பட்டார். இவர் கோல்ப் விளையாட்டு நிறுவனம், பல ஹோட்டல்கள், ட்ரம்ப் பல்கலைகழகம் ஆகியவற்றுக்கும் உரிமையாளராக உள்ளார்.
2011 ஆம் ஆண்டு தற்போதைய ஜனாதிபதியான ஒபாமாவின் பிறந்த இடத்தை கேள்விக்குள்ளாக்கி அமெரிக்க அரசியலில் நுழைந்தார். 2015 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சியின் வேட்பாளராக தன்னை அறிவித்து தேர்தலில் போட்டியிட்டார்.
ரஷ்யாவுடன் நட்புறவு, ஐ.எஸ். ஐ.எஸ்., உலக ஆதிக்கம் போன்ற விடயங்களில் இவரது யதார்த்தமான பேச்சு பலரையும் கட்டிப் போட்டது. மொத்தத்தில் ட்ரம்ப் ஒரு யதார்த்தம். (ம-எ)



## தேர்தலில் வன்முறை

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது கலிபோர்னியா மாகாணத்தில் தேர்தல் வன்முறை இடம்பெற்றது என அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. வாக்குப் பதிவு நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், கலிபோர்னியா மாகாணத்தின் அசுசா வாக்குப் பதிவு மையம் அருகே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இந்த சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். பலர் காயம் அடைந்துள்ளனர். சந்தேக நபர் இன்னும் கைது செய்யப்படவில்லை.
மர்ம நபர் ஒருவர் ஆயுதங்களுடன் வாக்குப் பதிவு மையத்திற்கு வந்து, அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார் என பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப் பட்டது. விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-எ)

# அதிக வயதில் வாகை சூடியவர்




அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அதிக வயதில் அமெரிக்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றவர் என்ற சிறப்பைப் பெற்றார்.
227 ஆண்டுகள் பழைமையான வரலாற்றை உடைய அமெரிக்க தேர்தல் களத்தில், மிக அதிக வயதில் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றவர் என்ற சிறப்பு முன்னாள் ஜனாதிபதிகளில் ஒருவரான டொனால்ட் ரீகன் என்பரிடமே இருந்தது. இவர் தனது 69 ஆவது வயதில் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார். ட்ரம்புக்கு தற்போது 70 வயது. அடுத்த ஜனாதிபதியாகப் பொறுப்பேற்பதன் மூலம் அதிக வயதில் அமெரிக்க ஜனாதிபதியானவர் என்ற சிறப்பை அவர் பெற்றார். (ம)

## பெண்கள் புறக்கணிப்பு



நீண்டதும் உயரியதுமான வரலாற்றைக் கொண்ட அமெரிக்கத் தேர்தல் களமானது இதுவரை ஒரு பெண் ஜனாதிபதியையேனும் காணவில்லை. அமெரிக்காவின் முதலாவது தேர்தல் 1789ஆம் ஆண்டு நடைபெற்றது. முதல் ஜனாதிபதியாக ஜோர்ஜ் வொஷிங்டன் என்பவரே தெரிவானார். அப்போது சொத்து வைத்திருக்கும் ஆண்கள் மட்டுமே வாக்களிக்க முடியும். 1920 முதல் பெண்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். 44 பேர் இதுவரை ஆட்சிப்பீடம் ஏறியுள்ளனர். அவர்களில் ஒருவர் கூடப் பெண்ணில்லை. ஆனால் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 200 பெண் வேட்பாளர்கள் இதுவரை போட்டியிட்டுள்ளனர். ஆரம்பத்தில் டொனால்ட் ட்ரம்பை விட ஹிலாரி கிளிங்டனுக்கு அதிக வாய்ப்புக்கள் இருந்தன. இதனால் அமெரிக்க வரலாறு மாறப்போகிறது என்று பலராலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ட்ரம்ப் வெற்றிபெற்றதன் மூலம் [illegible] வழங்க தொடர்ந்தும் பெண்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். (ம)

THORN BRAND
Hot Dipped
கல்வனைஸ் முள்ளுக்கம்பி...

நீண்டகாலம் தாக்குப்பிடிக்க கூடியது

THORN BRAND
கம்பி ஆணிகள்
Rs. 3,950/=
Per 25kg Bag
உத்தரவாதம் 25 Kgs

Rs.4,75
என். வைத்தியலிங்கம் அன்ட் கம்பனி (பிறைவட்) லிமிட்டட்
70 கே. சிறில் சி. பெரேரா மாவத்தை, கொழும்பு 13
Hotline: 4 323 100 Tel: (Hunting) 2 433 143, 2 327 669
Fax: 2 435 649, 4 614 822
info@nvclgroup.com www.nvclgroup.com
பழைய சோனக தெரு கிளை தொலைபேசி: 2 327 488, 4 344 114
ரத்மலானை விற்பனை அலுவலகம் தொலைபேசி: 2 638 116, 2 605 092
வவுனியா கிளை தொலைபேசி: 024 4 925 809
94

...கள்



...களிலும்
...நாயகக்
...வ நேரடி
...னும் மக்
...ஹிலாரி
...ளொரியே
...ல என்ற
...ாதத்தில்
...ல் இந்த
(ம-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவம்பர் மாத எண் ஜோதிடப் பலன்கள்

### 3, 12, 21, 30 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு

இந்த மாதம் எதிர்ப்புக்கள் நீங்கும். மேல்மட்ட அரசியல்வாதிகள் உதவுவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பாதியில் நின்ற வீடு கட்டும் பணியைத் தொடங்குவீர்கள். தாய்மாமன், அத்தை வகையில் மதிப்பு, மரியாதைக் கூடும். தாய்வழி சொத்து கைக்கு வரும். மகள் உங்களைப் புரிந்துக் கொள்வாள்.

மகனுக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்புக்கிட்டும். வேற்றுமதத்தவர்கள் அறிமுகமாவார்கள். வர வேண்டிய பணம் கைக்கு வரும். உங்களிடம் பழகும் நண்பர்கள், உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். உங்கள் ரசனைக் கேற்ப வாகனம் வாங்குவீர்கள். சகோதரங்கள் உங்கள் வளர்ச்சிக்குப் பக்கபலமாக இருப்பார்கள். பழைய கடனில் ஒருபகுதியைத் தீர்க்க வழி பிறக்கும். எவரை நம்புவது, நம்பாமல் இருப்பது போன்ற குழப்பங்கள் வரும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். அரசியல்வாதிகளுக்கு எதிர்க்கட்சிக்காரர்கள் உதவுவார்கள்.

**பெண்களுக்கு**

காதல் இனிக்கும். எதிர்பார்த்ததைப்போல் நல்ல வரன் அமையும். வியாபாரம் செழிக்கும். போட்டியாளர்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் கடையை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள். கலைத்துறையினர்கள் உங்கள் திறமையை வளர்த்துக் கொள்ளும் முயற்சியில் இறங்குவீர்கள். வெற்றிப் பாதையில் பயணிக்கும் மாதம் இது.

**அதிர்ஷ்ட திகதிகள்: 3, 1, 9, 10, 27**
**அதிர்ஷ்ட எண்கள்: 3, 9**
**அதிர்ஷ்ட நிறங்கள்: சில்வர் கிரே, மஞ்சள்**
**அதிர்ஷ்ட கிழமைகள்: ஞாயிறு, வெள்ளி**

### 4, 13, 22, 31 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு

இந்த மாததத்தில் எதையும் சாதிக்கும் துணிச்சல் வரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். ஆன்மிகப் பெரியோர், சித்தர்களை சந்தித்து ஆசி பெறுவீர்கள். கோயில் கும்பாபிசேகத்தை முன்னின்று நடத்துவீர்கள். அயல்நாடு செல்ல நுழைவிசைவு கிடைக்கும். வழக்கில் திருப்பம் ஏற்படும். பழைய நகையை மாற்றி புது டிசைனில் வாங்குவீர்கள்.

பூர்வீகச் சொத்தில் சீர்திருத்தம் செய்வீர்கள். உறவினர்களால் ஆதாயம் கிடைப்பதுடன் கௌரவமும் ஒருபடி உயரும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். மாதத்தின் முற்பகுதியில் பிள்ளைகளின் நலனைக் கண்காணிப்பது நல்லது. கர்ப்பிணிப் பெண்கள் எடைமிகுந்தப் பொருள்களை சுமக்க வேண்டாம். தாயாருக்கு நெஞ்சு வலி, கை, கால் வலி,அசதி வந்துப் போகும். அரசியல்வாதிகளின் கோரிக்கையை மேலிடத்தில் ஏற்பர்.

**கன்னிப் பெண்களுக்கு**

பெற்றோருடன் கலந்தாலோசித்து வருங்காலம் குறித்து சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களைத் தீட்டுவீர்கள். பழைய வேலையாள்கள் மீண்டும் பணியில் வந்து சேர்வார்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். கலைத்துறையினர்களுக்கு வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து வாய்ப்பு வரும். விட்டுக் கொடுத்துப் போவதால் வெற்றி பெறும் மாதம் இது.

**அதிர்ஷ்ட திகதிகள்:**
**4, 15, 17, 24, 26**
**அதிர்ஷ்ட எண்கள்:**
**4, 9**
**அதிர்ஷ்ட நிறங்கள்:**
**ப்ரவுன், பிஸ்தா பச்சை**
**அதிர்ஷ்ட கிழமைகள்:**
**திங்கள், சனி**

**நாளை ஐப்பசி-26**
வெள்ளிக்கிழமை -11.11.2016
திதி: துவாதசி மு.இ. 03.04
நட்சத்திரம்: உத்தரட்டாதி மு.இ.10.05
ராகுகாலம்: 10.36-12.06 வரை
சுபநேரம்: 06.06-07.36 வரை

## வடமாகாணத்துக்குத் தேவை கிரிக்கெட்டில் அபிவிருத்தி

கிரிக்கெட்டை அபிவிருத்தி செய்யவும், வளர்த்தெடுக்கவும் வடமாகாணத்துக்கு ஏகப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தேவைப்படுகின்றன.

கால்பந்திலும், தேசியமட்ட தடகளத்திலும், உள்ளக விளையாட்டுக்களிலும் வடமாகாணத்துக்கு தேசியத்தில் அவ்வப்போது சில பதக்கங்களும் சில பிரதிநிதித்துவங் களும் கிடைக்கின்ற போதிலும், கிரிக்கெட்டைப் பொறுத்த வரை தொடர்ந்து பின்னடைவையே சந்தித்து வருகிறது. கிரிக்கெட்டில் அண்மைக் காலமாக வடமாகாணம் மிகப்பெரும் அணிகளை வீழ்த்தியதாகவோ அல்லது அந்தஸ்துபெற்ற கிண்ணமொன்றைக் கைப்பற்றியதாகவோ நினைவிலில்லை.

இத்தகைய பின்னடைவுக்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. ஒன்று, பன்னாட்டுத் தரமுடைய மைதானம் வடக்கிலில்லை. கால்பந்தாட்டத்துக்கு அரியாலை கால்பந்து பயற்சி நிலைய மைதானம், யாழ். துரையப்பா விளையாட்டு மைதானம், வவுனியா நகரசபை மைதானம், ஏனைய பிரதேசத்திலுள்ள மைதானங்கள் ஆகியன இருந்த போதிலும், கிரிக்கெட்டுக்கு என்று பன்னாட்டுத் தரத்திலான மைதானமொன்று இல்லை. யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் அமைந்துள்ள மைதாமொன்றே கடினப்பந்து ஆடுகள வசதியுடன் உள்ளது.

மைதானமொன்றை அமைப்பதற்கு இலங்கை கிரிக்கெட் சபை இணக்கம் தெரிவித்தபோதிலும், அதற்குரிய இடத்தைத் தேர்ந்தெடுப்பதில் சிக்கல் மேல் சிக்கல்கள் தொடர்ந்து வந்தன. பல இடங்கள் பரிசீலித்துப் பார்த்த போதிலும் எவையும் பயனளிக்காத நிலையில், அண்மையில் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட இலங்கை கிரிக்கெட் சபையின் குழு, மண்டைதீவு அல்லது கோவிலாக் கண்டி என இரு இடங்களைப் பரிசீலித்துப் பார்க்கத் திட்டமிட்டுள்ளது. எது எப்படியோ ஒரு பன்னாட்டு பெற்ற மைதானம் அமையப்பெற்றால் அது திருப்பு முனையாகவே அமையப்பெறும் என்பதில் சந்தேகமில்லை.

இரண்டாவது, கிரிக்கெட்டுக்கு என வடக்கு மாகாண அணிகளை உள்வாங்கி, மிகப்பெரிய தொடர்கள் நடத்தப்படுவது மிகக் குறைவாகவே உள்ளது. கால்பந்தாட்டத்தைப் பொறுத்தவரை ஏகப்பட்ட தேசியத் தொடர்கள் நடத்தப்படுகின்றன. சமபோச கிண்ணத் தொடர், கொத்மலை கிண்ணத் தொடர் ஆகியவற்றை முக்கியமானவையாகக் குறிப்பிடலாம். வடமாகாணத்திலும் மைலோ கிண்ணத் தொடர், ஏனைய கழகங்களின் தொடர்கள் என ஒன்றுமாறி ஒன்றாக அணிகள் விளையாடிக் கொண்டே இருக்கின்றன. இதனால் கால்பந்தாட்டத்தில் வடக்கு மாகாணத்தின் அணிகள் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியிருக்கின்றன. உதாரணமாக, அண்மையில் நடைபெற்றுமுடிந்த பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கால்பந்தாட்டத்தில் 15 வயதுக் குட்பட்ட ஆண்கள் பிரிவில் வடக்கு அணிகளான சென். பற்றிக்ஸ் கல்லூரி தங்கப் பதக்கத்தையும், சென். ஹென்றிஸ் கல்லூரி வெள்ளிப் பதக்கத்தையும், மன்னார் சென். லூசியஸ் கல்லூரி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றின.




சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று முடிந்த கொத்மலை கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத்தில் கொழும்பு சாகிராக் கல்லூரி சம்பியனானாலும், சென். பற்றிக்ஸ் கல்லூரி இரண்டாம் இடத்தையும், சென். ஹென்றிஸ் கல்லூரி அணி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றின. ஆனால் கிரிக்கெட்டில் தேசியத் தொடர்களுக்கு பெரும் பஞ்சமே நிலவுகிறது. வடக்கு மாகாணத்தில் வருடாவருடம் நடைபெறும் முரளிக் கிண்ணத் தொடரொன்றே வடக்கின் கணிசமான அணிகள் பங்குபற்றும் ஒரே தொடராகவும் உள்ளது. தொடர் ஆட்டங்கள் இல்லாத காரணத்தாலும், போதிய வளங்கள் இல்லாத காரணத்தாலும் முரளிக் கிண்ணத் தொடரில் வடக்கு அணிகள் பெரும் தாக்கத்தை செலுத்தியதாகக் காணவில்லை.

இந்த நிலை மாற்றம்பெற வேண்டுமாயின் கிரிக்கெட்டை வளர்த்தெடுப்பதற்கான திட்டங்களையும், தொடர்ச்சியான தொடர்களையும் விரைந்து முன்னெடுப்பது அவசியமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மேடையில் மட்டும்தானா வாக்குறுதிகள்?

இரா.ரிஷாத்

உலகில் தமிழ் கூறும் நல்லுலகில் தனக்கெனத் தனி அத்தியாயத்தைக் கொண்டு தமிழர் நெஞ்சங்களில் ஆழப்பதிந்துள்ளவர் தங்கத்தாத்தா என அனைவராலும் அழைக்கப்படும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர். இந்தப் பழம்பெரும் மூத்த புலவரது நினைவுச்சின்னம், நவாலி மகா வித்தியாலயத்துக்கு முன்னால் வெண்கலச் சிலையாக வானுயர்ந்து நிற்கின்றது.

புலவரது சிலையைக் கண்டவுடன் நவாலி மகா வித்தியாலயத்துக்கு வருபவர்கள் தலை வணங்கி ஒருகணம் மௌனித்து நிற்பதைக் காணமுடிகிறது. அந்தளவுக்கு அவரது புகழ் நவாலியில் மட்டுமன்றி உலகெங்கும் வாழும் தமிழர் இதயங்களில்- ஆழப்பதிந்த புலவராக, ஆசிரியராக, கவிஞனாக, பாடலாசிரியனாக, எழுத்தாளனாக உயர்ந்து நிற்கிறது. இதேபோல புலவருக்குச் சமாந்தரமாக பார்வதி வித்தியாலய ஸ்தாபகர் (தற்போதைய நவாலி மகா வித்தியாலயம்) பண்டிதர் தம்பையாவின் சிலையும் அமையப்பெற்றுள்ளது. இந்த வித்தியாலயம் 2010 இல், நூற்றாண்டு விழாவை மிகக் கோலாகலமாகக் கொண்டாடியது.

இதில் வடமாகாணத்தைச் சேர்ந்த- கல்வியுடன் செயற்பட்ட செயலாளர், மாகாணப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர் எனப் பலதரப்பட்ட கல்விமான்கள், கல்வியில் புலமை சார்ந்த அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தப் பெரியார்களிடம் அவ்வூரைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து, பாடசாலைக்கு 120X30 அளவு கொண்ட மூன்று மாடிக் கட்டடம், 80 X 30 அளவு கொண்ட இருமாடிக் கட்டடம், அதிபர்- உப அதிபர்கள், ஆசிரியர்களுக்கான பிரத்தியேகக் கட்டடம், பிரதான மண்டபம், களஞ்சிய அறை, உணவூட்டலுக்கான பிரத்தியேகக் கட்டடம் மற்றும் போட்டோக் கொப்பி, இணைய வசதி கொண்ட கணினிகள், புறஜெக்டர், தொலைநகல் போன்றவசதிகள் வழங்குமாறு கோரிக்கை விடுத்தபோது, இவையாவும் ஓரிரு வருடத்தில் முழுமை செய்து வழங்கப்படும் என ஓய்வுபெற்ற மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனால் உறுதியளிக்கப்பட்டு நூற்றாண்டு விழா மேடையில் பேசப்பட்டது. இந்தப் பேச்சுக்கள் யாவும் உதயன் பத்திரிகையில் பிரசுரமாகி, அது (ஆவணமாக உள்ளது) இன்றும் பொது அமைப்பிடம் உள்ளது.

பாடசாலைக்கு உள்ளே சென்று பார்த்தால், அது இருண்ட மண்டபங்களாக- இடிந்து விழும் கொட்டகைகளாக, வசதிகள் எவையுமற்றுக் காட்சியளிக்கிறது. பாடசாலை முதல்வர் த.மாதவன் இலங்கை அதிபர் சேவை தரம் (2-1) தலைமையில் பாடசாலையில் 26 ஆசிரியர்கள் தம்மை அர்ப்பணித்துக் கல்விப் பணியை முழுமையாக வழங்குகின்றனர். விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா, ஆசிரியர் தினம், புலவர்தினம் உள்ளிட்ட அனைத்து நிகழ்வுகளும் மாணவர்களை மையப்படுத்தி நேர்த்தியாக இடம்பெறுகின்றன. இவ்வாறு இருந்தபோதும், நவாலி மகா வித்தியாலயம் பௌதிகவளச் சூழல் அற்றுக் காணப்படுகிறது. கட்டட வசதி, நூலக ஆய்வுகூட வசதி மற்றும் போட்டோக் கொப்பி இயந்திரம், கணினி வசதி, ஏனைய வசதி வாய்ப்புக்கள் எவையுமின்றி மொத்தத்தில் இந்தப் பாடசாலை வளங்கள் என்பது பூச்சிய நிலையிலேயே உள்ளன.

உண்மையில் இவ்வாறான வளங்களைக் கல்வி அதிகாரிகள், பணிப்பாளர்கள் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னரே வழங்கியிருக்க வேண்டும். எனினும், இந்த 21ஆம் நூற்றாண்டிலும் மிலேனியம் ஆண்டு கடந்த நிலையிலும் தகவல் யுகம் உச்சத்தை அடைந்துள்ள நிலையிலும், நவாலி மகா வித்தியாலயம் 100 ஆண்டு மேலும் பின்தள்ளப்பட்டுள்ளது.

இத்தகைய வளப் பற்றாக்குறைகள் இங்கு நிலவுவதனால், புதிய மாணவர்கள் இந்தப் பாடசாலைக்கு வருவதற்குத் தயங்குகின்றனர். அதேநேரம், தற்போது கல்வி கற்கின்ற தமது பிள்ளைகளுக்கு உச்சளவான சகல வளப் பயன்பாடும் வித்தியாலயத்தில் கிடைக்குமா எனப் பெற்றோர்கள் ஏங்குகின்றனர். எல்லாவற்றுக்கும் முழுமைக் காரணம், வடக்கு மாகாணக் கல்வி அதிகாரிகளே. வெள்ளைத் தாளில் பெறுபேறுகளை அதிகாரிகள் கணக்கிட முன்னர், சகல வளங்களையும் பாடசாலைக்கு வழங்குங்கள். அதன்பின் கணக்கிடுங்கள். அடைவு மட்டங்களை அளவிடுங்கள். கல்விக்காக வரவு செலவுத் திட்டத்தில் நல்லாட்சித் தலைவர்களான மைத்திரி- ரணில் அரசு நிதியை அள்ளி வழங்குகின்றது. கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் நலிவுற்ற பாடசாலையை நோக்கி நகருகின்றார். தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றுகின்றார்.

> தற்போது கல்வி கற்கின்ற தமது பிள்ளைகளுக்கு உச்ச அளவான சகல வளப் பயன்பாடும் வித்தியாலயத்தில் கிடைக்குமா எனப் பெற்றோர்கள் ஏங்குகின்றனர். எல்லாவற்றுக்கும் முழுமைக் காரணம், வடக்கு மாகாணக் கல்வி அதிகாரிகளே. வெள்ளைத் தாளில் பெறுபேறுகளை அதிகாரிகள் கணக்கிட முன்னர், சகல வளங்களையும் பாடசாலைக்கு வழங்குங்கள். அதன்பின் கணக்கிடுங்கள். அடைவு மட்டங்களை அளவிடுங்கள். கல்விக்காக வரவு செலவுத் திட்டத்தில் நல்லாட்சித் தலைவர்களான மைத்திரி- ரணில் அரசு நிதியை அள்ளி வழங்குகின்றது. கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் நலிவுற்ற பாடசாலையை நோக்கி நகருகின்றார். தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றுகின்றார்.

ஆதலால், இனியும் தாமதியாது இந்தப் பாடசாலை அபிவிருத்தியிலும் அதிகாரிகள் அக்கறை காட்ட வேண்டும்.

மருதனார்மடம் வலயக் கல்விப் பணிப்பாளர், எமது வலி. தென்மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் நவாலி மகா வித்தியாலயத்தைக் கண் திறந்து பார்க்க வேண்டும், விழிக்க வேண்டும்.

இந்தப் பாடசாலையின் தேவைகளை உடனே நிறைவேற்ற முன்வரவேண்டும். இல்லாவிடில், நவாலி மகா வித்தியாலயம் என்ற பாடசாலை ஒன்று உள்ளது என்பதை வடக்கு மாகாணக் கல்வி அதிகாரிகள் மறந்திடவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றில் இன்றைய தினம்

1580 - அயர்லாந்தில் டன் அன் ஒயிர் எனும் இடத்தில் ஆங்கிலப் படைகளால் மூன்று நாள் முற்றுகையின் பின், 600 பேர் வரை தலை துண்டிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

1847 - ஸ்ரீபன் விற்னி பயணிகள் கப்பல், தெற்கு அயர்லாந்தில் மூடு பனி காரணமாக, விபத்துக்குள்ளாகி அதிலிருந்த 110 பேரில் 92 பேர் உயிரிழந்தனர்.

1940 - றோமானியா வறான்சியா நிலநடுக்கத்தில் 1000 பேர் வரை உயிரிழந்தனர். 4000 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

1983 - பில்கேட்ஸினால் விண்டோஸ் 1 அறிமுகப்படுத்தப்பட்டது.

1989 - பேர்லின் சுவர் அகற்றும் பணி தொடங்கியது.

1992 - இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக மங்களமுனசிங்கவின் யோசனையை நிராகரித்துத் தொண்டமான் கடிதம்.

1992 - மணலாறில் அதிரடி 7 படையினர் சாவு. மேலும் பல படையினருக்குக் காயம்.

2006 - நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் சுட்டுப் படுகொலை; கொழும்பில் கொடூரம்.

## உலகை வெல்வாய்!

'தமிழை' உச்சரித்துப் படித்துக் கொள்
'ஆங்கிலத்தை' பேசிப் பழகிக் கொள்
'கணக்கை' கனவிலும் போட்டுப் பார்த்துக்கொள்
'அறிவியலை' ஆராய்ந்து பார்த்து அறிந்துகொள்
'வரலாற்றை' முன்னோரை நினைத்துப் புரிந்துகொள்
'புவியியலை' இயற்கையை நினைத்துத் தெரிந்துகொள்
'சமூகவியலை' சுற்றுச்சூழலை பார்த்து உணர்ந்துகொள்
'கணினியை' எதிர்கால வாழ்க்கைக்கு கற்றுக்கொள்
'ஏனைய கலைகள்' யாவையும் ஏற்றுக் கொள்
இத்தனை வழியில் முயற்சி செய்தால்
உலகை நீ வெல்வாய்

சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின்அஞ்சல் முகவரிக்கு அல்லது **361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.






## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



## தாழ்வு மனப்பான்மையை அகற்றுவோம்



இடியுடன் கூடிய கனமழை பெய்து கொண்டிருந்தது. மழை நீரில் நனைந்தபடி, கத்திக் கத்திச் சென்று கொண்டிருந்தது தவளை. அதைப் பின் தொடர்ந்து பாம்பு ஒன்று வந்தது.

தவளை, பாம்பைப் பார்த்தது.

"பாம்பே! நீ எதற்காக என்னைப் பின் தொடர்கிறாய்? உனக்கு என்ன வேண்டும்? என்னைப் பிடித்துச் சாப்பிட வேண்டுமென்றால் சாப்பிட்டுக் கொள்," என்றது.

"தவளையே! நீ என்னிடம் உனது உயிரையே வெறுத்துப் பேசுகிறாயே! எதனால் இப்படிப் பேசுகிறாய்?" என்றது பாம்பு.

"பாம்பே! எனக்கு வாழவே பிடிக்கவில்லை. அதனால், நான் வாழ்க்கையே வெறுத்தபடி பேசுகிறேன்," என்றது தவளை.

"எதனால் உன் வாழ்க்கை வெறுப்பானது?" என்று கேட்டது பாம்பு.

"பாம்பே! எனக்கு உதவி செய்திட நண்பர்களும் இல்லை; உறவினர்களும் இல்லை; எல்லோருமாக சேர்ந்து என்னை வெறுத்துவிட்டார்கள்," என்றது தவளை.


"தவளையே! நீ எதற்காக மற்றவர்களிடம் உதவி பெற வேண்டும்? நீ மற்றவர்களிடம் உதவி பெற்றிட வேண்டும் என்ற எண்ணத்தை போக்கிவிடு.

"எப்போதும் தன்னம்பிக்கையுடன் வாழ்ந்திடு. நான் இப்போது மனது வைத்தால், உன்னைப் பிடித்து விழுங்கிவிட முடியும். ஆனால், நானோ நீ நன்றாக வாழவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்," என்றது பாம்பு.

அதைக் கேட்ட தவளை, தன் தாழ்வு மனப்பான்மையை விட்டுவிட்டு, தன்னம்பிக்கையுடன் வாழ நினைத்தது.



## பொங்கூசிப் பாறை



பொங்கூசிப் பாறைகள் மற்றும் தொங்கூசிப் பாறைகள் என்பவை, ஒரு சுண்ணாம்புப் பாறைக் குகையின் மேல் கூரையிலிருந்து சொட்டு சொட்டாக வடியும் தண்ணீரால் உருவாகின்றன. தண்ணீரில் கரைந்துள்ள கல்சியம் கார்பனேட், குகையின் கூரையிலிருந்து தொங்குகிற நீண்ட, உறைந்து தொங்கும் நீர்த்துளி - வடிவிலான படிமானங்களை உருவாக்கு கிறது. இவை தான் தொங்கூசிப் பாறைகள் என அழைக்கப்படுகின்றன. தொங்கூசிப் பாறைகளிலிருந்து பெருங் குகையின் தரைக்குள் தண்ணீர் சொட்டு சொட்டாக வடிகையில், அத்தரையில் கல்சியம் கார்பனேட்டும் படிமானமாகி, பொங்கூசிப் பாறை என்று அழைக்கப் படுகிற குறுகலான குத்தூசியாக குவிய ஆரம்பிக்கிறது. காலப்போக்கில், பொங்கூசிப் பாறையும், தொங்கூசிப் பாறையும் உண்மையிலேயே ஒன்றை ஒன்று சந்தித்து, தரையிலிருந்து கூரை வரை ஒரு தூண் போன்ற அமைப்பை உருவாக்கிப் பார்ப்பவர்களை, 'வாவ்' என வாய்பிளக்க வைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்கன் கட்லெட்

### தேவையான பொருள்கள்

கொத்திய சிக்கன் – அரை கிலோ
உருளைக்கிழங்கு – அரை கிலோ
உரித்த பச்சை பட்டாணி – 100 கிராம்
பச்சை மிளகாய் – 25 கிராம்
பெரிய வெங்காயம் – ஒன்று
பூண்டு – 4 பல்
இஞ்சி – ஒரு அங்குலத் துண்டு
பட்டை – ஒரு அங்குலத் துண்டு
சீரகம் – அரை தேக்கரண்டி
முட்டை – 4
பாண் தூள் – ஒரு கப்
கொத்தமல்லித் தழை – சிறிய கட்டு
எண்ணெய் – பொரிப்பதற்கு
உப்பு – தேவையான அளவு

### செய்முறை

சிக்கனை எலும்பு நீக்கி நன்கு சின்னனாக வெட்டிக் கொள்ளவும். சிக்கன், உருளைக்கிழங்கு, பட்டாணி ஆகியவற்றை தனித்தனியாக உப்புப் போட்டு 10 நிமிடம் வேக வைத்துக் கொள்ளவும்.
இஞ்சி, பூண்டை அரைத்துக் கொள்ளவும். பட்டை, சீரகம் இரண்டையும் பொடித்துக் கொள்ளவும்.
வெங்காயம், பச்சைமிளகாய், மல்லித் தழை ஆகியவற்றை பொடியாக நறுக்கவும்.
உருளைக்கிழங்கை மசித்துக் கொண்டு மேற்கண்ட அனைத்து பொருள்களையும் சேர்த்து, தேவையான உப்புப் போட்டு பிசைந்து உருண்டைகளாக பிடித்து கட்லெட் வடிவில் தட்டி வைக்கவும்.
முட்டையை நன்கு அடித்துக் கொண்டு தட்டி வைத்த கட்லெட்டை முட்டையில் தோய்த்தெடுத்து பாண் தூளில் புரட்டி, எண்ணெயில் பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும். சிக்கன் கட்லட் தயார்.





தலைமுடியை சுயாதீனமாக விடுவது தற்போது நாகரிகமாக மாறி வருகிறது. அதிலும் ஒரு பகுதிக்கு மட்டும் தலைமுடியை எடுத்து விடுவது மிக அண்மைக்காலத்து நாகரிகமாகும். பலர் முயற்சி செய்கிற போதும் அவை மிகச்சிறப்பாக அமைவதில்லை. காரணம் பின்தலையின் சிறிய தலை முடிகள் எதிர்ப்பக்கத்தில் வந்து அலங்காரத்தை குலைக்கும். அவ்வாறில்லாமல் சிறப்பாக அமைக்க கீழ்க்காணும் வழிமுறையைப் பின்பற்றுங்கள்.

1. தலையின் பின் பகுதி முடியை பிரத்தியேகப் படுத்தவும். எந்தப் பகுதிக்கு தலை முடியை சுயாதீனமாக விடப் போகின்றீர்களோ, அப்பகுதிப் பக்கமாக பின்தலை முடியை கூட்டி சிறிய வூல் பாண்ட் இட்டுக் கொள்ளுங்கள்.

2. ஏனைய தலை முடியை அப்பகுதிக்கு சுயாதீனமாக விட்டுக் கொள்ளுங்கள். நேர்த்தியாக இருக்கும்.



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 500 | – | 1000 | 700 | – |
| நண்டு | 250 | 400 | 200 | – | 500 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | – | 800 | 600 | – |
| பாரை | 550 | 500 | 400 | – | 600 | 600 | 350 |
| சுறா | 500 | 500 | 500 | – | 800 | 700 | 500 |
| சீலா | 300 | 400 | 300 | – | 450 | 300 | 350 |
| விளை | 650 | 500 | 300 | – | 500 | 400 | 350 |
| முரல் | 300 | 400 | 300 | – | 400 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | – | 400 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 800 | 300 | – | 500 | 500 | – |
| ஓரா | 400 | 300 | 300 | – | 450 | 300 | 300 |
| திரளி | 300 | 200 | 100 | – | 300 | 200 | 200 |
| நகரை | 250 | 200 | 100 | – | 400 | – | 250 |
| சூடை | 150 | 100 | 100 | – | 120 | 150 | – |
| ஒட்டி | 300 | 150 | 200 | – | 300 | 200 | 200 |
| திருக்கை | 150 | 250 | 200 | – | 400 | 300 | 130 |
| மதனம் | 150 | 150 | – | – | 300 | 200 | 200 |
| கொய் | 100 | 100 | 50 | – | 80 | 100 | – |
| பாலை | 400 | 200 | 300 | – | 400 | 400 | – |
| வாழை | 100 | 100 | – | – | 300 | 200 | – |



# இன்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 60 | 40 | 60 | 40 | 40 | – | 50 |
| கத்தரி | 60 | 80 | 80–120 | 60 | 60 | 40 | – | 35 |
| கரட் | 80 | 80 | 120 | 80 | 80 | 100 | – | 100 |
| மரவள்ளி | 60 | 60 | 50 | 60 | 60 | 60 | – | 60 |
| பயிற்றை | 140 | 60 | 120 | 80 | 100 | 80 | – | 60 |
| பாகல் | 120 | 100 | 240 | 120 | 140 | 100 | – | 70 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | 80 | 100 | 60 | – | – | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 90 | 110 | 100 | 100 | 80 | 150 | – | 70 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 30 | 60 | – | 30 |
| தக்காளி | 80 | 60 | 60 | 60 | 60 | 80 | – | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 60 | 40 | 80 | – | 40 |
| கீரை | 30 | 30 | 30 | 10 | 20 | 30 | – | 20 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 30 | 30 | 20 | 30 | – | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 60 | 50 | 80 | 60 | 40 | – | 70 |
| புடோல் | 50 | 40 | 60 | 60 | 60 | 40 | – | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 80 | 80 | – | 50 |
| வெண்டி | 100 | 70 | 80 | 80 | 60 | 80 | – | 30 |
| போஞ்சி | 180 | 100 | 160 | 160 | 160 | 200 | – | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 140 | 120 | 100 | – | 100 |
| தேங்காய் | 50 | 28 | 45 | 35–40 | 30 | 30 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 110 | 110 | 120 | 100 | 120 | 120 | – | 120 |
| தேசிக்காய் | 500 | 550 | 600 | 500 | 550 | 600 | – | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 120 | 100 | 120 | 140 | 120 | 100 | – | 70 |
| இராசவள்ளி | 180 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 60 | 40 | 60 | 80 | 80 | 40 | – | 100 |

# இது புதுசு

## உணவூட்டும் இருக்கை



குழந்தைகளுக்கான உணவூட்டும் இருக்கை அறிமுகமாகியுள்ளது. சாப்பாட்டு மேசை உயரத்தை எட்டக் கூடிய இருக்கை, குழந்தைகளும் குடும்பத்துடன் இணைந்து உணவு உட்கொள்ள உதவும். கைக்குழந்தையில் இருந்து 6 வயது குழந்தை வரை பயன்படுத்தலாம். இந்த இருக்கை 2 ஆயிரத்து 300 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கமல் படம் நாளை வெளியீடு



2016 ஆம் ஆண்டில் கமல் நடித்த எந்தப் படமும் வெளிவரவில்லை. விஸ்வரூபம் இரண்டாம் பாகம் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்பட்டது.
ஆனால் இந்த ஆண்டு கமல் படம் வெளியாகவில்லையென்ற குறையைப் போக்க வருகிறது மீன் குழம்பும் மண்பானையும் படம். இதில் கமல்காசன் செட்டிநாட்டு குடும்பத்தின் மூத்த தலைக்கட்டாகக் கௌரவ வேடத்தில் நடித்திருக்கிறார்.
சிவாஜியின் பேரனும் ராம்குமாரின் மகனுமான துஷ்யந்த் தனது ஈஷான் தயாரிப்பு நிறுவனம் சார்பில் தயாரிக்கும் முதல் படம் மீன்குழம்பும் மண்பானையும். இதில் பிரபு முக்கிய வேடத்தில் நடிக்கிறார். அவருக்கு இது 200 ஆவது படம் ஆகும். ஜெயராம் மகன் காளிதாஸ் ஹீரோ ஆஷ்னா ஜவேரி ஹீரோயின் பூஜா குமார் பிரபு மனைவியாக நடிக்கிறார். எம்.எஸ்.பாஸ்கர் நகைச்சுவை, வில் லன் அழுதேஸ்வர் இமான் இசை அமைத்துள்ளார். ரிச்சட் கெவின் ஒளிப்பதிவு செய்துள்ளார்.
காரைக்குடி பகுதியில் இருந்து மலேசியாவில் குடிபெயர்ந்து அங்கு ஹோட்டல் நடத்தும் ஒரு குடும்பத்தின் கதை. அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த காளிதாஸ் காதலில் சிக்கி அதன் மூலம் ஒருபெரும் பிரச்சினையில் சிக்குகிறார். அதிலிருந்து அவர் எப்படி மீண்டார் என்பது கதை. அந்தக் குடும்பத்தின் மூத்த தலைமுறைத் தலைவராக கமல் கௌரவ வேடத்தில் நடித்திருக்கிறார்.

**Raajaachandrasekar** @raajaac
நமது அருகில் இருக்கும் தூரம்தான் நம்மை நெருங்க விடாமல் செய்கிறது.

"டேய் எங்கடா போற? "
"முறுக்கு செய்ய மா அரைக்கப் போறேன்"
"அதுக்கு ஏன்டா ஒளிஞ்சு ஒளிஞ்சு போற?"



"அம்மாதான் நைசா அரைச்சுட்டு வரச் சொன்னாங்க...!"

## சுடோக்கு
எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 4 | 9 | | 5 |
| | 1 | | | 9 | | | | |
| | 2 | | 8 | 3 | | | | |
| | 8 | | | | | 3 | | 2 |
| | | 6 | 3 | | 7 | 1 | | |
| 7 | | 1 | | | | | 6 | |
| | | | | 7 | 3 | | 5 | |
| | | | | 8 | | | 9 | |
| 3 | | 4 | 5 | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 2 | 4 | 3 | 5 | 6 | 7 | 1 |
| 6 | 4 | 3 | 7 | 1 | 8 | 5 | 9 | 2 |
| 7 | 1 | 5 | 2 | 9 | 6 | 4 | 3 | 8 |
| 2 | 6 | 4 | 8 | 5 | 9 | 7 | 1 | 3 |
| 3 | 5 | 7 | 1 | 4 | 2 | 9 | 8 | 6 |
| 1 | 8 | 9 | 3 | 6 | 7 | 2 | 5 | 4 |
| 4 | 7 | 8 | 9 | 2 | 1 | 3 | 6 | 5 |
| 5 | 2 | 1 | 6 | 7 | 3 | 8 | 4 | 9 |
| 9 | 3 | 6 | 5 | 8 | 4 | 1 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களை யும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை ... அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பா... அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

எவ்வளவு திட்டினாலும் வாங்கிட்டு 'சொல்லுங்க சார்'னு சொல்றவனுக்கு மானம், ரோசம் இல்லை எண்டு நினைச்சிடாதீங்க....



அதற்குப் பின்னால் அவன் 'குடும்ப நிலை' இருக்கலாம்....!

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** நேர்மைமிக்கவராகச் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான லாபம் கிடைக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். குடும்பத்தில், சுப நிகழ்ச்சி குறித்த பேச்சு நடக்கும்.

**இடபம்:** அடுத்தவர் நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், நிலுவைப்பணி நிறைவேறும். ஆதாயம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆன்மிக சிந்தனை மேலோங்கும். அரசியல்வாதிகள் பதவி பெற அனுகூலம் உண்டு.

**மிதுனம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில், மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். தக்க சமயத்தில், நண்பரின் உதவி கிடைக்கும்.

**கடகம்:** மறைமுக எதிரியால், சிரமம் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில், பொறுப்பு அதிகரிக்கும். பெண் கள், நகை பணம் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். வெளியூர் பயணத்தில் திடீர் மாற்றம் ஏற்படும்.

**சிங்கம்:** மனதில் புத்துணர்வு மேலோங்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் அதிகரிக்கும். சேமிப்பும் உயரும். பணியாளர்கள் விரும்பிய சலுகை கிடைக்கப் பெறுவர். பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**கன்னி:** சவால்களை துணிச்சலுடன் எதிர்கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் இடையூறுகளைச் சரிசெய்வீர்கள். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும். புத்திரரின் நற்செயல், பெருமை தேடித் தரும்.

**துலாம்:** குடும்ப பிரச்சினை பற்றி மற்றவரிடம் பேசவேண்டாம். தொழில், வியாபாரத்தில், மந்தகதி நிலவும். லாபம் சுமாராக இருக்கும். வாகன போக்குவரத்தில் மிதவேகம் கடைபிடிக்கவும். இஷ்ட தெய்வ வழிபாடு, மன அமைதிக்கு வழிவகுக்கும்.

**விருச்சிகம்:** பேச்சில் நிதானத்தைப் பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில், இருக்கிற அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது. மனைவியின் ஆறுதல் பேச்சு நம்பிக்கையளிக்கும். உடல் நலம் சீராக இருக்கும்.

**தனுசு:** மதிநுட்பத்தால் பிரச்சினைகளை சமாளிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். உறவினர்களால் உதவி உண்டு. பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்தித்தாலும், வருமானம் காண்பர்.

**மகரம்:** உறவினரால் சிரமத்துக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில், விடாமுயற்சி தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் அடக்குமுறைக்கு ஆளாகலாம். பெண்கள், இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர்.

**கும்பம்:** கடந்த கால உழைப்புக்குரிய நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பணியாளர்கள், சக ஊழியர்களின் ஒத்துழைப்பை பெறுவர். யோகம் உண்டு.

**மீனம்:** மனதில் வீண் குழப்பம் உண்டாகி மறையும். தொழில், வியாபாரத்தில், மிதமான ஆதாயம் கிடைக்கும். குடும்பத்தில், ஒற்றுமையை காப்பது அவசியம். வாகனத்தில், மிதவேகம் பின்பற்றவும்.



மனைவி: உங்களுக்கு ஞாபகம் இருக்கா, நீங்க எங்கிட்ட முதன் முதல்ல 'ஐ.லவ் யூ' சொன்னப்ப, நான் திக்கு முக்காடிப் போய் ஒரு மணிநேரம் பேசாமலேயே இருந்தேன்.

கணவன்: பின்ன ஞாபகம் இருக்காதா அந்த ஒரு மணி நேரம்தான் என் வாழ்க்கையிலேயே கடைசியா நான் மகிழ்ச்சியா இருந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் தினத்தை குழப்புவதற்கே கைது நாடகம்

## ரி.ஐ.டியின் நடவடிக்கை குறித்து சமூக ஆர்வலர்கள் சந்தேகம்

முயற்சி என சமூக ஆர்வலர்கள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

மாவீரர் தினம் மற்றும் வாரம் நவம்பர் 21 முதல் 27 வரை புலம்பெயர் நாடுகளில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நிலையில், இம்முறை யாழ்ப்பாணத்திலும் அது கடைப்பிடிக்கப்படக்கூடும் என்கின்ற எதிர்பார்ப்பு அதிகமாக உள்ளது.

விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் என்று கூறப்படும் சிலரால் உருவாக்கப்பட்ட ஜனநாயகப் போராளிகள் கட்சி தியாகி திலீபனின் 29 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வை யாழ்ப்பாணத்தில் பகிரங்கமாக நடத்தியிருந்த பின்னணியில் இந்த எதிர்பார்ப்பு எழுந்திருந்தது.

"அவ்வாறு மாவீரர் தினம் கடைப்பிடிக்கப்படுவது முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ச அணியினரால் கடுமையாக விமர்சிக்கப்படும் போது அரசு கடும் நெருக்கடிகளை இதனால் எதிர்கொள்ளும். அத்தகைய ஒரு நிலமை ஏற்படுவதற்கு முன்னதாக நிலமைகளைக் கட்டுக்குள் வைத்திருக்கும் நோக்கோடு இந்தத் திடீர் கைதுகள் இடம்பெறுகின்றன என்று சந்தேகிப்பதற்குப் போதிய காரணங்கள் இருக்கின்றன" என்று சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட மூவரை கொழும்பு நீதிமன்றில் முற்படுத்திய பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் முன்வைத்துள்ள அறிக்கையில் இதற்கு ஆதாரமாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அந்த அறிக்கையில், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களுடன் இணைந்து, அவர்களுடன் தொடர்புகளைப் பேணி அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக புலிகள் அமைப்பை மீளுருவாக்கம் செய்வதற்கு உதவி ஒத்தாசை புரியும் வகையில் ஆவா குழு உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு வடக்கில் கடமையில் ஈடுபட்டுள்ள உளவுத் துறையினர் உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்களை அச்சுறுத்தும் வண்ணம் செயற்படுகின்றது.

கூர்மையான ஆயுதங்களால் வெட்டிக் காயப்படுத்தும் இந்தக் குழு அதன்மூலம் மக்களைப் பயமுறுத்தி அவர்களது சொத்துக்களைக் கொள்ளையிடுதல் உள்ளிட்ட சமூக விரோதச் செயற்பாடுகளையும்முன்னெடுத்துள்ளதுஎன்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் வாள்வெட்டுக் குற்றங்களோடு தொடர்புடையவர்களைக் கைது செய்து அவர்களை ஆவா குழுவோடு தொடர்புபடுத்தி அந்தக் குழுவில் விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் இருக்கின்றனர் என்றும் அவர்கள் புலிகள் இய்க்கத்தை மீளுருவாக்கம் செய்ய முயற்சிக்கின்றனர் என்றும் திடீரெனக் குற்றம் சாட்டியிருப்பது இந்தப் பின்னணியிலாக அன்றி வேறு எதுவுமாக இருக்கமுடியாது என்றும் பெயர் குறிப்பிட விரும்பாத சமூக ஆர்வலர்கள் உதயன் பத்திரிகைக்குச் சுட்டிக்காட்டினர். (உ-த)

# சிவாஜிலிங்கத்தாலேயே தோல்வியுற்றார் ஹிலாரி

## அமைச்சர் ராஜித கிண்டல்

சேனாரத்ன நகைச் சுவையாகத் தெரி வித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப், தனது கொள்கைகளை நடைமுறைப்படுத்தினால் உலக சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துக்கும் சிறப்பாக இருக்கும். கிளின்டன் தனது ஊடகப் பரப்புரைக்கு மட்டும் ஒரு மில்லியன் டொலர் செலவு செய்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால், இவர் (ட்ரம்ப்) நமது நாட்டிலுள்ளவர்கள் போல விநோதமான பரப்புரைகளையே மேற்கொண்டார்.

பன்னாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்க முன்னர் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்று அவர் கூறும் கொள்கைக்கு அமைய தொடர்ந்தும் செயற்படுவாராயின், அது உலக சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் சிறப்பாக இருக்கும் என்பதையும் இங்குக் கூறிக் கொள்ளவேண்டும்.

ட்ரம்ப் பெரிதாக ஒன்றும் செய்யத் தேவையில்லை. உலக விடயங்களில் தலையிடுவதைச் சற்றுத் தவிர்த்துக் கொண்டாலே போதும்-என்றார்.

அதேநேரம், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான ஹிலாரி கிளின்டன் வெற்றி பெறவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், நல்லூர் ஆலயத்தில் தேங்காய் உடைத்தார். சிவாஜிலிங்கம் தேங்காய் உடைத்த காரணத்தினாலேயே ஹிலாரி தோற்றார் என்றும் நகைச்சுவையாகத் தெரிவித்தார் ராஜித. (த-5)

# விலைக் குறைப்பு, மானியம் பட்ஜெட்டில் கிடைக்குமா ?

## பெரும் எதிர்பார்ப்பில் மக்கள்

விலைக் குறைப்பு உள்ளிட்ட மானியங்கள் ஏதாவது புதிய வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாகக் கிடைக்குமா என்றுமக்கள் எதிர்பார்த்துள்ளனர். வற் வரி அதிகரிப்பினால் கடும் பொருளாதாரச் சுமைகளை எதிர் கொண்டுள்ள மக்கள் அதிலிருந்து சலுகைகள் ஏதாவது கிடைக்குமா என்ற எதிர்பார்ப்பில் உள்ளனர்.

நல்லாட்சி அரசின் இரண்டாவது வரவு-செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது. நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் இன்று பிற்பகல் 2 மணிக்கு, வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

நாடாளுமன்றத்தின் இன்றைய அமர்வில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கேற்கவுள்ளார். இதனால் நாடாளுமன்றத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் இன்று தொடக்கம் அடுத்த மாதம் 10ஆம் திக்தி வரை நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டு முன்வைக்கப்பட்ட வரவு- செலவுத் திட்டத்தில் அத்தியாவசியப் பொருள்கள் மீதான விலைக் குறைப்புச் செய்யப்பட்டது. அத்துடன் சம்பள அதிகரிப்பும் அறிவிக்கப்பட்டது. பல்வேறு சலுகைகளும் மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதனால் இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மீது எதிர்பார்ப்பு உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### வித்தியா படுகொலை வழக்கு

# குற்றப்பத்திரத் தாக்கலை விரைவுபடுத்த உத்தரவு

யாழ். மேல் நீதிமன்றம் அறி வுறுத்தல் வழங்கியது. இந்த வழக்கில், ஒன்றரை வருடங்களுக்கு மேலாக விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள முதல் 9 சந்தேகநபர்களினதும் விளக்கமறியலை மேலும் 3 மாதங்களுக்கு நீடிக்க நேற்று யாழ். மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

புங்குடுதீவு மாணவி வித்தியா, கடந்த வருடம் மே மாதம் 13 ஆம் திகதி பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தபோது கடத்தப்பட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார். மறுநாள் அவரின் சடலம் பாழடைந்த வீட்டில் பற்றைச் செடிகளுக்குள் இருந்து மீட்கப்பட்டது. இந்தப் படுகொலை தொடர்பில் ஆரம்பத்தில் 9 சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். பின்னர் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதில் படுகொலைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 9 பேரின் விளக்கமறியல் நீடிப்பு அனுமதிக்காக யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று இந்த வழக்கின் மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எந்தவொரு வழக்கிலும் சந்தேக நபர்களை ஒரு வருடத்துக்கு மேலாக நீதிவான் மன்றங்களினால் தடுத்து வைத்திருக்கும் அதிகாரமில்லை. அதனால் இந்த வழக்கிலுள்ள 9 சந்தேகநபர்களினதும் விளக்கமறியலை நீடிப்புச் செய்ய சட்ட மா அதிபரால் யாழ். மேல்நீதிமன்றுக்கு மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அதனைப் பரிசீலித்த மேல் நீதிமன்று, சந்தேகநபர்களின் விளக்கமறியலை ஒரு வருடத்துக்கு நீடிப்பது என்றும் அதனை 3 மாதங்களுக்கு ஒரு தடவையாக மன்றினால் பரிசீலிக்கப்படும் என்று உத்தரவிட்டது. அதன்படி 2 தடவைகள் நீடிக்கப்பட்ட நிலையில் நேற்று 3 ஆவது தடவையாக யாழ்.மேல்நீதிமன்றில் சந்தேகநபர்கள் முற்படுத்தப்பட்டனர்.

சட்டமா அதிபர் திணைக்களம் சார்பாக அரச சட்டத்தரணி நிசாந் நாகரட்ணமும் 4,7,9 ஆம் சந்தேக நபர்கள் சார்பாக சட்டத்தரணி கமகேயும் 6 ஆம் சந்தேக நபர் சார்பாக சட்டத்தரணி ரகுபதியும், பாதிக்கப்பட்டவர் நலன் சார்பாக சட்டத்தரணி வி.மணிவண்ணனும் மேல்நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

சந்தேக நபர்களின் குடும்ப நிலமைகள், பாதிப்புக்கள் தொடர்பாக அவர்கள் சார்பாக முன்னிலையாகியிருந்த சட்டத்தரணிகள், மன்றில் எடுத்துக்கூறி சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்குமாறு கோரினர். தென்பகுதியில் சிறுமி சேயாவின் வன்புணர்வுக் கொலை வழக்கிற்கு 3 மாதகாலத்திற்குள் தீர்வு வழங்கப்பட்டது. ஆனால் இந்த வழக்கில் 18 மாதங்களாகியும் தீர்வு வழங்கப்படவில்லை. இதற்குக் காரணம் என்ன என்று அரச சட்டவாதியிடம் கேள்வியெழுப்பினார் சட்டத்தரணி ரகுபதி.

பிணை மனு சட்டம் 17ஆம் பிரிவின் கீழ் இவர்களுக்குத் தொடர்ந்து 3 மாத கால விளக்கமறியலை நீடிக்க வேண்டும் என வும் சந்தேகநபர்கள் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணிகளின் பிணைக் கோரிக்கைக்கு ஆட்சேபனை தெரிவிப்பதாக அரச சட்டத்தரணி நிசாந் நாகரட்ணம் தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டால், அவர்களுக்குப் பாதுகாப்பு இருக்குமா என்பது சந்தேகம். இந்தச் சம்பவம் இடம்பெற்ற நேரத்தில் யாழ்ப்பாணம் கொந்தளித்துக் காணப்பட்டது. உடனடியாகத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டது. சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கப்படுமாயின் சில வேளைகளில் மீண்டும் அவ்வாறான நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே புலன் விசாரணை நிறைவடையும் வரை சந்தேக நபர்க்ளை விளக்கமறியலில் வைக்க வேண்டும். சட்டமா அதிபர் திணைக்களத்தினர் இந்த வழக்கினை மிக விரைவாக நடத்தி வித்தியாவின் குடும்பத்துக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கவேண்டும். எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவம் இடம்பெறாது இருக்க இது உதவும் என்று பாதிக்கப்பட்டவர் நலன் சார் சட்டத்தரணி மணிவண்ணன் மன்றில் தெரிவித்தார்.

அனைத்துத் தரப்பினரது வாதங்களையும் பரிசீலித்த நீதிபதி, சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்காது அவர்களைத் தொடர்ந்தும் 3 மாதங்களுக்கு விளக்கமறியலில் வைக்க அனுமதி வழங்கினார்.

சட்டமா அதிபர் திணைக்கள பிரதிநிதி மூலமாக மன்றில் அறிக்கை முன்வைக்கப்பட்டது. இந்த வழக்குத் தொடர்பாக சட்டமா அதிபருடன் கலந்துரையாடி அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்வதோடு, மன்றுக்குப் பதில் வழங்குவேன் என்று சட்ட மா அதிபரின் பிரதிநிதி தெரிவித்தார். எனவே சந்தேக நபர்களுடைய பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்படுகிறது.

9 சந்தேகநபர்களின் விளக்கம... யலும் எதிர்வரும் பெப்ரவரி மாத... 8ஆம் திகதிவரை நீடிக்கப்ப... கிறது என்று யாழ்.மேல் நீ... மன்றநீதிபதி மா.இளஞ்செழிய... கட்டளையை அறிவித்தார்.

பிணை மனு மீதான யாழ்.மே... நீதிமன்றத்தின் மறியல் நீடி... உத்தரவை ஊர்காவற்று... நீதிமன்றுக்கு அனுப்பி வை... மாறு பதிவாளருக்கு மன்று ... டளையிட்டது.

இந்த வழக்கில் தொடர்பு... குற்றச்சாட்டில் 9 சந்தேக... களுக்குப் பின்னரான கால... தியில் கைது செய்யப்பட்ட... பேருக்கும் ஊர்காவற்றுறை ... வான் மன்று விளக்கமறிய... நீடித்து வருகின்றது.(கு-வ-4-

# கைதாவோர் தனிப் பிரிவில் மறியல்

சாலையில் தனியான பிரிவில் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேல்நீதிவான் மன்று நேற்று உத்தர விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்று இராணுவச் சிப்பாய் உள்ளிட்ட 3 பேரும், நேற்று முன்தினமும் 3 பேருமாக 6 பேர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்... அவர்களையே ஏனைய கைதிகளுடன் மறியலில் வை...காது, தனியான பிரிவில் விளக்கமறியலில் வைக்குமா... நீதிவான் உத்தரவிட்டார். (வ-...

# டி.எவ்.சி.சி வங்கி - சதொச மோட்டார்ஸ் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

## குறைந்த விலையில் தரமான வாகனக் கொள்வனவு



டி.எவ்.சி.சி. வங்கி வாடிக்கையாளர்கள் லீசிங் வசதி ஊடாக இசுசு வர்த்தக நாம வாகனங்களை கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பத்தை டி.எவ்.சி.சி. வங்கி மற்றும் சதொச மோட் டார்ஸ் இடையே அண்மையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

சதொச மோட்டர்ஸ் இலங்கையில் இசுசு வர்த்தக வாகனங்களுக்கான ஏக முகவர்களாக விளங்குகின்றது. ஜப்பானிய வர்த்தக நாமமான இசுசு ஆனது, உலகின் முதற்த்ர வர்த்தக வாகனமாக கொள்ளப்படுகிறது.

அந்த வகையிலே இலங்கையின் சந்தைகளில் தரம் மற்றும் நம்பிக்கைக்கான உதாரணமாக விளங்கும் டி.எவ்.சி.சி. வங்கி மற்றும் சதொச மோட்டார்ஸ் ஆகிய வற்றின் தற்போதைய பங்குடமையானது புதிய ஒப்பந்தத்தின் கைச்சாத்திடல் மூலம் குறைந்த விலையில், தரமான வாகனம் ஒன்றை டி.எவ்.சி.சி. வங்கி வாடிக்கையாளர்கள் கொள்வனவு செய்வதற்கு சந்தர்ப் பங்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




நீங்களும் எந்தவொரு மாதிரியுடைய பஜாஜ் பல்ஸர், டிஸ்கவர் மற்றும் ப்ளாட்டினா மோட்டார் சைக்கிளினை இன்றே கொள்வனவு செய்து 'பஜாஜ் பைக்கொன்றுக்கு பைக் இலவசம்' எனும் வெற்றிச் சீட்டிழுப்புடன் இணைந்து அதே மாதிரியுடைய பஜாஜ் பல்ஸர் 135, டிஸ்கவர் 125 ட்ரம் மற்றும் ப்ளாட்டினா 100KS மோட்டார் சைக்கிள்களை வாராந்தம் இலவசமாக வென்றிடுங்கள். விரையுங்கள், இலங்கையின் முதல் தர மோட்டார் சைக்கிள்களை இன்றே உங்கள் வசப்படுத்திக்கொள்ளுங்கள்... இப்பொழுதே உங்கள் அருகில் உள்ள பஜாஜ் பிரதேச அலுவலகம் அல்லது முகவர் மத்தியஸ்தானத்திற்கு வருகைத் தந்து இப் புதுமை தரும்பும் சலுகையை உங்கள் வசப்படுத்திக்கொள்ளுங்கள்...

இவ் வெற்றிச் சீட்டிழுப்புச் சலுகை 2016 ஒக்டோபர் 12 ஆம் திகதி முதல் டிசம்பர் 03 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.

(டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட் ஊழியர்கள், அவர்களது குடும்ப அங்கத்தவர்கள், முகவர்கள் மற்றும் விநியோகஸ்த்தர்கள் இப்போட்டியில் பங்குபெற முடியாது).

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிடட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிறுபான்மையினர் ஒருவரை ஒருவர் மதிக்க வேண்டும்

### கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

திருமலை, நவ.10

வடக்கு மலையகத்தையும், மலையகம் கிழக்கையும் மதிக்கும்வரை சிறுபான்மையினர் தமது உரிமைகளை வென்றெடுக்க முடியாது எனக் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித் தார்.

சிறுபான்மையினர் தமது சக சமூகத்தின் அபிலாசைகள் மற்றும் அடையாளங்களுக்கு மதிப்பளித்து நடந்து கொள்ளவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொத்துவில் மத்திய கல்லூரி ஆய்வுகூடத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், சிறுபான்மையினர் ஒற்றுமையாகவும் நல்லிணக்கத்துடனும் நடந்து கொள்வதன் மூலமே தமது சமூகத்தின் அரசியல் உரிமைகளை வெற்றி கொள்ள முடியும். இனவாதத்தைக் கக்கும் குழுக்கள் நல்லாட்சியிலும் உள்ளன. எனவே சிறுபான்மைச் சமூகத்தினர் மற்றவர் போராட்டங்களில் உள்ள நியாயங்களைப் புரிந்து கொண்டு அவற்றுக்கு மதிப்பளிக்க வேண்டும் - என்றார்.

(த-ய-45)



## ஆசிரியர்கள் தேவை

யா/யூனியன் கல்லூரியில் 2017 ஆம் வருடத்துக்கு தரம் 6,7,8 வகுப்புகளுக்கு பாடசாலை முடிந்த பின்னர் மேலதிக வகுப்பு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ், கணினி ஆகிய பாடங்கள் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை. தகைமையுள்ள திறமையான ஆசிரியர்கள் சுயவிவரம் அடங்கிய தகைமைச் சான்றிதழ் பிரதிகளுடன் பதிவுத் தபாலில் 25.11.2016 இற்கு முன்னர் கிடைக்க கூடியவாறு அதிபர், யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**அதிபர்,**
**யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.** (C/23355) (10.17.19)

## அபான்ஸ் நிறுவனத்திடம் இருந்து முக்கியமான அறிவித்தல்

அனைத்து பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அபான்ஸ் நிறுவனத்தினால் இதுவரை வழங்கப்பட்டுவந்த மடிக்கணினிகளுக்கான (HP Laptop) சலுகை விலையானது இன்றுடன் (10.11.2016) முடிவடைகின்றது.

எனவே வங்கிகளிடம் இருந்து காசோலைகளை பெற்றுக்கொண்ட மாணவர்கள் இன்று தங்கள் காசோலையை இலக்கம் 160A, K.K.S. வீதி, சுன்னாகம் எனும் முகவரியிலுள்ள சுன்னாகம் Abans இல் ஒப்படைத்து கணினிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு:**
**முகாமையாளர்**
**077 220 8242 / 021 2240 440**

(J/6007)(10.17.19)

## CHUNDIKULI GIRLS' COLLEGE JAFFNA

### *New Admissions - 2017*
### *English Medium Nursery*

- For 3 +& 4+ Classes (Girls only)
- Only limited vacancies
- For 3+ class
  Age : Born on or after 01.02.2013 before 31.01.2014
- For 4+ class
  Age : Born on or after 01.02.2012 before 31.01.2013
- Applications close on 25th November 2016.
- Application forms (limited number ) will be available at the College office from 10th November 2016.
- Interviews will be called soon after the submission of the applications.

*- Principal -*

(C/23334)(11.17.21)

## மரண அறிவித்தல்

### மகாலிங்கம் மயூரன் (ரூபன்)



வெளிப்புலம் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் மயூரன் (ரூபன்) 08.11.2016 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் மகாலிங்கம் - தவமணிதேவி தம்பதியரின் பாசமிகு மகனும் நவஜீதாவின் அன்புக்கணவரும் ரதுஷனின் பாசமுள்ள தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2016) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 11 .00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**வெளிப்புலம், சுன்னாகம்.** (ஜே/6006)(17.19.20) **குடும்பத்தினர்.**

## அறைகள் வாடகைக்கு

கே.கே.எஸ்.வீதியில் (செல்வமகால் திருமண மண்டபத்துக்கு அருகில்) தனி அறைகள் வாடகைக்குண்டு. வேலை பார்க்கும், படிக்கும் பெண்களுக்கு மட்டும்.

**077 158 1811**

## ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

2,3 மாத தடுப்பு மருந்து வைக்கப்பட்ட ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.

**076 348 8645**

## தேவை

வல்வெட்டித்துறையில் அலுவலகத்தில் பணிபுரிவதற்கு ஆள்கள் தேவை.

தொடர்பு - 077 5573711

(ஜே/6006)(17.19.20)

## வீடு விற்பனைக்கு

ஜெற் மோட்டோர்ஸ் வீதி, மயிலணி, சுன்னாகத்தில் 3 பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

**077 340 0584**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 08.07.1980
உதிர்வு 11.10.2016

அமரர்
### பூபாலசிங்கம் அன்புராசன்
(அன்புக் குட்டி)



கடந்த 11.10.2016 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் இளைய புதல்வன் பூபாலசிங்கம் அன்புராசன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (10.11.2016) வியாழக்கிழமை 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**இராச வீதி,**
**கோப்பாய் வடக்கு, கோப்பாய்.** **குடும்பத்தினர்.**

(J/6009)(18.17.19)

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி கந்தையா

**தோற்றம்** 15.10.1925
**மறைவு** 09.11.2016



அச்சுவேலி தெற்கு விக்கினேஸ்வரா வீதியை பிறப்பிடமாகவும், அச்சுவேலி தெற்கு பயித்தோலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி கந்தையா நேற்று (09.11.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவப்பிள்ளை - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையாவின் பாசமிகு மனைவியும் கருணாநிதி, கிருபாநிதி, பத்மநிதி, ஜெயநிதி, அருள்நிதி, கங்காநிதி, தயாநிதி, ரூபதநிதி, நவநிதி, சங்கநிதி ஆகியோரின் அன்புத் தாயும் சிவக்கொழுந்துவின் அன்புச்சகோதரியும் தவாஈஸ்வரி, அனுராதா, மல்லிகாதேவி, வசந்தகுமாரி, கோகிலா, கலைமதி, செல்வரஜனி, மங்கையற்கரசி ஆகியோரின் அன்புமாமியும் யாழினி, இளங்கோ, சங்கீதன், சாரங்கன், வாகீசன், காருண்யா, மாதங்கன், சியாமா, கயானி, வினோதன், திருமாறன், ரூபஜெனா, நிரூபன், கீர்த்தனா, அபிதன், சாருஜன், சதூசன், நவரூபன், அட்சயா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2016) வியாழக்கிழமை அச்சுவேலி பயித்தோலையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**

**பயித்தோலை,**
**அச்சுவேலி தெற்கு ,அச்சுவேலி.**

(சி/23354)(17.19.20)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# புதிய அரசமைப்பு ஜனவரியில் நடைமுறைக்கு

## பிரதமர் தெரிவிப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்று இரண்டாண்டு நிறைவில் புதிய அரசமைப்பும் நாட்டுக் கான புதிய அபிவிருத்தித் திட்டமும் நடைமுறைக்கு வருமெனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாதுளுவாவே சோபித தேரரின் ஓராண்டு நிறைவு நினைவஞ்சலி நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தலைமையில் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும்போதே மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு பிரதமர் ரணிலினதோ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதோ அல்லது நாடாளுமன்றத்தினதோ இல்லை. அது மக்களுடையது. அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளும் வகையில் அது அமைவது அவசியம்.

புதிய தேர்தல் முறை, நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குதல், சிறப்பு நீதிமன்றம் மற்றும் புதிய அரசமைப்புத் தொடர்பில் அரசு முக்கிய கவனம் செலுத்தி வருகின்றது.

அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பில் இரு பிரதான கட்சிகளும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் பேச்சு நடத்தி வருகின்றன. பல்வேறு தரப்பிலிருந்தும் கருத்துக்கள் பெறப்பட்டு அதற்கேற்ற வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் - என்றார். (த-5)




## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்
திருமதி இராசரட்ணம் இரத்தினேஸ்வரி
அவர்களின் அன்புச் சகோதரி
திருமதி மகேஸ்வரி ஆனந்தரட்ணம்
அவர்கள் 07.11.2016 இறைபதமடைந்துவிட்டார்.
அவரது மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(சி.23349)
(13.18.17.21)
பாடசாலை சமூகம்
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி எட்வினா லக்ஸ்மணன்
அவர்களின் அன்பு மாமனார்
கிறிஸ் தோப்பர் கிளிவோட் வில்லியம் ராஜா
அவர்கள் 06.11.2016 இறைபதமடைந்துவிட்டார்.
அவரது மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம.
(சி.2330)
(13.18.17.21)
பாடசாலை சமூகம்
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் மேலதிக மாவட்ட பதிவாளராக கடமையாற்றும்
செல்வி யோகராசா கிரிஜா
அவர்களின் அன்புத் தந்தையார்
சின்னத்தம்பி யோகராசா
அவர்கள் 08.11.2016 ஆம் திகதி சிவபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
நலன்புரிசங்கம், பிரதேசசெயலகம், உடுவில்.
பிரதேச செயலரும், அனைத்து உத்தியோகத்தர்களும்.

" Safe in the Arms of Jesus "

## 15 th year Remembrance



B.M. Edward
(B. Sc (Hons) SLPS-I)

Born
29.03.1950

Called to Rest
10.11.2001

*Fifteen years have flown*
*in the blink of an eye*
*We cherish the fondest memories*
*We had with you*
*You were a gem of person*
*with noble qualities*
*May you enjoy your eternal bliss*
*In the land Fairer than the light*

Sadly missed and fondly remembered by Family and Relatives.

69/2, Vembadi Road, Jaffna.


# நல்லாட்சி அரசின் செயற்பாடுகளால் நம்பிக்கை இழப்பு

## அம்பாறை முஸ்லிம் நலன் பேணும் அமைப்பு விசனம்

அம்பாறை, நவ 10

பௌத்தர்கள்வாழாதபிரதேசங்களில் புத்தர் சிலைகள் அத்துமீறி வைக்கப்படுவதும் பள்ளிவாசல்கள் தாக்கப்படும் சம்பவங்களும் இன்றைய நல்லாட்சியிலும் தொடர்வது கவலையளிக்கின்றது. இவை நல்லாட்சி மீதுசிறுபான்மையினர்கொண்டுள்ள நம்பிக்கையைச் சிதைக்கும் செயற்பாடுகளாகும். இவ்வாறு அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் நலன் பேணும் அமைப்புவிடுத்துள்ளஊடகஅறிக்கை ஒன்றில்கவலைவெளியிட்டுள்ளது.

குருநாகல் மாவட்டத்திலுள்ள சில பள்ளிவாசல்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனம் தெரியாதோரின் தாக்குதல் சம்பவங்களைக் கண்டித்து இந்த ஊடக அறிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கடந்த மகிந்த அரசின் அராஜக ஆட்சிக் காலத்தில் சிறுபான்மைச் சமூகங்கள் அடக்கி ஒடுக்கப்பட்டுப் பௌத்த மேலாதிக்கவாத, இனவாத சம்பவங்களால் பெருந்துயரும் அச்சமும் கொண்டிருந்தனர்.

அன்றைய ஆட்சியினரின் கண்டும் காணாத செயற்பாடுகளால் சிறுபான்மையினர் மீதான இனவாதச் செயற்பாடுகள் உரமூட்டி வளர்க்கப்பட்டன. குறிப்பாக முஸ்லிம் பிரதேசங்கள் குறிவைத்துக்தாக்கப்பட்டதுடன் முஸ்லிம்களின் மதச் சுதந்திரத்துக்கும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வந்தன. பௌத்தர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட சில பிரதேசங்களில் முஸ்லிம்களின் மதத் தலங்கள். பள்ளிவாசல்கள் பௌத்த இனவெறி பிடித்தவர்களின் தாக்குதலுக்குள்ளாகி வந்தன.

பொது பலசேனா போன்ற அமைப்புகளின் முஸ்லிம்களுக்கு எதிரான வெறிபிடித்த செயற்பாடுகள் அன்று ஊக்குவிக்கப்பட்டன.

இதேவேளை, இத்தகைய பேர்வழிகளின் செயற்பாடுகள் நம் சகோதர சிறுபான்மையினரான தமிழ் மக்களுக்கெதிராகவும் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன.

இந்தக் கசப்பான நிலமைகளுக்கு விடிவுகாணவேண்டுமென்றவேட்கையுடனேயே அபரிமித நம்பிக்கையுடன் சிறுபான்மை சமூகங்கள் ஆட்சிமாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதில் பெருமுனைப்புக் காட்டி அதில் வெற்றியும் கண்டன.

இதனால் மலர்ந்த நல்லாட்சியில் சிறுபான்மை மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் சிதைவுறும்வண்ணமான இனவாதச்சம்பவங்கள் இன்று முளைவிட்டுவருவது கவலையையும் அச்சத்தையுமே ஏற்படுத்தியுள்ளது.

பௌத்தர்களே வாழாத அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பழம் பெரும் தமிழ்க் கிராமமான மாணிக்கமடு அருகே மாயக்கல்லி மலையில் அத்துமீறி புத்தர் சிலை நிறுவிய சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது. இதேவேளை,குருநாகல் மாவட்டத்திலுள்ள சிலபள்ளிவாசல்கள் இனம் தெரியாதோரின் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளன. இறுதியாக நிக்கவரெட்டிய நகர ஜும் ஆ பள்ளிவாசல் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மிலேச்சத்தனமான இத்தகைய செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மகிந்த ஆட்சிக்கால கசப்பான சம்பவங்கள் இன்றைய நல்லாட்சியிலும் தொடர்வது விசனிக்கத்தக்கதாகும். இந்த விடயத்தில் நல்லாட்சி அரசு காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன் இந்தானச் செயற்பாடுகளில் ஈடுபடுவோரையும் இதற்குத்தூண்டுகோலாக செயற்படுவோரையும் இனம் கண்டு நீதியின் முன் நிறுத்தவேண்டும்- என்றுள்ளது. (த-30)

# 2 மாணவர் உட்பட 5 பேர் ரி.ஐ.டியினால் கைது

யாழ்ப்பாணம், நவ. 9

வாள்வெட்டுக் குற்றச்சாட்டில் கடந்த இரண்டு நாள்களில் மாணவர்கள் இருவர் உட்பட 5 பேர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் நேற்று வரை 14 பேர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். கொக்குவில், பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இதே வேளை, கைது செய்யப்பட்டவர்களின் விவரங்களை பொலிஸார் வழங்கவில்லை. (வ-4,10)

# உடையாது தேசிய அரசு

*அடித்துக் கூறுகிறார் அமைச்சர் சில்வா*

தேசிய அரசு உடையாது என்றும், கடந்த நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து தேசிய அரசைத் தவிர்த்து ஐக்கிய தேசியக் கட்சியின் தனி அரசை அமைப்பதற்குக் கோரிக்கை முன்வைத்த அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விரட்டினார் என்றும் பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

தேசிய அரசின் தற்போதைய நிலமை தொடர்பில் கருத்துக் கூறியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இப்போது நினைத்தாலும் எம்மால் தனித்து ஆட்சியமைக்க முடியும். தேவையான நாடாளுமன்ற உறுப்பினர் களை வேறு பக்கங்களிலிருந்து எடுப்பது எமக்குப் பெரிய விடயம்அல்ல.ஆனால், நாம் அதைச் செய்யமாட்டோம்-என்று அவர் தெரிவித்தார். (த)

## ராணுவம்...

இல்லை.

இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆவா குழுவுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளுக்கு எந்தவித தொடர்பும் இல்லை. எனினும் யாழ்ப்பாணத்தை எடுத்துக் கொண்டால் முன்னாள் போராளிகள் அங்கு உள்ளனர். அவர்கள் இந்தக் குழுவில் தொடர்புபட்டுள்ளதாகக் கூறினாலும், இராணுவமோ, முன்னாள் போராளிகளோ இதில் சம்பந்தப்படவில்லை என்பதே எனது கருத்தாகும் என்று பாதுகாப்பு இராஜங்க அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, ஆவா குழுவை இராணுவத்தினரே இயக்குவதாக ஒருதரப்பினரும், விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகளே ஆவா குழுவினர் என மற்றுமொரு தரப்பினரும் குற்றஞ்சாட்டி வருகின்றனர். (வ-5)

## இனவாதியின்...

இல்லை.

இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆவா குழுவுடன் தொடர்புடையவர்கள் என்று யாழ்ப்பாணத்தில் நேற்று வரை 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முக்கிய உறுப்பினர் என்றும், எழுக தமிழ் ஊர்வலத்தை ஏற்பாடு செய்த காரணத்திற்காகவே அவர் திட்டமிடப்பட்டு கைது செய்யப்பட்டார் என்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம்சாட்டினார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் குற்றச்சாட்டுத் தொடர்பில் பாதுகாப்பு இராஜங்க அமைச்சர் ருவன் விஜேவர்தனவிடம் செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிக்கும் கருத்துக்களுக்கு பதில் கருத்து கூறவதற்கான அவசியம் எனக்கில்லை. வெறுமனே அரசியல் நோக்கத்தில் அவர் கருத்துக்களை வெளியிடுகின்றார். எனவே இனவாதத்தை பரப்பிவரும் அவருக்கு பதிலளிக்க வேண்டிய கடப்பாடு எனக்கில்லை - என்று ருவன் விஜேவர்தன பதிலளித்தார். (வ-5)

## வடக்கு...

நீதி அமைச்சரும், புத்தசாசன அமைச்சருமான விஜேதாச ராஜ பக்சவினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குறைந்த வசதிகளுடன் இருக்கும் விகாரைகளை மீள் அபிவிருத்தி செய்வதற்காகச் சீன மதகுருவான மிங்க் செங்கினால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள 20.24 மில்லியன் ரூபாவையே அரசு பயன்படுத்தவுள்ளது.இதன் ஊடாக வடக்கு, கிழக்கில் காணப் படும் 100 விகாரைகளின் நலன்புரி வசதிகளை மேம்படுத்தும் வேலைத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ட்ரம்ப்...

வந்தன. நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிக் கட்ட வாக்கெடுப்பின் பின்னரான கருத்துக் கணிப்பில் 90 சதவீதம் ஹிலாரியே ஜனாதிபதியாகுவார் என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், அவற்றையெல்லாம் முறியடித்து ட்ரம்ப் சாதனை வெற்றியைப் பெற்றுள்ளார்.

அமெரிக்கத் தேர்தல் சபை உறுப்பினர்களின் 276 வாக்குகளை ட்ரம்ப் பெற்றுக் கொண்டார். ஹிலாரி 218 உறுப்பினர்களின் வாக்குகளை மாத்திரமே பெற்றார். 270 வாக்குகளைப் பெற்றாலே வெற்றி என்ற நிலையில் அதனையும் தாண்டி 6 வாக்குகளை மேலதிகமாகப் பெற்று ட்ரம்ப் வெற்றி வாகை சூடிக் கொண்டார்.

அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாக யார் தெரிவு செய்யப்படுவார் என்ற பலத்த எதிர்பார்ப்பு இருந்து வந்தது. அமெரிக்காவில் கடந்த காலங்களைப் போலன்றி நடப்பு ஆண்டு தேர்தல், மிகப் பரபரப்பானதாக இருந்து வந்தது. குடியரசுக் கட்சியின் வேட்பாளர் ட்ரம்ப் மற்றும் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஹிலாரி இருவருமே, தேர்தல் பரப்புரைகளின் போது பொது வெளியில் – கார சாரமான குற்றச்சாட்டுகளை ஒருவர் மீது ஒருவர் விட்டெறிந்தனர்.

நடப்பு ஜனாதிபதி ஒபாமாவின் ஆதரவு, அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கிளின்டனின் மனைவி என்ற பெயர் மற்றும் இராஜாங்கச் செயலராகப் பதவி வகித்தமையினால் ஹிலாரிக்கான ஆதரவுத் தளம் பெரும் மலை போல் இருப்பதாக நம்பப்பட்டது. கருத்துக் கணிப்பு முடிவுகளும் அவ்வாறானதொரு முடிவையே தந்தன.

இதனால் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஹிலாரி பெரும் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார் என்று நம்பப்பட்டது. நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இறுதிக் கட்ட வாக்குப் பதிவின் பின்னரான கருத்துக் கணிப்புக்களும் ஹிலாரிக்குச் சார்பாகவே இருந்தன.

அமெரிக்கத் தேர்தல் முடிவுகள் நேற்றுக் காலை முதல் அறிவிக்கப்பட்டு வந்தன. ஒவ்வொரு மாநிலங்களிலும் இரு வேட்பாளர்களினதும், தேர்தல் சபையின் வாக்காளர்கள் எத்தனை பேர் வெற்றி பெறுகின்றனர் என்ற விவரம் வெளியிடப்பட்டு வந்தது.

யாருமே எதிர்பாராத வகையில் ட்ரம்ப் ஆரம்பம் முதலே ஹிலாரிக்கு போட்டி கொடுக்கத் தொடங்கினார். முக்கிய மாகாணங்களில் – ஹிலாரியின் ஆதரவுத் தள மாகாணங்களில் கூட ட்ரம்ப் முன்னிலை பெற்று வெற்றியைத் தனதாக்கினார். இதானால் சில மணி நேரங்களிலேயே ட்ரம்ப், ஹிலாரியை விட முன்னணி பெற்றுக் கொண்டார். தொடர்ந்தும் ட்ரம்ப் முன்னணியை தக்க வைத்துக் கொண்டார். மதியம் ஒரு மணியளவில், 276 வாக்குகளைப் பெற்று ட்ரம்ப் ஜனாதிபதியாக தேர்வானார். ஹிலாரி அதிர்ச்சித் தோல்வியடைந்தார். (த-5)

## 220...

காணிகளை கொள்வனவு செய்து வழங்குவதற்கு 88 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கியுள்ளது.

மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் நிதி ஒதுக்கீடு கோரி முன்மொழிந்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் 971 குடும்பங்கள் தங்கியுள்ளன. இவர் களில் 682 குடும்பங்கள் தமக்கு சொந்தக் காணிகள் இல்லை என்று பதிவுகளை மேற்கொண்டுள்ளன.

இவர்களில் 462 பேருக்கு அரச காணிகள் ஏற்கனவே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. கீரிமலை மற்றும் பலாலி வடக்கில் இந்த மக்களுக்குக் காணிகள் வழங்கப்பட்டுள்ளன. இன்னமும் 220 குடும்பங்களின் காணிப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை.

யாழ். மாவட்டத்தில் அரச காணிகள் பற்றாக்குறையாகக் காணப்படுகின்ற நிலையில், தனியார் காணிகளைக் கொள்வனவு செய்து வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் 20 பேர்ச் காணி வழங்கப்படவுள்ளது. இதற்காக 4 லட்சம் ரூபா ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. (த-5)

## மைத்திரி...

மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தலுக்கான இறுதி வாக்கெடுப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. நேற்று மதியம் ஒரு மணியளவில், ஜனாதிபதியாக ட்ரம்ப் வெற்றி பெற்றமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது முகநூலில், ட்ரம்ப் வெற்றி பெற்றமையை வாழ்த்திப் பதிவு செய்தார். அத்துடன் ட்ரம்ப்பின் படத்தையும் பகிர்ந்திருந்தார். இதேபோன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ட்ரம்பை வாழ்த்திப் பதிவிட்டிருந்தார். வரலாற்று முக்கியத்துவமான வெற்றியை ட்ரம்ப் பதிவு செய்துள்ளதாகவும் வெள்ளை மாளிகைக்கான வழியானது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாக அமைந்துள்ளதாகவும் ரணில் விக்கிரமசிங்க தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும், புதிய ஜனாதிபதி ட்ரம்ப்புக்கு வாழ்த்துத் தெரிவித்து முகநூலில் பதிவிட்டுள்ளார். (த-5)

## தேர்தலில்...

இராணுவத்தையும் குற்றம் சுமத்தவில்லை என்றும் அவர் விளக்கமளித்தார். அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு, அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது. இதன் போது ஆவா குழு தொடர் பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

ஆவா குழுவில் இராணுவம் உள்ளதாக நான் தெரிவித்தேன் என்று விமர்சனங்கள் எழுந்துள்ளன. வடக்கின் ஆளுநர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் என்று பலரும் இராணுவத்துக்கும் இதற்கும் தொடர்பில்லை என்று கூறி வருகின்றனர். உண்மையில் நானும் அதையேதான் கூறினேன். இதற்கும் இராணுவத்துக்கும் சம்பந்தம் இல்லை என்பது எமக்கும் தெரியும்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் உள்ளிட்ட சில தளபதிகள் செய்த குற்றத்துக்காக ஒட்டுமொத்த இராணுவத்தையும் எவ்வாறு பிழை கூறுவது? ஜோசப் பரராஜசிங்கம், லசந்த ஆகியோர் இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர் என்பதற்காக முழு இராணுவத்தையும் எப்படிக் கொலைகாரர்கள் என்பது? மிக் கொடுக்கல் வாங்கலில் கோத்தபாய ராஜபக்ச எனும் ஒருவர் மட்டும் தொடர்புபட் டுள்ள போது முழு இராணுவத்துக்கும் இதில் தொடர்புள்ளது என்று எப்படி கூறுவது? ஓரிருவர் செய்யும் குற்றத்துக்காக ஒட்டு மொத்த இராணுவத்தினரையும் நாம் குற்றவாளிகளாகப் பார்க்கமாட்டோம்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளரே, நான் முழு இராணுவத்தையும் ஆவா விடயத்தில் குற்றம் சுமத்திவிட்டதாக தேவையில்லாமல் கதையை மாற்றி வருகிறார். இதற்குத் தான் அரச தரப்பிலிருந்தும் எதிர்ப்புக்கள் வந்து கொண்டிருக்கின்றன.

ஆவா குழுவில் இராணுவத்தினர் அன்றி தமிழ் இளைஞர்களே இருக்கின்றனர் என்றும் தெரிய வந்துள்ளது. இவர்களில் 6 பேர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர். இதன் பின்னணியில் நாம் ஆரம்பத்தில் கூறியதுபோல ராஜபக்சாக்களே இருக்கின்றனர்.

அமைதியாக இருக்கும் வடக்கில் எப்படியாவது குழப்பத்தை ஏற்படுத்தி அடுத்த தேர்தலின்போது அந்த மக்களை வாக்களிக்க விடாமல் தடுப்பதற்காகவே அவர்கள் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆரம்பத்தில் பௌத்தம் – முஸ்லிம் பிரச்சினையைத் தூண்டி விட்டார்கள்.

இதன் அடுத்த கட்டமாகவே தற்போது ஆவா குழுவை செயற்படுத்துகிறார்கள். இவ்வாறு நாட்டில் தீயை மூட்டியேனும் ஆட்சி அதிகாரத்துக்கு மீண்டும் வந்துவிட வேண்டும் என்பதே அவர்களின் எண்ணமாக இருக்கின்றது. இது குறித்தெல்லாம் எமக்கு நன்கு தெரியும். வெகு விரைவிலேயே இதன் பின்னணியிலுள்ளோரது பெயர் விவரங்களை நான் வெளியிடுவேன் – என்றார். (த-5)

## நெல்சிப்...

உறுப்பினர், தமக்கு நெருக்கமான ஒப்பந்தகாரர் ஒருவருக்கு ஒப்பந்தத்தை வழங்குமாறு நெருக்குதல் கொடுத்தார் – இவ்வாறு வடக்கு மாகாண தலைமைச் செயலர் அலுவலகத்தில், நெல்சிப் ஊழல் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வரும் குழுவிடம் அரச அதிகாரி ஒருவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

நெல்சிப் திட்ட ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு, வடக்கு மாகாண தலைமைச் செயலரினால் மூவர் கொண்ட குழு கடந்த ஆண்டு ஜூன் மாதம் நியமிக்கப்பட்டது. இந்த விசாரணை அறிக்கை தலைமைச் செயலரிடம் கையளிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்ய முடியாது என்று சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்திருந்தது. இதன் பின்னர் மீளவும் அதே விசாரணைக் குழுவைப் பயன்படுத்தி குற்றப் பத்திரம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனாலும் விசாரணைக் குழுவின் உறுப்பினர்கள் அதற்கு ஒத்துழைக்கவில்லை. இதனால் மீளவும் புதிய குழு நியமிக்கப்பட்டது. ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விசாரணை அறிக்கையின் அடிப்படையில் குற்றப் பத்திரத்தைத் தயாரிக்க அந்தக் குழுவினரிடம் கேட்கப்பட்டது. அதற்கு அந்தக் குழுவினர் மறுப்புத் தெரிவித்திருந்தனர்.

வடக்கு மாகாண தலைமைச் செயலர், முதலில் விசாரணை செய்த குழுவின் தலைவரையும், வேறு இரு உறுப்பினர்களையும் நியமித்து புதிய விசாரணைக் குழுவை அமைத்துள்ளார். இந்த விசாரணைக் குழு, நெல்சிப் திட்டத்துடன் தொடர்புடைய அதிகாரிகள், அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரிடம் வாக்குமூலம் பெற்று வருகின்றது.

இதன்போது, வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவருக்கு எதிராகவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆளும் கட்சி உறுப்பினர், தனக்கு நெருக்கமான ஒருவருக்கு ஒப்பந்தம் வழங்க வேண்டும் என்று நிர்ப்பந்தித்ததாக அதிகாரி ஒருவர் வாக்குமூலம் அளித்துள்ளார். இந்த வாக்குமூலம் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை இன்னமும் முடிவுறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வடக்கு மாகாண சபையில், நெல்சிப் ஊழல் தொடர்பான மாகாண சபை விசாரணைக் குழுவின் அறிக்கை நேற்று முன்தினம் வெளியிடப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## சன்னாவை...

எந்தவித குற்றச்செயல்களிலும் தொடர்புடையவர் அல்ல என்று அவர் தெரிவித்தார். கொக்குவில் மேற்கைச் சேர்ந்த நல்லைலிங்கம் சர்மிரன் (வயது 27) என்ற இளைஞன் கடந்த திங்கட்கிழமை பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். இந்தக் கைது தொடர்பில் சர்மிரனின் தாயார் தெரிவித்ததாவது:

தம்மை பயங்கரவாத விசாரணைப் பிரிவு என்று அடையாளப்படுத்திய 15 பேர் கொண்ட குழுவினர் கடந்த திங்கட்கிழமை வீட்டுக்கு வந்தனர். அந்த நேரம் எனது மூத்த சகோதரியும் சர்மிரனும் அங்கு இருந்தனர். பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் சன்னா எங்கே என துருவித்துருவிக் கேட்டனர். சன்னா இங்கு வருவதில்லை. சன்னாவின் வீடு அயலில் உள்ளது என்று எனது சகோதரி பதிலளித்தார். அவர் பொலிஸாரால் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றில் வழக்கு நடந்து கொண்டிருக்கின்றது. அதனால் சன்னா எங்கள் வீட்டுக்கும் வருவதில்லை. அவர்களுடைய குடும்பத்தினருடனும் தொடர்புகளைப் பேணுவதில்லை என்று அவர்களிடம் எனது சகோதரி தெரிவித்தார்.

ஆனால் அதனை பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் ஏற்கவில்லை. சர்மிரனைக் கைது செய்ய முற்பட்டனர். அப்போது சர்மிரனின் குடும்பத்தினர் தற்போது இங்கில்லை. தாயார் கிளிநொச்சியில் வைத்தியசாலை ஒன்றில் கடமையாற்றுகிறார். அவர்கள் வந்ததும் நீங்கள் கைது செய்யுங்கள் என்றுகூறி எனது சகோதரி அலைபேசியை எடுத்தபோது, கைத்துப்பாக்கியைக் காட்டி அவரை அலைபேசி அழைப்பைத் துண்டிக்குமாறு கூறிய பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் சர்மிரனைக் கைவிலங்கிட்டுக் கைதுசெய்து சென்றனர்.

கைதுசெய்துகொண்டு செல்லும்போது, உங்கள் பிள்ளை வன்னியில் இருந்தவன். எங்களால் வழக்குப் போட முடியும் என்று கூறிச் சென்றனர் என்று எனது சகோதரி தெரிவித்தார். கடந்த திங்கட்கிழமை அவர் கைது செய்யப்பட்டபோதும், அதன் பின்னர் எந்தவித தகவலும் கிடைக்கவில்லை. அதனால் இது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப் பாண அலுவலகத்தில் முறையிட்டுள்ளோம் என்று சர்மிரனின் தாயார் தெரிவித்தார். (வ-4,8)

## கைதான...

பகுதியில்வைத்து பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். சில மணித்தியால விசாரணையின் பின்னர் அந்த மாணவனையும் அழைத்துக் கொண்டு கொக்குவில் பொற்பதியில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்ற பயங்கரவாத விசாரணைப் பிரிவினர், மாணவனின் வீட்டுக்குள்ளிருந்து 3 கூரிய ஆயுதங்களை மீட்டனர்.

மேலதிக விசாரணைகளுக்காக மாணவனைக் கொழும்புக்குக் கொண்டு செல்வதாக விசாரணைப் பிரிவினர் மாணவனின் பெற்றோருக்குக்கூறிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4,8)

## மரண அறிவித்தல்

### திருமதி அரவிந்தநாயகி சுப்பிரமணியம்



தோற்றம் 1947.10.31 மறைவு 2016.11.08

யாழ்ப்பாணம், கல்வியங்காடு, 3ஆம் கட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரவிந்தநாயகி சுப்பிரமணியம் 08.11.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானம் - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் திருமதி ஜெகதீசன் பேரின்பநாயகி(ஓய்வு பெற்ற நெசவு போதனாசிரியர்), உதயகுமாரி(ஓய்வு பெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர் வடமாகாணம்), ஜெயகுமாரி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுகந்தி(நோர்வே), புஸ்பகாந்தி(லண்டன்), சதீசன்(பிரான்ஸ்) காலஞ்சென்ற பிரதீபன் மற்றும் மயூரன்(பிரான்ஸ்), ஜனார்த்தனி (முகாமைத்துவ உதவியாளர், யாழ்மாநகரசபை), நிருபா சிற்சபேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கனகசுந்தரம், கருணாகரன், தவேந்திராதேவி, விஜிதா, அகிலன்(திட்டமிடல் உத்தியோகத்தர் - ஆளுநர் அலுவலகம்), மோகனதாஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் டனுசன், சரண்யா, சயானா, சாருகன், சஞ்சய், பிரதீபா, அகல்யா, கிசாந், அதர்வ, அஜய், ஆதவ், அக்சயன், கரிகேஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10 மணிக்கு செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் கட்டை -
கட்டைப்பிராய்,
கல்வியங்காடு.

(J 5995)
(14.18.21)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மகுடம் சூடியது யங்ஹென்றிஸ் மைக்கலின் கால்பந்தாட்டத்தில்

யாழ்ப்பாணம், நவ. 10
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீ கரித்துள்ளது.
மைக்கல் வி.கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து றோயல் அணி மோதியது. முதல் பாதியின் 9 ஆவது நிமிடத்தில் றோயல் அணி வீரர் கஜகோபன் தனக்குக் கிடைத்த வாய்ப்பைக் சரியாகப் பயன்படுத்தி முதல் கோலைப் பதிவுசெய்தார். அதுவே முதல் பாதியின் ஒரே கோலுமாக அமைந்தது.
இடைவேளையின் பின்னர் ஆட்டம் ஆரம்பமானதும் இளவாலை யங்ஹென்றிஸ் அணியின் ஆதிக்கம் மேலோங்கியது. 33 ஆவது நிமிடத்தில் மதுசன், 41 ஆவது நிமிடத்தில் மகிபன், 44 ஆவது நிமிடத்தில் அனோஜன் என அடுத்தடுத்து கோல்களை அடுக்க றோயல் அணி நிலைகுலைந்தது. ஆட்டம் முடிவடைவதற்கு முன்னர் றோயல் அணி வீரர் கஜகோபன் பிறிதொரு கோலைப் பதிவுசெய்தார். இருப்பினும் முடிவில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. ஆட்டநாயகனாக யங்ஹென்றிஸ் அணியின் அனோஜன், தொடராட்ட நாயகனாக ஊறெழு றோயல் அணியின் கஜகோபன் ஆகியோர் தெரிவாகினர். (ம-108-23-422)

## துடுப்பாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், நவ. 10
உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தத்திட்டமிட்ட 6 வீரர்கள் பங்குபற்றும் துடுப்பாட்டத் தொடர் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் இடம்பெறவுள்ளது. தொடரில் கலந்துகொள்ள விரும்பும் அணிகள் ஏற்பாட்டுக் குழுவினரைத் தொடர்புகொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும். (ம-108)

## வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 10
அரச வர்த்தக திணைக்கள வலைப்பந்தாட்டச் சங்கம், மன்னார் மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் மற்றும் மன்னார் மாவட்ட விளையாட்டுப் பிரிவு இணைந்து நடத்தத்திட்டமிட்ட தேசியமட்ட வலைப்பந்தாட்டத் தொடர் இன்று ஆரம்பமாகிறது. ஆரம்ப நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலர் எம்.வை.எஸ். தேசப்பிரிய கலந்துகொள்ளவுள்ளார். (ம-23)

## கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாணம், நவ. 10
கரவெட்டி பிரதேச செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலொன்று கரவெட்டி பிரதேச செயலக மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.
கரவெட்டி பிரதேச செயலகமும் சிவன் அறக்கட்டளையும் இணைந்து நடத்தும் குறித்த கலந்துரையாடலில் கழகங்களின் எதிர்கால வளர்ச்சி மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது. ஒவ்வொரு கழகத்தையும் சேர்ந்த தலைவர் மற்றும் செயலாளரை கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-108)



## உடுப்பிட்டி நவஜீவன்ஸ் சம்பியன்

அச்சுவேலி யுத் கழகம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் 'பி' பிரிவில் சம்பியனானது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி.
யுத் வி.கழக கரப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகமும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. ஐந்து செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் இரு செற்களையும் 25:22, 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நவஜீவன்ஸ் அணி கைப்பற்றியது. மூன்றாவது செற்றை 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது வளர்மதி. சரிவில் இருந்து மீண்டு நான் காவது செற்றை 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப் பற்றியது நவஜீவன்ஸ். முடிவில் அந்த அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று தொட ரைக் கைப்பற்றியது.
வெற்றிபெற்ற அணிகளுக்கான கிண்ணங்களை முதன்மைவிருந்தினராக கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்வழங்கினார். (ம-422-23-108)

## வீனஸை வீழ்த்தியது இளைஞர்

யாழ்ப்பாணம், நவ. 10
சுன்னாகம் றோட்டறிக் கழகமும் தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் வீனஸை 9 ஓட்டங்களால் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது கொம்பந்தறை இளைஞர் விளையாட்டுக் கழகம்.
நாவலர் விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொம்பந்தறை இளைஞர் அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக லவன் 26 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் நிதன் 4 இலக்குகளையும் ராஜா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
65 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய வீனஸ் அணி 8 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப் பிடித்த போதிலும் 55 ஓட்டங்களையே பெற்றது. இதனையடுத்து 9 ஓட்டங்களால் வெற்றிபெற்றது இளைஞர் அணி. (ம-108)



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று பிரதேச செயலகங்களின் கீழ் இயங்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராசாவின் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ம-108)

## ஆவரங்கால் இந்து இளைஞர் கரப்பந்தாட்டத்தில் கலக்கல்

யாழ்ப்பாணம், நவ. 10
அச்சுவேலி யுத் விளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் ஏ பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
யுத் வி.கழக கரப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் இளவாலை மத்திய அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதியது. ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரு செற்களையும் முறையே 25:20, 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது இந்து இளைஞர். 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மூன்றாவது செற்றைக் கைப்பற்றியது இளவாலை மத்தி. இதனால் இந்து இளைஞரின் நேர் செற் வெற்றிக் கனவு தகர்க்கப்பட்டது. சரிவிலிருந்து மீண்டு நான்காவது செற்றை 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிய இந்து இளைஞர் அணி 3:1 என்ற செற் கணக்கில் சம்பியனானது.
வெற்றிபெற்ற அணிகளுக்கான கிண்ணங்களை முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வழங்கினார். (ம-23-108-422)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிக்கலில் பொலார்ட்

தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் உள்ளூர் ரி-20 தொடரில் மேற்கிந்தியத் தீவுகளின் சகலதுறை வீரரான பொலார்ட் களமிறங்குவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் உள்ளூர் தொடரில் கேப் கோப்ராஸ் அணிக்காக விளையாட பொலார்ட் ஒப்பந்தமாகியிருந்தார். மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை, தனது வீரர் ஒருவர் வேறு நாடுகளின் கழகமட்ட கிரிக்கெட் தொடர்களில் விளையாட வேண்டுமாயின் அவர்களுக்கு வழங்கப்படும் ஒப்பந்தத் தொகையில் 20 சதவீதத்தை தனக்கு இலாபமாகப் பெறுகிறது. இந்த நிபந்தனைக்கு தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை உடன்படவில்லை. இதன் கரணமாகவே குறித்த தொடரில் பொலார்ட் இடம்பெறுவதில் சிக்கல்கள் எழுந்துள்ளன.

பன்னாட்டு ஆட்டங்களில் விளையாடும் வீரர்கள் ஏனைய நாடுகளின் கழக மட்டப் போட்டிகளில் விளையாட வேண்டுமாயின், தனது நாட்டுக் கிரிக்கெட் சபையின் அனுமதிச் சான்றிதழைப் பெறவேண்டியது அவசியமானது என்பது குறிப்பிடத் தக்கது. (ம)

# இந்தியத் தொடருடன் குக் பதவி விலகல்?

நடைபெற்று வரும் இந்தியாவுக்கு எதிரான தொடருடன் இங்கிலாந்து அணியின் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகுவது தொடர்பான சமிக்ஞையை வெளிப்படுத்தினார் குக்.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடர், ராஜ்கோட்டில் நேற்று ஆரம்பமானது. இந்தத் தொடருக்கு முதல் நாளில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே குக் இவ்வாறு தெரிவித்தார்.

ஆழ் மனதில், எவ்வளவு காலம் நான் நீடிப்பேன் என்பது எனக்குத் தெரியவில்லை. அது, இரண்டு மாதங்களாக இருக்கலாம், ஓராண்டாக இருக்கலாம். தனியே ஒரு துடுப்பாட்ட வீரராக ஆட்டங்களில் பங்குபற்றும் நாளை எதிர்பார்த்திருக்கிறேன். அது நடக்குமாயின், முதலாவது ஸ்லிப்பில் நின்றுகொண்டு, அணித்தலைவராக யார் இருக்கிறார்களோ, அவருக்கு ஆலோசனைகளை வழங்குவேன். 2010ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்து அணியின் தலைமைப் பொறுப்பைச் சுமந்து வந்துள்ளேன். இவ்வளவு நீண்ட காலத்துக்கு, என்னால் அணித்தலைவராகச் செயற்பட முயன்றமை குறித்துத் திருப்தியடைகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தத் தொடரின் பின்னர், தலைமைப் பதவியிலிருந்து விலகுவதாக அவர் நேரடியாகத் தெரிவிக்காத போதிலும், முக்கியமான தொடருக்கு முன்னர் அவர் வெளியிட்டுள்ள கருத்து, இந்தத் தொடருக்குப் பின்னர் அவர் பதவி விலகுவதற்கான சமிக்ஞையாகவே கருதப்படுகிறது.

31 வயதான குக், இதுவரை 135 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியுள்ளதுடன், 54 ஆட்டங்களில் தலைவராகச் செயற்பட்டுள்ளார். (ம)







அமெரிக்காவின் லொஸ் வெகாஸ் நகரில் கடந்த சனிக்கிழமை, நடைபெற்ற உலக குத்துச்சண்டைப் போட்டியில், 27 வயதான அமெரிக்க வீரர் ஜெர்சி வர்காரஸை வீழ்த்தி உலகச் சம்பியனானார் பிலிப்பைன்ஸ் வீரர் மேனி பக்கியோ. நேற்றுமுன்தினம் தாயகம் திரும்பிய அவருக்கு பிலிப்பைன்ஸ் விமான நிலையத்தில் வைத்து மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது. (ம)

# கேரத் சாதனை

தான் விளையாடிய அனைத்து அணிகளுடனும் ஐந்து இலக்குகளைக் கைப்பற்றிய மூன்றாவது பந்துவீச்சாளர் என்ற சாதனையைப் படைத்தார் கேரத்.

இலங்கை, சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான இரண்டு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின், இரண்டாவது ஆட்டம் ஹராரேயில் நடைபெற்று வருகிறது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை சகல இலக்குகளையும் இழந்து 504 ஓட்டங்களைச் சேர்த்தது. பதிலுக்குக் களமிறங்கிய சிம்பாப்வே 272 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. கேரத் 5 இலக்குகளைக் கைப்பற்றினார். இதன்மூலம் தான் களமிறங்கிய அனைத்து அணிகளுடனும் அவர் 5 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். இதற்கு முன்னர் இந்தச் சாதனையை தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்ரெய்ன், இலங்கை அணியின் சுழல் ஜாம்பவான் முத்தையா முரளிதரன் ஆகியோர் படைத்திருந்தனர். (ம)



# கால்பந்து வரலாறு கண்ட சிறந்த வீரர் ரொனால்டோ

## ஏஸில் பெருமிதம்

கால்பந்தாட்ட வரலாறு கண்ட ஆகச் சிறந்த வீரர்களில் ரொனால்டோவும் ஒருவர் என புகழ்ந்து தள்ளியுள்ளார் ஜேர்மன் தேசிய வீரரான ஏஸில்.

ரொனால்டோ ஓர் அற்புதமான வீரர். உலகின் ஆகச் சிறந்த கால்பந்தாட்ட வீரர்களில் அவருக்கு தனியான இடமுண்டு. கால்பந்து வரலாறு கண்ட அதிசிறந்த வீரர்களில் அவரும் ஒருவர். அவருடன் இணைந்து 2010ஆம் ஆண்டு தொடக்கம் 2013ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியென மூன்று வருட காலங்கள் விளையாடியுள்ளேன். அந்த அனுபவம் விலைமதிப்பற்றது. ஒரு ஜாம்பவான் என அவர் தன்னைக் காட்டிக் கொள்வதில்லை. அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. அறிமுக வீரர்களுடனும் இளம் வீரர்களுடனும் மிகவும் சாதாரணமாகப் பழகுவார். அவர் கடினமான பயிற்சிகளை மேற்கொள்கிறார். உடை மாற்றும் அறைக்கும் முதலாவதாகச் செல்லும் அவரே இறுதியாக வீடு செல்பவராகவும் உள்ளார் என ஏஸில் மேலும் புகழ்ந்து தள்ளியுள்ளார். (ம)




# ஆஸியின் பயிற்சியாளரானார் களத்தடுப்பு மன்னன் பிரட் ஹடின்

ஆஸ்திரேலிய அணியின் பயிற்சியாளர் குழாமில் அந்த அணியின் முன்னாள் வீரர் பிரட் ஹடின் சேர்க்கப்பட்டார்.

ஆஸ்திரேலியா, நியூசிலாந்து அணிகளுக்கு இடையே அடுத்த வருடம் ஆரம்பத்தில் சப்பல் - ஹட்லி கிண்ணத்துக்கான தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியின் பயிற்றுவிப்புக் குழாமிலேயே அந்த அணியின் முன்னாள் இலக்குக் காப்பாளரும் களத்தடுப்பு மன்னர் என்று வர்ணிக்கப்படுபவருமான ஹடின் சேர்க்கப் பட்டார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிடில் விலகல்

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இரண்டாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளரான சிடில் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டது.
மூன்று ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக தென்னாபிரிக்க அணி ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளது. அண்மையில் முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றது. இரண்டாவது ஆட்டம் நாளைமறுதினம் நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்துக்கான வலைப்பயிற்சியின் போது சிடிலுக்குக் காயமேற்பட்டதால் இரண்டாவது டெஸ்ட்டிலிருந்து சிடில் நீக்கப்பட்டார். பதில் வீரராக மென்னி சேர்க்கப்பட்டார். (ம)





# வெற்றிக்கான அடித்தளத்தை பலமாக அமைத்தது இலங்கை

சிம்பாப்வேக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நான்காம் நாளான நேற்றைய நிலவரத்தின் படி இலங்கை அணி வெற்றிபெறுவதற்கான அடித்தளத்தை பலமாக அமைத்தது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 504 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக தனஞ்சய சில்வா 127 ஓட்டங்களையும், குணரத்ன 116 ஓட்டங்களையும், தரங்க 79 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் திரிபானொ, கிரீமர் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், மசகட்சா இரு இலக்குகளையும், மொபு, வோலர் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்குக் களமிறங்கிய சிம்பாப்வே 272 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக சறி 80 ஓட்டங்களையும், எர்வின் 64 ஓட்டங்களையும், வில்லியம்ஸ் 58 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கேரத் 5 இலக்குகளையும், டில்ருவான் பெரேரா 3 இலக்குகளையும், லக்மல் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
232 ஓட்டங்களுடன் இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய இலங்கை மூன்றாம் நாள் முடிவில் 102-4 என்ற நிலையில் இருந்தது. சில்வா, மெண்டிஸ், தரங்க, தனஞ்சய டி சில்வா ஆகியோர் ஒற்றை இலக்கங்களுடனும் பதின்மத்துடனும் பவிலியன் திரும்பினர். கருணாரத்ன 54 ஓட்டங்களுடனும், குணரத்ன 6 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். அணியின் ஓட்டம் 153 ஆக இருந்த போது ஆட்டமிழந்தார் குணரத்ன. கருணாரத்ன தொடர்ந்தும் பதற்றமல்லாத ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் தொடர்ந்தும் சில பவுண்டரிகளைப் பதிவுசெய்தார். 88 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டமிழந்தார். அதிரடியாக விளையாடி அரைச்சதம் கடந்தார் குசல் பெரேரா. அவர் 62 ஓட்டங்களைப் (69 பந்துகளில்) பெற்றிருந்த போது ஆட்டமிழந்தார். இலங்கை அணி 258-9 என்ற நிலையில் இருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்தியது.
சிம்பாப்வேக்கு இலக்காக 491 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன. நேற்றை நாள் முடிவில் சிம்பாப்வே 180-7 என்றுள்ளது. எர்வின் 65 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். கேரத் மீண்டும் ஒரு தடவை 5 இலக்குகளைக் கைப்பற்றினார். (ம)

# ரூட், அலி அபாரம் இங்கி. வலு நிலை

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாளான நேற்றையதினம் இங்கிலாந்து அணி சிறப்பான போராட்டக் குணத்தை வெளிப்படுத்தியது.
ஐந்து ஆட்டங்களைக் கொண்ட நீண்ட டெஸ்ட் தொடரில் விளையாட இங்கிலாந்து இந்தியாவுக்குச் சென்றுள்ளது. முதலாவது ஆட்டம் ராஜ்கோட் மைதானத்தில் நேற்று ஆரம்பமானது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அலிஸ்டர் குக் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். முதல் பந்துப்பரிமாற்றத்தை வீசினார் யாதேவ். மூன்றாவது பந்திலேயே குக் ஆட்டமிழந்திருக்க வேண்டியவர். பிடியெடுப்பைத் தவறவிட்டார் ரகானே. கமீட் கொடுத்த வாய்ப்பைத் தவறவிட்டார் கோக்லி. இங்கிலாந்து 47 ஓட்டங்களைப் பெற்றிருந்த பொழுது ஜடேயாவின் சுழலில் குக் சிக்கினார். கமீட்டை வீழ்த்தினார் அஸ்வின். டக்லெட் வந்த வேகத்தில் பவிலியன் திரும்பினார். அவர் ஆட்டமிழந்த போது இங்கிலாந்து 102-3 என்ற நிலையில் இருந்தது.



ரூட், மொயின் அலி இணைந்து அணியைக் கட்டியெழுப்பினர். நீண்ட இணைப்பாட்டம் அரங்கேறியது. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடந்தனர். ஜடேயா, அஸ்வின் இருவரதும் சுழலை ரூட், மொயின் அலி இருவரும் இணைந்து சிறப்பாகவே சமாளித்தனர். சதம் கடந்தார் ரூட். இந்தச் சதமே ஆசிய மண்ணில் அவரது முதலாவது சதமாகும். இணைப்பாட்டமாக 179 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் 124 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரூட். நாள் முடிவில் இங்கிலாந்து 4 இலக்குகள் இழப்புக்கு 311 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. மொயின் அலி 99 ஓட்டங்களுடனும் ஸ்ரோக்ஸ் 19 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.
இந்திய ஆடுகளங்களில் இங்கிலாந்து தடுமாறும் என்று பொதுவான கருத்துக்கணிப்புக்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் அந்த அணி சிறந்த தொடக்கம் கண்டுள்ளமை பலராலும் பாராட்டப்படுகிறது. (ம)

# ஐ.பி.எல். ஏலம் பெப்ரவரி மாதம்

2017 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள நிலையில், குறித்த தொடருக்கான ஏலம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளது என ஐ.பி.எல். ஆட்சி மன்ற குழுவின் தலைவர் ராஜீவ் சுக்லா தெரிவித்தார்.
10 ஆவது ஐ.பி.எல். தொடரை ஏப்ரல் 5 ஆம் திகதி தொடங்குவதற்கு திட்மிட்டுள்ளோம். குறித்த தொடருக்கான வீரர்களின் ஏலம் பெங்களூரில் பெப்ரவரி 4 ஆம் திகதி நடைபெறும் என சுக்லா தெரிவித்தார். (ம)

கணினி திருத்தம்
உங்களது வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம். Computer Repair
GUNA BEST PC 077 9086737
லப்டொப் கணினிகள் திருத்தம் விற்பனை பாவித்த கணினிகள் வாங்குதல்
50/12, Hospital Road Jaffna. 522, Manipay Road Jaffna.

வீடு விலைக்குத் தேவை
ஒரு பரப்பு / 1 1/2 பரப்புக் காணியில் அமைந்த வடக்கு வாசல் வீடு விலைக்குத் தேவை.
கைலாசப்பிள்ளையார் கோயிலடி, நாவலர் றோட், கொக்குவில், பிரம்படி, ஆடியபாதம் றோட், திருநெல்வேலி பகுதிகள் விரும்பத்தக்கது.
077 505 3862

ஆங்கிலம் 3 மாத பயிற்சி நெறி
3 மாதங்களில் தமிழ்போல ஆங்கிலம் பேச...
இம்முறை A/L எழுதியோர், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர், இளைஞர் யுவதிகள் இணையமுடியும்!
சனி, ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பம்: 12.11.2016
பிரிவு1. காலை 08-10 பிரிவு 3. மாலை 01-03
பிரிவு2. காலை 10-12 பிரிவு 4. மாலை 03-05
ஆங்கிலத்தில் ஒரெழுத்து தெரியாதவர்களும் கூட 3 மாதங்களிலேயே சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்!
பாடப்புத்தகங்கள் Video DVD என்பன இலவசம்.
பயிற்சிநெறி முடிவில் "Diploma Certificate"
SAAMSON Expert in Language Training
179, ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர். 077 1570 486 021 320 3313



கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் விளையாட்டு அலகு திறப்பு விழாவும் விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வும் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. முதன்மை விருந்தினராக வடமாகாண சபை எதிர்க்கட்சி தலைவர் தவராசா கலந்துகொண்டார். (ம-422)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org